Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර

பக்கம் 20 ரூபா 14/00

டிச. 15-21, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 490



## அதிகாரம் பெற்றுவிட்ட ஜனாதிபதி ஆட்சிமாற்றம் அடுத்தபடி?

## ஹக்கீமின் நிலை?



கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## அச்சம் தவிர்

"ஆன்மாவினுடைய இரகசியங்களை அறிந்து விடுதலை பெற்று பிறப்பிறப்பின் மர்மத்தை அறிய வேண்டுமானால், அச்சமற்ற சிந்தனையோடு மரணத்தின் வாயிலும் புக வேண்டும். அச்சமே மரணம். நீ அச்சத்திற்கப்பால் போக வேண்டும். இன்று முதல் அச்சமற்றிரு"

"நீ வீடு பெறும் பொருட்டும், பிறருடைய நலத்துக்காகவும் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிரு. எலும்பும் இறைச்சியும் பொருத்திய இந்தச் சுமையைத் தூக்கிக் கொண்டு திரிவதனால் என்ன பயன்?"

"வேத வேதாந்தங்களை அறிந்தவர்களாய், பிரம்ம ஞானத்தை உடையவர்களாய், அச்சமின்மைக்கு அப்பால் மற்றவர்களை வழிநடத்தக் கூடியவர்களே குரு எனப்படுவார்கள்"

-விவேகானந்தரின் ஞானதீபம்...சம்பாசனைகள்.

சோமேஷ்வரன்



## உண்மைச் செல்வம்

இயேசுவில் அன்புமிக்க சகோதரர்களே!

"மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்காதீர்கள். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும்; திருடரும் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள்; அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை.; திருடனும் கன்னமிட்டுத் திருடுவதில்லை"

"(மத்தேயு 6:19)

மண்ணுலகில் வாழும் மனிதர்களாகிய நாம் செல்வம் சேர்ப்பதில், மிகுந்த வெறித்தனத்துடன் செயற்படுகிறோம், ஆனால், இறைவனின் சித்தப்படி இவ்வுலக செல்வங்கள் அனைத்தும் அழிந்துவிடும். என்றும் அழியாத செல்வமாக நம்மை வாழ வைப்பது செபமே!. ஆகவே செல்வம் சேர்ப்பதில் அக்கறை காட்டும் நாம் எமது முடிவில்லா வாழ்வின் விண்ணுலக செல்வத்தை அடைய இன்றே இறைவனை நோக்கிச் செபிக்க நம்மைத் தயாராக்கிக் கொள்வோம்.

"உள்ளம் கலங்க வேண்டாம்  
நீ தனியாய் இல்லை  
நான் உன்னுள் நிலைத்திருக்கிறேன்"  
என்று எமை அழைக்கும் விண்ணகத் தந்தையை  
நோக்கி எமது வாழ்க்கைப் பயணத்தைத்  
தொடருவோம்.

ஆர் பிரம்மியா, வெள்ளவத்தை.

## சமாதானம் தர்மமாகும்

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபு ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள்.

மனிதர்களின் (உடலில் உள்ள) ஒவ்வொரு மூட்டுக்கும் சூரியன் உதயமாகும் ஒவ்வொரு நாளிலும் தர்மம் செய்ய வேண்டியுள்ளது. இரு மனிதர்களுக்கு மத்தியில் நீர் சமாதானம் செய்து வைப்பது தர்மமாகும். ஒரு மனிதனுக்கு அவரது வாகனத்தின் விசயத்தில் உதவுவது அவரை நீர் வாகனத்தில் ஏற்றி விடுவது அல்லது அவ் வாகனத்தின் மீது அவரது பொருளை ஏற்றி விடுவது தர்மமாகும். நல்ல இனிய சொல் கூறுவது தர்மமாகும். தொழுகையின் பக்கம் (மஸ்ஜிதுக்கு) நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டும் தர்மமாகும். பாதையை விட்டு இடமளிக்கும் (முள் கல் போன்ற) பொருட்களை அகற்றுவது தர்மமாகும்.

(புகாரி- முஸ்லிம்)

கே.எஸ். அப்துல் றசூல், நிந்தவூர்.

## கவிதைப் போட்டி இல.487

இடம் உள்ள வரை இடம் பிடித் துள்ள வியக்க வைத்த கவிதைகள்



பரிசுக்குரிய கவிதை

### பிரிவு

தொலைப்பதற்கே வாழ்வு பெற்றாய்!  
துளைப்பதற்கே உடலும் பெற்றாய்!  
முளைப்பதற்கே விதைக்கப்பட்டாய்!  
தளைப்பதற்கு (தங்கை) துணையிருந்தும்  
தவிக்கின்றேனே அகதியாக!  
பிழைப்பதற்கு வழியிருந்தும்!  
பிதற்றுகின்றேன் பிரிவை எண்ணி!

நா. ஜெயபாலன், பபிலை.

### சுதந்திரக் காற்றாகி!

அழுவதற்கு இது அஸ்தமனமல்ல  
விடுதலைப் பயிர்களின் விதைப்பு!  
விருட்சங்கள் பலவற்றின் உயிர்ப்பு!  
எழுந்திரு தாயே- உன்  
மகன் இங்கே  
காதோடு சொல்கிறான்-நாளை  
சுதந்திரக் காற்றாகி உன்  
சோகங்களைத் தீர்ப்பானென்று!

டொ.மேலின் மரிற்றா, யாழ்ப்பாணம்.

### தாயகத்தின் விடிவிற்காய்

ஈரைந்து மாதங்கள்  
என் வயிற்றறையில் மகனே!  
ஈழத்தின் விடிவிற்காய்  
கல்லறையில் இன்று நீ!  
பாரிங்கு போற்றிடவே  
பாசமிகு தங்கையையும்  
பயப்படாமல் அனுப்புகிறேன்- தமிழ்  
தாயகத்தின் விடிவிற்காய்.

ரா.தமிழவாணன், இரத்தினபுரி.

### கொடுமை!

உன்னை நினைத்தால்,  
வருகுதையா அழுகை! -மகனே  
நீ இல்லாமல்,  
எனக்கேதையா வலிமை!  
பூமாலை சுமக்க வேண்டிய  
உன் சகோதரி,  
தோளில் துப்பாக்கி  
சுமக்கும் கொடுமை பாரய்யா!

சு.சுபா, பெயாவெல்.

### ஆறுதல் வார்த்தை

தூங்கிவிட்டான் உன் மகன் என  
துயரம் கொள்ளாதே  
அவன் தூக்கத்தினால்தான் இன்று  
தமிழினமே விழித்துள்ளது  
இப்போதல்லவா மூத்தி பெற்றது  
உன் தாய்மை.

சு.சுமனோஜ், திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.490



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி: 21.12.2002

கவிதைப் போட்டி இல.490  
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஏன் எழுப்புகிறாய்?

ஏய் பேதைப் பெண்ணே!  
நீண்ட கனவுகளைச் சுமக்கும்  
உன் வீரமைந்தனை  
ஏன் எழுப்புகிறாய்?  
தேசத்தின் விடியல்வரை  
அவன் தூக்கம் தொடரட்டுமே!

சுஜித்தா -கந்தர்மடம்.

### அன்னையின் அவலம்

அன்புத் தந்தை காலன் அழைப்பிலே  
அல்லலுற்றோம் ஆதரிக்க யாருமின்றி  
அன்னை மண் மீட்கவந்து அமைதியானாய்  
அருகிலே தங்கை உந்தன் பணிதொடர  
அன்னை நான் இங்கே தனிமரமாய்...

துவாசினி, மீசாலை.

### கண்ணீரின் நினைவுகள்

நீ மண்ணில்  
மடி சாய்ந்தும்  
மரணிக்காத உன்  
நினைவலைகளை  
கனவுகளைச்  
சுமக்கும் விழிகளில்  
கண்ணீர் குளம் கட்டி  
கதறும் இந்த  
உள்ளங்களுக்கு  
ஆறுதல் தான் என்ன?

துரைராஜா, பரிமளாதேவி,கலஹா.

### மண்ணுக்காக...!

மகனே நீ பிறந்தாய்  
மண்ணுக்காக...!  
மகனே நீ வாழ்ந்தாய்  
மண்ணுக்காக...!  
மகனே நீ மடிந்தாய்  
மண்ணுக்காக...!  
மகனே நீ...  
மீண்டும் பிறப்பாய்  
மண்ணுக்காக...!

எஸ்.தமிழாம்பிகை ஜெகன், நானாட்டான்.

### தமிழ்த்தாய்

மகனே மாவீரா!  
தியாகத்தின் தீபமே  
உன்னை இழந்தது இழப்பல்ல  
மகளை இழப்பதும் இழப்பல்ல  
உன்னை எதற்காக இழந்தேனோ  
அதை இழந்தாலே பேரிழப்பு.

ம. திருவரசுராசா, வவுனியா.

### என்றுமே...

வீரத்தின் சாவில் ஈரங்கள் காய்வதில்லை  
வீழ்ச்சியிலும் தோல்வியிலும் விடுதலை சோரவில்லை  
காலங்கள் எழுதும் யுத்த சாரல்கள் மீள்வதில்லை  
கல்லறையின் பூக்கள் காவியத்தில் அழிவதில்லை.


தெ.லோஜனா, கொழும்பு-6.

### கண்ணீர்...

உதிர்ந்த மொட்டுக்காக  
உருகும் மலர் இது

ஜுனைட் நிஸாத், மூதூர்-5.

# வாசக[ர்] சாலை



என் உள்ளம் கவர்ந்த இனிய முரசே! நீ தாங்கிவரும் 'கவிதைப் போட்டி', அரசியல் கட்டுரைகள், 'தகவல் பெட்டி', 'ஆன்மீகம்', 'சிந்தியா பதில்கள்', 'ஆறு மனமே ஆறு', 'அண்டை மண்டலத்திலிருந்து ஆகியவை வெரி வெரி சூப்பர். 'குறி வெச்சாச்சு' தொடர் விறுவிறுப்பாகச் சென்று கொண்டிருக்கிறது. குறுக்கெழுத்துப் போட்டியையும் இணைத்துக் கொண்டால் முரசு மென்மேலும் மெருகேறும் என்பதை வாசகர்கள் சார்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வாழ்க முரசு! வளர்க உன் பணி!

எம்.ஐ.எம். ச஼பி, அக்குராணை.

தமிழ் முரசே,  
நவம்பர் மாத 487வது  
தினமுரசில் வெளியான  
அனைத்து அம்சமும் சூப்பர்.  
அதிலும் நெட்டிலிருந்து  
காதில பூ கந்தசாமி, அதிரடி  
ஐயாத்துரை மிகவும்  
சூப்பராக இருந்தது. முரசின்  
ஆசிரிய குறிப்பும் ஐந்தாம்,  
பக்கத்தில் 'கிழக்கான்'  
எழுதிய விடயமும் மிகவும்  
நன்றாக இருந்தது. எனது  
அன்பு கலந்த வாழ்த்துக்கள்.  
முரசின் நீண்டகால  
அபிமான வாசகன்.

மா. ஈஸ்வரன், நெடுந்தீவு.

முதற்கண் தினமுரசு மென்மேலும் சிறப்பாக வளர எனது வாழ்த்துக்கள். அண்மையில் வெளியாகி இருந்த தினமுரசு வார இதழில் அன்பர் ஒருவர் வாசகர்சாலைப் பகுதி ஊடாக மடல் ஒன்று வரைந்திருந்தார். அந்த மடலின் சில வரிகள் நமது நாட்டின் உண்மை நிலைவரங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையில் எழுதப்பட்டவையோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. முரணான வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டிருந்தன. யதார்த்தத்தை நாமே புரிந்து கொள்ளவில்லை என்றால் மற்ற இனத்தவர் எப்படிப் புரிந்து கொள்வார்கள். இன்றைய கால கட்டத்தில் நீங்கள் மட்டுமல்ல உங்களைப் போன்று வேறு எவரும் இப்படியான அற்ப சிந்தனையில் அறிக்கை விடுவது நம் தலையில் நாமே மண்ணை அள்ளிப் போடும் நிலை போன்றது. நமது நாட்டில் நிரந்தர சமாதானம் இன்று வந்து விடும் நாளை வந்து விடும் என்று எதிர்பார்ப்பது நம்மை நாமே குறைத்துக் கொள்ளும் செயல் ஆகும். கடக்க வேண்டிய பாதைகள் இன்னும் நிறைய உள்ளது. ஏற்றம் இறக்கம் ஏற்பட்டாலும் அதை சாதகமாக்கி உரியவர்கள் சமாதானத் தீர்வை எட்ட முனையும் இவ்வேளையில் இவ்வாறான கருத்துக்களை நிறுத்தி நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

டோகா, கட்டாரில் இருந்து புங்குடுதீவு ஈசன்.

# உங்கள் பக்கம்

## கம்பளை புஸ்ஸல்லாவ பகுதியில் பெண்களுக்கு நடந்த அவலங்கள்

மலையகத்தில் பெண்கள் மீதான வல்லுறவுகள் நிறையவே நடந்தேறியுள்ளன. அதில் வெளிச்சத்திற்கு வந்தவை மிகக் குறைவு. மூடி மறைக்கப்பட்டவை அனேகம். அதில் புஸ்ஸல்லாவ நோர்த்டெல்டா என்ற தோட்டத்தில் நடந்த ஒரு சம்பவம் 15 வயதுடைய ஊமைப்பெண் ஒருவர் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு அவர் யாரிடமும் சொல்ல முடியாத நிலையில் கர்ப்பம் அடைந்துள்ளார். இது ஒரு காட்டு மிராண்டித்தனமான செயல். ஒரு இதயமற்ற வஞ்சகனால் வஞ்சிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் வாழ்க்கை பாழாய்ப் போயுள்ளது.

அடுத்து அதே பகுதியில் களுகல்ல என்ற தோட்டத்தில் அதே வயதையொத்த பெண் ஒருவர் கடத்தப்பட்டு காமவெறியர்களால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார். அடுத்து இதே பகுதியில் சோகம என்ற தோட்டத்தில் 15 வயது பெண் பலவந்தமாக கடத்தப்பட்டு வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார். இதையெல்லாம் விட மெல்றோட் தோட்டத்தில் ஒரு 13 வயது பாடசாலைச் சிறுமி பலவந்தமாகக் கடத்தப்பட்டு கல் நெஞ்சக்கார காமுகர்களினால் மோசம் போய் அவர் இப்போது ஒரு குழந்தைக்குத் தாயாகியுள்ளார். தற்பொழுது பள்ளி வாழ்க்கையும் இல்லை, சொந்த வாழ்க்கையும் இல்லை. இப்படி மலையகத்தில் அநியாயங்கள் பல நடந்தும் இதையெல்லாம் கேட்பதற்கு யாருமே இல்லை. தெரிந்தும் தெரியாதது போல் இருக்கிறார்கள். பொலிசுக்குப் போனால் அங்கு பணத்தைக் கொடுத்துச் சமாளித்துவிடுகிறார்கள்.

மேலும் இப் பகுதியிலே மதுபாவனை அதிகரித்து வருவதும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதற்கு ஏதுவாக அமைகின்றது. எனவே குறுகிய நேர ஆசைக்காக அடுத்தவரின் வாழ்வினை அழிக்கும் இது போன்ற செயற்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

நலன் விரும்பி.


மடல்கள் மற்றும்  
ஆக்கங்கள்- உட்பட சகல  
தொடர்புகளுக்கும்:  
தினமுரசு வாரமலர்,  
த.பெ.இல:-1772, கொழும்பு.  
தொலைபேசி: 074-514282  
தொலை நகல் (Fax):-074-513266  
ஈ-மெயில்: (E-mail):-  
murasu@dialogsl.net  
edmurasu@dialogsl.net


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# யுத்தத்தை ஏற்படுத்தியவர்களே சமாதானத்தையும் கொண்டுவருவார்களாயின் மகிழ்ச்சியடைவோம் – ஜனாதிபதி

**யு**த்தத்தை ஏற்படுத்தியவர்களே சமாதானத்தையும் கொண்டு வருவார்களாயின் நாம் மகிழ்ச்சியடைவோம் எனக் கூறியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இந்தச் சமாதானம் சரிவருமா என்று தன்னால் கூற முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் 8 ஆண்டு பதவி நிறைவைக் கொண்டாடும் முகமாக நிட்டம்புவையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய திருமதி குமாரதுங்க பிரதமரையும் அரசாங்கத்தையும் கடுமையாகச் சாடியிருக்கிறார்.

ஜனாதிபதியுடன் சண்டை பிடிக்கும், ஜனாபதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கும் பிரதமர் இருக்கும் ஒரே நாடு உலகத்தில் இலங்கை மாத்திரமே என்று கூறியிருக்கும் ஜனாதிபதி, தம்முடைய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 3 தடவைகள் தனக்கு எச்சரிக்கை விடுத்ததாகக் கூறியிருக்கிறார்.

எனது சிறகுகளை வெட்டப் போவதாக ஐ.தே.க.வினர் கூறுகிறார்கள். அந்தக் கட்சியினரேதான் எனக்குச் சிறகுகளைத் தந்தார்கள். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நானும் எதிர்க்கிறேன். பேச்சு நடத்தி ஒன்றுபட்டு அந்த ஆட்சிமுறையை மாற்றி அமைப்போம் என்றே கூறுகிறேன்.

எனது பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 96 பேர் உட்பட சுமார் 3000 கட்சித் தொண்டர்களை ஐ.தே.க. அரசு கைது செய்துள்ளது. அதுமட்டுமன்றி ஏசிப் பேசிக் கொண்டே ஒன்றாக வேலை செய்வோம் என்றும் கூறுகிறார்கள் என்று ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்திருக்கிறார். ■

## நெல்லியடியில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

**நெ**ல்லியடி ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு முன்னால் கடந்த செவ்வாய்க்கிழமை மனித உரிமைகள் தினத்தில் ஈ.பி.டி.பி. கட்சியினரை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்படி கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியோர் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் கலைக்கப்பட்டனர்.

டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் ஈ.பி.டி.பி.யினரை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்படி கோரி யாழ் குடாநாட்டில் திட்டமிட்ட ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே. இவை புலிகளின் பின்னணியில் நிகழ்த்தப்படுவதாக ஈ.பி.டி.பி.யினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

அத்துடன் தமது அரசியல் உரிமையை மறுதலிக்கும் ஜனநாயக விரோதக் கோரிக்கைக்குத் தாம் இணங்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாக ஈ.பி.டி.பி. யாழ் மாவட்டப் பொறுப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெகன் தெரிவித்துள்ளார்.

இவை புலிகளின் ஆதரவாளர்கள் சிலரைக் கொண்டு நடத்தப்படுகின்றன எனவும் பஸ்களில் பயணிக்கும் அப்பாவிப் பொதுமக்களைக் கட்டாயப்படுத்தி இறக்கி இத்தகைய ஆர்ப்பாட்டங்களுக்கு முன்தள்ளுகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டும் அவர் பெரும்பான்மையான யாழ் மக்களுக்கு இச்செயற்பாடுகளில் நாட்டமில்லையெனவும் கூறுகிறார். ■

## இந்திய வெளியுறவுச் செயலாளருடன் ரி.என்.எப். சந்திப்பு

**இ**லங்கைக்கு கடந்தவாரம் விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலாளர் கன்பல் சிபல் தமிழர் ஜனநாயக முன்னணி (ரி.என்.எப்.) என்ற பெயரில் அண்மையில் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்திச் செயற்படும் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்து சுமர் 1 1/2 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளில் ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படுவது பற்றியும், அரசியல் தீர்வு தொடர்பாக ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்த அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்க இந்தியா பங்காற்றுவது பற்றியும் ரி.என்.எப். தரப்பினரால் எடுத்துக் கூறப்பட்டது.

இதேவேளை கன்பல் சிபால் அவர்களைச் சந்திக்கக் கூட்டமைப்பினர் அழைக்கப்படவில்லை எனவும், அவரைச் சந்திக்கக் கூட்டமைப்புத் தலைவர் இரா சம்பந்தன் மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை எனவும் தெரியவருகிறது.

இது குறித்துக் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரன், இந்தியாவை தமிழ், சிங்கள சக்திகள் சில பயன்படுத்திக் கொள்ள முனைகின்றன என விசனம் தெரிவித்துள்ளார். ■

## டக்ளஸ் வரவேற்பு

**ச**மஷ்டி அமைப்பு மூலம் தீர்வு காணப் புலிகள் இணங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றுள்ளார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, எக்காலத்திலும் பிரிக்கப்பட முடியாத வடக்கு கிழக்கு ஒரு அலகு என்ற கோரிக்கைகளை முன்வைத்து ஈ.பி.டி.பி.யும் இதைத்தான் வலியுறுத்தி வந்தது எனவும் தந்தை செல்வா காலம் முதல் இதே விடயம் முன்வைக்கப்பட்டு வந்துள்ளது எனவும் அவர் பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை புலிகளின் இம்முடிவு உண்மையானதா என்பது உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். ■

## மகேஸ்வரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை?

**இ**ந்து விவகார அமைச்சர் மகேஸ்வரன் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் அவ்வமைச்சின் அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா மீது கடுமையான குற்றச்சாட்டுகளை ஒரே கட்சிக்குள் இருந்து கொண்டே தெரிவித்ததற்கு எதிராக அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனப் பிரதமருக்கு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனாவால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மூவர் சரண்

**ம**ட்டக்களப்பில் தொப்பிகெல காட்டுப்பகுதியில் உள்ள தராவிக்குளம் புலிகளின் முகாமிலிருந்து தப்பியோடிய 8 யுவதிகளில் மூவர் செங்கலடி இராணுவ முகாமில் சரணடைந்துள்ளனர். ஏனையோர் வாழைச்சேனைப் பக்கமாகச் சென்றுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இவர்கள் அனைவரும் பாடசாலை மாணவிகளாவர். ■

# நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க மருத்துவமனைகள் ஸ்தம்பிதம்

## ஏழை நோயாளிகள் பெரும் அவதி

**உ**தவி மருத்துவர்களின் தொழிற்சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை நிறுத்தத்தின் காரணமாக நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க வைத்திய சாலைகளின் பணிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் 15 நாட்களாகத் தொடரும் இந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் திங்கட்கிழமை சுகாதார அமைச்சருக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததனால் தமது வேலை நிறுத்தம் தொடரும் என உதவி மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

தற்போது பொரளை லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மாத்திரமே சேவைகள் முழுமையாக நடைபெறுகின்றன. தமது கோரிக்கைக்குச் சாதகமான முறையில் பதில் அளிக்காத பட்சத்தில் இந்தச் சேவையையும் வியாழக்கிழமையுடன் நிறுத்திக் கொள்ளப் போவதாகத் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

சில மருத்துவமனைகளில் தாதிமார் மூலம் மருந்துகள் விநியோகிக்க வைத்தியசாலை அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை தங்களது பணியை வேறு எவரைக் கொண்டும் செய்ய முற்பட்டால் அத்தியாவசிய பணிகளையும் நிறுத்தப் போவதாகத் தொழிற்சங்க அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

ஈ.சி.ஜி., ஸ்கான், எக்ஸ்ரே மற்றும் ஆய்வுகூட நடவடிக்கைகள் நாடுமுழுவதிலும் கடந்த இரு வாரமாக முற்று முழுதாக செயலிழந்துள்ளதனால் அவசர நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இதற்கிடையில் தங்களது பிரச்சனையைச் சுகாதார அமைச்சரினால் தீர்த்து வைக்க முடியாது எனத் தெரிவித்திருக்கும் உதவி மருத்துவர்கள் இது விடயத்தில் பிரதமரையும் ஜனாதிபதியையும் உடனடியாகத் தலையிடுமாறு கேட்டுள்ளனர்.

இதேவேளை புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்படுவது இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாகத் தாமதமடைவதால் நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் போலியோ, அம்மை, குக்கல் போன்ற நோய்கள் எதிர்காலத்தில் மீண்டும் தலைதூக்க வாய்ப்பிருப்பதாகச் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ■

## பரஸ்பரம் பதவி விலக்கிக் கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள்

**அ**மைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு நெருக்கமான சகாவாக விளங்கும் பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளராக நியமிக்கப்பட்டு 24 மணித்தியாலத்துக்குள் அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தற்போது இவரது இடத்திற்கு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பசீர் சேகுதாவூத்தின் நியமனத்திற்கு ஹக்கீம் தரப்புக்குள் இருந்தே கடும் எதிர்ப்புக் கிளம்பியதாலேயே அவர் உடனடியாகப் பதவி விலகினார் என்று முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தனது அரசியல் அதிஉயர் பீடத்தைக் கூட்டிய ரவூப் ஹக்கீம் அதிருப்திக் குழுவின் முக்கியஸ்தர்களான அதாவுல்லா, டாக்டர் ஹஃப்ரத்,உதுமா லெப்பை, சுபைர்தீன் ஆகியோர் கட்சிக்குள் வகித்த பதவிகளிலிருந்து அவர்களை விலக்கியிருக்கிறார்.

இவர்களுக்குப் பதிலாகப் புதியவர்கள் நியமிக்கப்பட்டதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மறுபுறம் தங்களுக்குச் சார்பானவர்களை ஒன்று கூட்டிய அதாவுல்லா குழுவினர் ஹக்கீமைக் கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கிவிட்டதாக அறிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க ரவூப் ஹக்கீம் மீது கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்கால தடை உத்தரவை அதே நீதிமன்றம் நீக்கியது தொடர்பில் நீதிமன்றத்தை விமர்சிக்கும் விதத்தில் திங்கள் அன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் அதாவுல்லா கருத்துத் தெரிவித்திருக்கிறார். ■

## புலிகளுக்கு நோர்வேயிடமிருந்து கிடைத்த அன்பளிப்பு

**பு**லிகளுக்கு நோர்வே அதி சக்தி வாய்ந்த ஒலிபரப்பு உபகரணங்களை வழங்கியுள்ளது.

எப்.எம். அலைவரிசைகளினூடாகப் பரந்தளவிலான ஒலிபரப்புச் சேவை ஒன்றை நடத்தக் கூடிய டிரான்ஸ்மீற்றர்கள், ஜெனரேற்றர், அன்ரனாக்கள், ஹெட்ஃபோன்கள் என வானொலி நிலையம் ஒன்றை நடத்துவதற்குத் தேவையான சகல சாதனங்களும் அடங்கிய 6 தொன் எடையுள்ள பொருட்களை நோர்வே கொழும்புத் துறைமுகத்தினூடாகத் தருவித்துப் புலிகளுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவற்றைச் சோதனையிட்ட சுங்க அதிகாரிகள் அவை குறிப்பிட்ட தொலைவிற்கு ஒலிபரப்பும் சக்தி வாய்ந்த வானொலிக்கான கருவிகள் என்பதை உறுதிசெய்தனர். கொழும்பிலிருந்து இந்த உபகரணங்கள் நோர்வேயின் உதவியுடனேயே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தப் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறிகளைச் சோதனையிட வேண்டாம் என்று பாதுகாப்புச் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதங்களைப் பொருட்களைக் கொண்டு சென்றவர்கள் எடுத்துச் சென்றனர்.

புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்புச் சேவையை விரிவுபடுத்துவதற்காகவே இந்தச் சாதனங்கள் தருவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

புலிகளின் வானொலிச் சேவைக்கான அனுமதிப்பத்திரம் பெறப்படாமலே இவ் வானொலி சாதனங்களை அவர்களுக்கு வழங்கியது எவ்வாறென்று எதிர்க்கட்சிகள் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, புலிகளின் குரல் வானொலிச் சேவைக்கான உத்தியோக பூர்வ அனுமதியை பெறும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ■

# முரசம்

## சமஷ்டித் தீர்வுக்கான அரிய வாய்ப்பு

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

போராட்ட வரலாற்றில் முதன் முதலாக புலிகள் தமிழீழம் தவிர்ந்த மற்றொரு தீர்வை ஏற்பதற்கான சம்மதத்தைத் தாமாகவே தெரிவித்திருக்கிறார்கள். கடந்த வார முற்பகுதியில் ரணில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் ஒஸ்லோவில் நடந்த மூன்றாம் சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின்போதே புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வொன்றையிட்டு அரசாங்கத்துடன் கலந்துரையாட முன்வருவதாக அறிவித்திருந்தார். முன்னரும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்போது புலிகள் அவ் ஒப்பந்தத்தை ஏற்றுக் கையெழுத்திட்டிருந்தாலும், இம் முறையே தாமாகத் தமிழீழத்துக்கு மாற்றான ஒரு தீர்வை முன்மொழிந்திருக்கிறார்கள். புலிகள் தலைவர் பிரபாகரனின் மாவீரர் உரையிலும் சமஷ்டித் தீர்வொன்றைத் தாம் பரிசீலிக்கத் தயாரெனக் கோடி காட்டியிருந்தார். தமிழ் மக்களுக்கு இச் சமஷ்டிக் கோரிக்கை புதிதல்ல, ஏனெனில் தமிழ் மக்களால் தந்தையென வர்ணக்கப்படும் தந்தை செல்வநாயமும்கூட சமஷ்டிக் கோரிக்கையையே முன்வைத்திருந்தார்.

ரிங்களத் தரப்பினருக்கும் இது ஒன்றும் தகாத சிந்தனையல்ல, ஏனெனில் சுதந்திர இலங்கையில் சுதேச சிந்தனையின் பிதாமகனாகக் கருதப்படும் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவே ஆரம்ப காலத்தில் சமஷ்டி ஆட்சிமுறையை முன்மொழிந்திருந்தார்.

இப்போது புலிகள் முன்வந்திருக்கும் இச் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு இன்றைய ரணில் அரசாங்கமும் உடன்பாடான மனோபாவத்தையே வெளிப்படுத்துவதுடன், பேச்சுவார்த்தையில் அரசாங்கத் தரப்புக்குத் தலைமை தாங்கும் அமைச்சர் பீரிஸ் இத்தகைய சமஷ்டி முறையின் அமைப்பு வடிவங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் மறுபுறத்திலுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்த வரை, அவர்களே 1995இலும் 1997இலும் சமஷ்டியைத் தழுவிய அல்லது ஒற்றையாட்சி முறையைக் கைவிட்ட தீர்வுத் திட்டங்களைத் தாமாகவே முன்வைத்திருந்தார்கள். இதேவேளை தமிழ்த் தரப்பில் ஒரு பகுதியினர் ஏற்கெனவே புலிகளின் வழிநடத்தலின் கீழ் செயலாற்றுவதால் அவர்கள் இச் சமஷ்டித் தீர்வுக்கு உடன்பாடானவர்களாகவே இருக்கிறார்கள். அதேவேளை புலிகளுக்கு மாற்றுத் தமிழ்த் தரப்பினராக இருக்கும் கட்சிகளும், வழிமுறைகளில் முரண்பாடு கண்டாலும் தீர்வைப் பொறுத்த வரை சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவானவர்களாகவே இருக்கிறார்கள். இவ் வகையில் பார்க்கும்போது இத்தகைய தீர்வுக்கு இணக்கம் காணக் கூடிய சாதக நிலை இலங்கை அரசியலில் முன்னெப்போதும் இல்லாததாக இப்போது நிலவுகிறது. ஜே.வி.பி.யினரும் தற்போது இது தொடர்பாகக் கூறிய கருத்தில் சமஷ்டி முறையை நிராகரிக்கவில்லை. அதனால் இவ்வரிய சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்தி, பேச்சுவார்த்தையைப் பக்குவமாகக் கையாண்டு, இயன்ற மட்டும் அனைத்துத் தரப்பையும் அரவணைத்துச் சமஷ்டி முறையொன்றை வகுப்பதில் வெற்றி கண்டு தமிழ் மக்களின் நீண்டகால இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுகொள்ள வேண்டும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அதிகாரம் பெற்றுவிட்ட ஜனாதிபதி! ஆட்சிமாற்றம் அடுத்தபடி?

நரன்

கடந்த டிசம்பர் 5ம் திகதியுடன் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் கரம் சேர்ந்துள்ளது.

இலங்கையின் இன்றைய யாப்பின்படி புதிய பாராளுமன்றம் ஒன்று அமைக்கப்பட்ட ஒரு வருடத்தின் பின் ஜனாதிபதிக்குப் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் உண்டு.

அதற்கு முன்னால்கூட ஜனாதிபதியால் நேரடியாகக் கலைக்க முடியாதாயினும் பாராளுமன்றம் கோரும் பட்சத்தில் அதைக் கலைக்க முடியும், அதேவேளை கோரியும்கூடக் கலைக்காதிருக்கவும் முடியும்.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேனென்றால் 19ம் திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற ரணில் அரசாங்கம் எடுத்த முயற்சி, உச்ச நீதிமன்றத்தின் ஜனாதிபதிக்குச் சாதகமான தீர்ப்பால் தோல்விகண்ட பின் அரசாங்க வட்டாரத்தில் தாமே பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலுக்குச் செல்வது பற்றியும் ஆராயப்பட்டது.

இப்படிச் சிந்திக்க வேண்டிய நிலை ரணில் அரசாங்கத்துக்கு ஏன் ஏற்பட்டதென்றால், அடுத்த ஓரிரு மாதங்களில் ஜனாதிபதிக்குப் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் கரம் சேர்ந்துவிடப்போவதால் அவரால் கலைக்கப்படாமல் தாமே கலைத்துத் தேர்தலில் வென்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவது உகந்ததாகப்பட்டது.

அதனால் தற்போதைய நிலையை விடக் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும், ஒருவேளை மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டால் சந்திரிகாவையே ஜனாதிபதிப் பதவியிலிருந்து நீக்கிவிடலாமென்றும், இல்லையெனினும் அவ் அரசாங்கத்தை மேலும் ஒருவருடம் ஜனாதிபதியால் கலைக்க முடியாததாக இருக்குமெனவும் எண்ணினர்.

ஆனால் அவ்வெண்ணத்தை அவர்கள் கைவிட வேண்டி ஏற்பட்டது.

காரணம் அதில் பொதிந்திருந்த ஒரு அபாயம்தான்.

அரசாங்கம் தானே தன்னைக் கலைத்துவிடும்படி ஜனாதிபதியிடம் கோரினால் அவர் அதைக் கட்டாயம் கலைத்துத்தான் ஆகவேண்டுமென்று ஒரு சட்டம் இல்லை.

அவரால் ஆளும் அரசாங்கத்தைப் பதவி நீக்கிவிட்டு வேறு தரப்பினர்களிடம் ஆட்சியமைக்கக் கோர முடியும்.

அது ஏதேனும் வழியில் சாத்தியப்பட்டுவிட்டால் ரணில் அரசாங்கத்துக்கு முதலுக்கே மோசம் தேடிய நிலையாகிவிடும்.

எனவே, அவ் விஷப் பரீட்சையைக் கைவிட்டுவிட்டது அரசாங்கம்.

இந் நிலையில் காலம் தானாகவே நகர்ந்து ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கரம் சேர்த்துவிட்டது.

ஜனாதிபதி ஏற்கெனவே தான் பாராளுமன்றத்தைக் கலைக்கப்போவதில்லை என்ற உறுதிமொழியைச் சபாநாயகரிடம் எழுத்து மூலம் கொடுத்திருந்தார்.

ஆனாலும் அதனை நம்புவதற்கில்லையென்ற குரலோடுதான் அவரின் அதிகாரச் சிறகுகளை வெட்டிச் சரிக்கும் 19ம் திருத்தச் சட்டத்தை அரசாங்கத் தரப்பினர் முன்னிறுத்தியிருந்தார்கள்.

அதனால் அவருக்கு தனது வாக்குறுதியைக் கடைப்பிடிக்காது விடுவதற்கான ஒரு நியாயப்பாட்டையும் இது தோற்றுவித்துக் கொடுத்துள்ளது.

இப்போது ஜனாதிபதிக்கு 'தேசிய நலன்' என்ற ஒரு வார்த்தையின் கீழ் பாராளுமன்றத்தை எந்நேரமும் கலைத்துவிட முடியும்.

ஆனால் அவ்வாறு கலைப்பதால் அவருக்கு இலாபமா நட்டமா விளையும் என்பதை மதிப்பிட வேண்டிய நிலையில் அவர் உள்ளார்.

இப்போதுள்ள நிலையில், அவ்வாறு கலைப்பதானது ஆட்சியாளர்கள் மீது ஒரு பரிதாப உணர்வலையைத் தோற்றுவித்துவிடலாம்.

அத்தோடு, இன்னமும் கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வியடையக் காரணமாகவிருந்த சூழ்நிலைகள் மாறவில்லை.

மாறாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள யுத்தமற்ற சூழ்நிலையின் நிம்மதியில் மக்கள் ஆழ்ந்திருக்கிறார்கள் - அது ஐ.தே.மு.வுக்கு வாய்ப்பான தேர்தல் நிலைமையாக உள்ளது.

மேலும், சிறுபான்மை மக்கள் மத்தியில் சமாதானத்துக்கு எதிரான முயற்சியாக இது மிக மும்மரமாகப் பிரசாரப்படுத்தப்படும்.

இக் காரணங்களால் தேர்தல் பெறுபேறு ஐ.தே.மு.வை இன்றைய நிலையைவிடப் பலப்படுத்திவிட்டால் அது பொ.ஐ.மு.வுக்கு தனது தலையில் தானே மண்ணள்ளிப் போட்டுக்கொண்டதாகிவிடும்.

அது மட்டுமன்றி, ஜனாதிபதிக்கும் உலைவைக்கக் கூடிய நிலைமைக்குச் சென்றுவிடும் வாய்ப்புகளும் உண்டு.

அதனால், தனக்குச் சாதகமான ஒரு புறச் சூழ்நிலையை, அல்லது தேசிய நலனுக்குக் குந்தகமானதாகக் கூறி மக்களை ஏற்க வைக்கக் கூடிய ஒரு வலுவான காரணத்தைக் காணும் வரை ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க அவசரம் காட்டமாட்டார்.

அவ்வாறான புறச் சூழ்நிலையென்பது புலிகளின் செயற்பாடுகள் குறித்த அரசாங்கத்தின் கையாலாகாத நிலைமை தெளிவாகும்போது உருவாகுமென பொ.ஐ.மு. நம்புகிறது.

இதற்கு வாய்ப்பாக, புலிகள் பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றை விஸ்தரித்தமை, வங்கிகளை ஸ்தாபித்துள்ளமை, உயர் பாதுகாப்பு வலயங்களில் இராணுவத்தைப் பின் வாங்கும் முடிவுகள் போன்ற விடயங்களை அது பயன்படுத்திக் கொள்ள விழையும்.

இவற்றுக்கான காலம் கனியும் வரை அரசாங்கத்தைக் கலைக்க ஜனாதிபதி அவசரப்பட மாட்டார்.

ஆனால், அதற்குப் புறம்பாக மற்றொரு பாரிய அரசியல் ராஜதந்திரத்தை மேற்கொள்வதில் பொ.ஐ.மு. இப்போது தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அதுதான், பாராளுமன்றத்தைக் கலைக்காமலே ஆட்சியை மாற்றிவிடும் முயற்சி.

இதுபற்றிய பொ.ஐ.மு.வின் திட்டங்கள் சிலகாலத்துக்கு முன்னர் வெளிப்பட்டபோது அதை அரசாங்கத் தரப்பினர் ஒரு சதித்திட்டம் அம்பலமாகிவிட்டதாகப் பிரசாரப்படுத்தினர்.

அதற்குப் பதிலளித்த பொ.ஐ.மு. பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம, நாம் அராசாங்கத்தை மாற்றியமைக்கத்தான் போகிறோம், இதுவொரு ஜனநாயக வழிமுறை எனத் தெரிவித்திருந்தார்.

இப்போது ஜனாதிபதி அதிகாரம் பெற்ற நிலையில், ஆட்சி மாற்றத்துக்கான முயற்சிகள் எதிர்த் தரப்பில் உத்வேகமடைந்துள்ளன.

அரசாங்கத்துடன் கூட்டமைத்துள்ள முஸ்லிம் காங்கிரஸ"க்குள் ஏற்பட்டுள்ள தலைமை முரண்பாடு அரசாங்கத்தின் பாராளுமன்றப் பலத்தை பலயீனப்படுத்தும் நிலைமை தோன்றியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் தாமே கட்சியின் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டவர்களென்றும் ஹக்கீமின் அமைச்சர் பதவியைப் பறிக்கும்படியும் அதற்குப் பதிலாகத் தமது தரப்பினரை நியமிக்கும்படியும் ஜனாதிபதியை வற்புறுத்துகின்றனர்.

இந் நிலைமையில் ஆட்சி மாற்றத்துக்கான கணக்குகள் பொ.ஐ.மு. தரப்பினரால் மிக முனைப்பாகப் போடப்படுகின்றன. ஆட்சி மாற்றம் செய்வதற்கு பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைக் கைப்பற்ற வேண்டும்.

> **ஜனாதிபதியின் பக்கத்திலுள்ள பலம் என்னவென்றால் அவரால் நினைத்த பொழுதில் பிரதமரை மாற்றி புதிய அமைச்சரவையை இப்போது நிறுவ முடியும் என்பதுதான்.**

அதற்கு குறைந்த பட்சம் 113 ஆசனங்கள் தேவை.

பொ.ஐ.மு.விற்கு பாராளுமன்றத்தில் 77ஆசனங்கள் உள்ளது. ஜே.வி.பி. ஆட்சி மாற்றத்துக்குத் துணைபோகும் என்பதால் அதன் கையிலுள்ள 15 ஆசனங்களையும் சேர்த்து 92 ஆகிறது. முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் சுமார் 6பேர் ஆதரவளிக்கும் பட்சத்தில் 98. மேலதிகமாக 15 ஆசனங்களே அவர்களுக்குத் தேவைப்படும்.

ஆட்சி மாற்றமொன்று நிச்சயமென்ற நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 4 ஆசனங்களும் ஈ.பி.டி.பி.யின் 2ஆசனம் மற்றும் புளொட்டின் 1 ஆசனமுமாக 7 ஆசனங்களைத் தம்பக்கம் திருப்பிக்கொள்ளலாமென அவர்கள் சிந்திக்கிறார்கள்.

அப்போது மொத்தம் 105 ஆசனங்களைச் சேர்த்துக்கொண்ட நிலையில் மேலதிகமாகத் தேவைப்படுவது 8 ஆசனங்களாகவே இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் அதிருப்தியாளர்கள் சிலரைத் தம்பக்கம் வென்றெடுத்து இந்தப் பற்றாக்குறையை நிரப்பிக் கொள்ளலாமெனத் திட்டமிடுகிறார்கள்.

இத் திட்டப்படி சகலதுமே நிறைவேறுமானால் ஆட்சி மாற்றமொன்று சாத்தியமாகலாம் என்பதை மறுதலிக்க முடியாது.

இதில் ஜனாதிபதியின் பக்கத்திலுள்ள பலம் என்னவென்றால் அவரால் நினைத்த பொழுதில் பிரதமரை மாற்றி புதிய அமைச்சரவையை இப்போது நிறுவ முடியும் என்பதுதான்.

அதனால் தமது அரசாங்கத்தை அமைப்பதற்குரிய ஆளணியை முற்று முழுதாகத் தயார் செய்துகொண்ட பின்தான் பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிருபித்து ஆட்சி மாற்றத்தைச் செய்யவேண்டுமென்ற கட்டாயம் அவருக்கில்லை.

ஒரு பருமட்டாக தமது தரப்பைத் தயார் செய்து கொண்டு,பிரதமர், அமைச்சரவை மாற்றங்களைச் செய்து ஆட்சியதிகாரத்தைத் தம்வசப்படுத்திய நிலையில் தமக்கான பெரும்பான்மைக்கு அணி சேர்க்கவும் முடியும்.

அத்தகைய ஆட்சியதிகாரத்தைத் தமது கரத்திலெடுத்த நிலையில் மாற்றுக் கட்சிக்காரர்களைத் தமக்குச் சார்பாக வென்றெடுப்பது அவருக்குச் சுலபமாக அமையலாம்.

ஊசலாட்டம் கொண்டவர்கள் இலகுவாக அவர் பக்கம் சாய்ந்துவிட வாய்ப்புண்டு.

இத்தகைய ஒரு நடவடிக்கை ஜனநாயக அரசியலில் சதியாகவோ, சட்ட விரோதமானதாகவோ அமையாது.

ஆனால் இது அவ்வளவு இலகுவான காரியமுமல்ல.

முதலில் அவ்வாறு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினாலும் அவ் ஆட்சி அதிக காலம் நீடிக்க முடியாது.

கட்சி மாறிச் சென்றவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க அக் கட்சிகள் - குறிப்பாக ஐ.தே.க. சட்ட நடவடிக்கைகள் எடுக்கும்.

இச் சட்ட நடைமுறைகள் பூர்த்தியாக சுமார் 3 மாதம், மேலும் உறுப்பினர்கள் அப்பீல் செய்தால் இன்னும் 3 மாதமென 6 மாதங்கள் வரை ஆட்சி தொடரலாம்.

அதன்பின் வேண்டுமெனில் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பாராளுமன்றத்தை 2 மாதங்கள் ஒத்திப்போடலாம்,

இதைத் தொடர்ந்து செய்தால் மக்களின் எதிர்ப்புக்கு ஆளாகலாமாகையால் இருமுறை இவ்வாறு செய்து மேலும் ஒரு 4 மாதம் ஆட்சியைத் தம்வசம் வைத்திருக்கலாம்.

இவ்வாறு பார்த்தால் இவ் ஆட்சி மாற்றத்தால் சுமார் 10 மாதங்கள் வரைதான் ஆட்சியைத் தம்வசம் வைத்திருக்க வாய்ப்புண்டு.

அந்த 10 மாதத்திற்குள் மீண்டும் ஒரு தேர்தலில் தம்மை ஆட்சிபீடத்துக்குத் தேர்தெடுக்கக்கூடிய அளவில் அவ் ஆட்சி மக்கள் செல்வாக்கை வென்றெடுத்தாக வேண்டியிருக்கும்.

ஆனால் ஆட்சி கவிழ்க்கப்பட்டவர்கள் சும்மா இருப்பார்களா?

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு என்னாகப் போகிறது?

இவ் ஆட்சி சமாதானப் பேச்சுக்களைத் தொடர முன்வந்தாலும் அதற்குப் புலிகளின் பிரதிபலிப்பு எவ்வாறாக இருக்கும்? சர்வதேச நாடுகளால் புலிகளை இவ் அரசாங்கத்துடன் பேச்சுக்களைத் தொடரச் செய்ய முடியுமாக இருக்குமா?

இவ் ஆட்சியால் வெளிநாடுகளின் நம்பிக்கையை ஈட்டி பொருளாதார நிலைமைகளை ஈடு கட்டக் கூடியதாக இருக்குமா?

இவை இம் முயற்சிக்கு முன்னால் எழும் கேள்விகள்.

இவையெல்லாம் இருக்க, திட்டமிடுவதைப் போல் தமது தரப்புக்கு மற்றைய கட்சிகளிலிருந்து அடிப்படையாகத் தேவைப்படும் ஆசனங்களை யாவது வசப்படுத்த அவர்களால் முடியுமா என்பது மட்டுமல்ல, இதேவேளை தமது பக்கத்திலிருந்து எவரும் மறுபக்கத்துக்குப் பறிபோய் விடாதிருப்பதையும் உறுதி செய்ய முடியுமா என்பதைப் பொறுத்தே மீதி எல்லாம்.

# ஹக்கீமின் நிலை?

கிழக்கு மாகாணத்தைப் பிரதி நிதித்துவம் செய்யும் எம்.பி.கள் பலரதும் எதிர்ப்புக்கு மத்தியிலும் ரவூப் ஹக்கீம் கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சனை தொடர்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பேசுவதென்பது முழு அளவில் அங்கீகாரத்துக்கு உரிய விடயமாக இருக்கப்போவதில்லை.

தாருஸ்சலாமில் கூட்டம் கூடி ஒரு தரப்பு நியமித்த அதி உயர் பீடத்தை மறு தரப்பு விலக்குவதும், கட்சித் தலைவ்ருக்கே கட்சியின் அங்கத்துவத்தை இல்லாமல் செய்வதுமாக மிகவும் கவலைக்குரிய நிலையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சிக் கட்டுக்கோப்பு சிதைந்துபோய் இருக்கிறது.

ரவூப் ஹக்கீம் கட்சியின் தலைவராகச் செயற்படுவதற்கு இடைக்கால தடை உத்தரவு ஒன்றினை அதாவுல்லாக் குழுவினர் கடந்த வாரம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

அடுத்த இரண்டு தினங்களில் அதே நீதிமன்றத்திடம் தனது தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறிய ரவூப் ஹக்கீம் தம்மீதான இடைக்கால தடை உத்தரவை நீக்கிக் கொண்டார்.

இது நடந்து சற்று நேரத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்திய அதாவுல்லா, சுபைதீன் என்பவரின் தலைமைத்துவத்தை மீண்டும் வலியுறுத்தியதுடன் தங்களால் செய்யப்பட்ட சகல நியமனங்களும் செல்லுபடியாகும் எனக் கூறிக்கொண்டார்.

இப்பொழுது நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின் பிரகாரம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீம் இருக்கிறார். ஆனால் அதாவுல்லா குழுவினரோ தங்களுக்கெனத் தனியானதொரு அரசியல் உயர் பீடத்தையும் தலைவரையும் நியமித்துக் கொண்டு கலதாரி ஹொட்டேலிலிருந்து தங்களது அரசியல் பணியை தொடங்கியிருக்கிறார்கள்.

வெளியில் என்ன காரணம் கூறப்பட்டாலும் இது தலைமைத்துவப் போட்டி என்பது மிகவும் தெளிவான விடயம். ஹக்கீமை முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கிவிட்டு தங்கள் கைக்குக் கட்சியின் கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டும் என்ற நகர்வுகளே அதாவுல்லா குழுவினரால் மேற்கொள்ளப் படுகிறது.

மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அதாவுல்லாத் தரப்பினர் கடந்த வாரம் 8 நிபந்தனைகளை முன் வைத்தனர். இதில் பிரதானமானது கட்சியாப்பின் அடிப்படையில் ரவூப் ஹக்கீமுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களில் கணிசமானவற்றை அரசியல் அதியுயர் பீடத்திற்கு வழங்க வேண்டும் என்பதாகும்.

இதனை வைத்துப் பார்க்கும் போது கட்சிக்குள் ரவூப் ஹக்கீமைச் செல்லாக் காசாக்க வேண்டும் என்பதில் அதாவுல்லா குழுவினர் உறுதியாக இருப்பது தெரிகிறது.

இப்போது இரண்டு தரப்பினருமே மக்கள் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். கிழக்கின் சார்பில் தன் வசமுள்ள எம்.பி.களின் பிரதேசங்களுக்கு நேரில் சென்று மக்களைத் திரட்டி கூட்டம் நடத்தி, தனக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் ஏகோபித்த ஆதரவு இருப்பதாகக் காட்ட ரவூப் ஹக்கீம் பலத்த முயற்சி மேற்கொண்டு வருகிறார். மறுபுறம் அதாவுல்லாவும் கிழக்கில் தமக்கு ஆதரவான பிரதேசங்களில் கூட்டங்களை நடத்துவதன் மூலம் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எல்லோரும் தன்பின்னால் அணிதிரண்டிருப்பதாகக் கூற முயற்சிக்கிறார்.

இவர்களில் யாருக்கு அதிகளவு ஆதரவு இருக்கிறது என்பதல்ல இப்போதைய பிரச்சனை. இந்த இரண்டு தரப்பினரும் இரு வேறு துருவங்களாகச் செயற்படுவதன் மூலம் முஸ்லிம்களுக்கு அரசியல் ரீதியில் ஏற்படப்போகும் சிக்கல்கள்



தான் முக்கியமான அம்சம்.

கடந்த சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைக்காக நோர்வே சென்றிருந்த ரவூப் ஹக்கீம் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடி நிலையை அடுத்து அவசரமாக நாடு திரும்பியதால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தொடர்பாக ஒஸ்லோவில் விவாதிக்கப்படவிருந்த விடயங்கள் பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் சுற்றுக்களில் முஸ்லிம்களின் சார்பில் முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தலைவர் கலந்துகொள்வார் எனப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் நேரடி அர்த்தம் இனிமேலும் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக ரவூப் ஹக்கீமை முழு அளவில் புலிகள் அங்கீகரிக்கப்போவதில்லை என்பதுதான்.

ஹக்கீம் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவித்த அன்றைய தினமே ஜனாதிபதியைச் சந்தித்த அதாவுல்லா, ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு தம் சார்பில் உள்ள ஒருவருக்கு அந்த அமைச்சுப் பொறுப்பை வழங்குமாறு கேட்டிருந்தார். ஜனாதிபதி நினைத்திருந்தால் இதனைச் செய்திருக்க முடியும். எனினும்அதற்கு இன்னும் காலம் கனியவில்லை என்று நினைத்தாரோ என்னவோ கொள்கை அளவில் உடன்பட்டதோடு சுருக்கிக் கொண்டார் திருமதி குமாரதுங்க.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்று நீதிமன்றம் சான்றுப் பத்திரம் வழங்கினால் மட்டும் ஹக்கீமுக்கு முஸ்லிம்களின் பிரதிநிதியாக சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியாதென அதாவுல்லா குழுவினர் விவாதிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தைப் பிரதி நிதித்துவம் செய்யும் எம்.பி.கள் பலரதும் எதிர்ப்புக்கு மத்தியிலும் ரவூப் ஹக்கீம் கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சனை தொடர்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பேசுவதென்பது முழு அளவில் அங்கீகாரத்துக்கு உரிய விடயமாக இருக்கப்போவதில்லை.

இதன் காரணமாக அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்களின் போது முஸ்லிம் சார்பு பிரதிநிதிகள் விசயத்தில் குறிப்பிடத்தக்க சர்ச்சை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ரவூப் ஹக்கீமை முற்றாகப் புறக்கணித்துவிட்டு அதாவுல்லா குழுவினரை சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளச் செய்வது பாரிய அளவிலான சர்ச்சைகளுக்கு வழி வகுக்கும்.


அதாவுல்லா தரப்பினருக்கு பொ.ஐ.மு.வின் ஆதரவும் பின்பலமும் இருப்பதாக ஏற்கனவே அரசியல் வட்டாரங்களில் பரவலான அபிப்பிராயம் நிலவும் நிலையில் இந்தக் குழுவினரை சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொள்ள வாய்ப்பளிப்பது என்பது புதிய பிரச்சனைகளுக்கு வழி வகுக்கக் கூடும் என அரசாங்கம் கருதுகிறது.

ஆனால் இஷ்டம்போல ஹக்கீமை தாய்லாந்து கூட்டிச் சென்று முஸ்லிம்களின் பிரதிநிதியும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கிறார் என்று உலகத்துக்குக் காட்டும் முயற்சியில் இம்முறை சிக்கல் வரவே செய்யும்.

மறுபுறம் உறுதியான முஸ்லிம் பிரதிநிதித்துவம் ஒன்று இல்லாமல் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் போது அரச தரப்புக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன.

நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வொன்றின்போது முஸ்லிம்களையும் பங்குபெறச் செய்ய வேண்டும் என்ற பொதுவான வாதத்தை ஒருபுறம் வைத்துவிட்டுப் பார்த்தாலும் முஸ்லிம் பிரதிநிதி இல்லாமல் அரசியல் தீர்வின் அடிப்படையான விடயங்கள் குறித்து ஆராயப் போவதில் அரசாங்கத்திற்கு பிரச்சனை இருக்கவே செய்யும்.

தமிழ்த் தரப்பின் சந்தேகமற்ற கோரிக்கைகளில் ஒன்றான வடக்கு-கிழக்கு இணைப்பை தவிர்ப்பதற்கு அரச தரப்பு இத்தனை காலமும் கிழக்கு மாகாணத்



தில் செறிந்து வாழும் முஸ்லிம்களின் இருப்பு குறித்த பிரச்சனையையே முன்னிலைப் படுத்தி வந்தது.

நேராக அரசாங்கமும் புலிகளும் மட்டுமே பேசுவதாக வந்துவிட்டால் வடக்கு-கிழக்கை இணைந்த பிரதேசமாக ஏற்கும்படி புலிகள் முன்வைக்கப் போகும் கோரிக்கையை நிராகரிப்பதற்கு அரசாங்கத்திடம் காரணமில்லாமல் போய்விடும். அத்துடன் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டால் தங்களுக்கு தனியான நிர்வாக அலகு தரப்பட வேண்டும் என்று இது வரை காலமும் முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்டு வந்த கோரிக்கை குறித்து உரிய நேரத்தில் பேச முடியாமல் போய்விடும்.

தென்னிலங்கை அரசியலில் முஸ்லிம் காங்கிரஸ் குழப்பம் தொடர்பாக பிரதான கட்சிகளுக்கிடையில் இருக்கும் ஒரே சந்தேகம், இது தேசிய அரசியலில் அதிகார மாற்றத்தை ஏற்படுத்த போதுமான அளவு சக்தி வாய்ந்த பிரச்சனையா என்பதாகும்.

தற்போதைய நிலையில் முஸ்லிம் காங்கிரஸிலுள்ள இரண்டு குழுக்களுமே தமது ஆதரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.மு. அரசாங்கத்திற்கே வழங்கப்படும் எனக் கூறி வருகின்றனர். இந்தக் கூற்று எத்தனை நாளைக்கு நிலைத்து நிற்கும் எனக் கூற முடியாது. மறுபுறம் எதிர்க் கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்திக் குழுவக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகச் செய்திகள் வெளியாகும் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அதாவுல்லா கூறுவது எவ்வளவு காலத்துக்குச் செல்லுபடியாகும் என்று நிச்சயமில்லை.

ஆனால் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தைத் தக்கவைத்துக் கொள்ள தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் ஆதரவு பிரதமருக்கு இருக்கிறது.

இதிலுள்ள சிக்கல் என்னவெனில் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றில் அரசும் புலிகளும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில் புலிகளிடம் அரசாங்கம் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதுதான்.

அதாவுல்லா குழுவினர் அரசாங்கத்தை விட்டு விலகினால் அரசாங்கம் தெளிவாக அதன் பெரும்பான்மைப் பலத்தை இழக்கும். இந்தப் பின்னணியில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவிக்க முன்வந்தால் அரசாங்கம் அதை வரவேற்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு ஒரு அரசியல் கட்சியே அல்ல: அது எமது சொற்படி நடக்கும் ஒரு பாராளுமன்றக் குழு என்று புலிகள் அழுத்தம் திருத்தமாகக் கூறிவரும் நிலையில் தமிழ் கட்சிகளின் ஆதரவில் அதிகாரத்தில் இருப்பதென்பது புலிகளின் ஆதரவில் ஆட்சியில் இருப்பது என்பதே ஆகும். இந் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் புலிகள் என்ன கோரிக்கையை முன் வைத்தாலும் அதற்கு உடன்பட வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்படும். ஆனால் அப்படி உடன்பட்டுவிட்டு, அந்த விடயங்களை செயற்படுத்தும்போது தன்னிஷ்டப்படி காரியம் பார்க்க முடியாத நிலையிலேயே அரசாங்கம் இருக்கிறது.

ஏனெனில் ஜனாதிபதியின் அதிகாரத்தின் பிரகாரம், புலிகளுக்கு பிரதமர் ரணில் அதிகப்படியான சலுகைகளை வழங்குகிறார் எனக் கூறி அதையே காரணம் காட்டிப் பிரதமரை ஜனாதிபதியால் பதவி நீக்க முடியும்.

இவற்றை வைத்துப் பார்க்கும் போது முஸ்லிம் காங்கிரஸுக்கள் ஏற்பட்டள்ள பிரச்சனையால் தங்களுக்கு எதுவும் நேர்ந்துவிடவில்லை, பாராளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகளின் பக்கபலமும் கைவசம் இருக்கிறதே என்று பிரதமரால் நிம்மதியடைய முடியாது.

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் குளியலறை உபகரணங்களை

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R. De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை

184-A, Havelock Road, Colombo-05.

Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



இந்தியாவின் புகழ் பெற்ற தொடுகை சிகிச்சை நிபுணர் மீண்டும் வந்திருக்கின்றார்

டாக்டர் சசிகாந் சேத்



நீரிழிவ, முடக்குவாதம், மூட்டு வாதம், தூக்கமின்மை, மலட்டுத் தன்மை, தீய பழக்கங்கள், நரம்புத் தளர்ச்சி, ஒற்றைத் தலைவலி போன்ற இன்னும் பல வியாதிகளைத் தொடுகை மூலம் குணமாக்குகின்றார்.

Special Herbal Application To Avoid Buypan Surgery for Angio Plasty, 'இதயக் கோளா றுகள் பற்றுநோயின் முதற் கட்டம், ஆஸ்துமா இன்னும் பல.

இடம்:

கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்.

தொ.பே:

585592, 581986



**கம்பியூட்டர் வகுப்புக்கள்** 7 முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு பென்டியம் கம்பியூட்டர்களில் பயிற்சி வழங்கப்படுகிறது. புதிய வகுப்புகள் ஜனவரி 2 இல் ஆரம்பம். கட்டணம் மணித்தியாலத்திற்கு 50 ரூபா. பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:-

**Swiss Tec Computer System**

5- 1/21, கொட்டாஞ்சேனை மார்க்கட் கொம்பிளக்ஸ், கொழும்பு-13.

✳ T.P 078-669247 ✳


# 6 ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு 06 03 1978



உதிர்வு 20 06 2002

**அமரர் செல்வி மகிழ்ந்தவேணி மகேசன் (வசந்தி)**

முன்பள்ளி ஆசிரியை, மதியாமடு, புளியங்குளம்

மகிழ வைத்த மகிழ்ந்த வேணியே!<br>
மறைந்தாயே!<br>
வசந்த சோலையிலே வாழ்ந்தவளே வசந்தி<br>
மறைந்தாயே!<br>
முன்பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றி<br>
சின்னப் பூவரசங்குளத்தில் சிறகு விரிக்கும்<br>
சிறுவரைச் சீராக்கச் சென்றவளே! - உன்னை<br>
மர்மமாகவே மறைத்தானே! - உன் உடல்<br>
தேடி ஊரெல்லாம் உலாவினோமே!<br>
வசந்தி உன் விடயத்தை வதந்தி ஆக்கி<br>
கொடியவர் திசைகள் திருப்பினரே!<br>
உறுதி உள்ளவள் என்று சொல்லி<br>
உறுதியுடன் உன்னுடல் மீட்டோம்<br>
யாழ் போன்ற உன்மேனி<br>
"காமுகன் யசோவின்" கை பட்டு<br>
கானகத்தில் மீட்டோமே!<br>
உத்தமியாக நீ மடிந்தாயே!<br>
உத்தமியாய் உதிர்ந்ததால்<br>
உலகமெல்லாம் உன் பெயர்<br>
ஒலித்ததுவே வசந்தி!<br>
நீ எம்மை விட்டுப் பிரிந்து<br>
ஈர் மூன்று மாதங்கள் உருண்டோடிச்<br>
சென்றாலும்<br>
உன் நினைவ எம் மனதை விட்டு நீங்காது!<br>
என்றும் உன் நினைவில் வாடும்...

அன்பு, அப்பா, அம்மா, அம்மம்மா, சகோதரர்கள், சகோதரிகள், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அண்ணிமார், மச்சான்மார், மச்சாள்மார்,பெறாமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

வசந்தியின் அந்தியட்டி- 20 -12-2002 அன்று நடைபெற இருப்பதால் எல்லோரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:- மாமா. கார்த்திக்,லெபனான்.


**பரம்பரையாக தொடர்ந்து வரும் பிரபல மலையாள மாந்திரீகம் மூலம் உங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளுங்கள். 23 வருட அனுபவபூர்வ சேவை**



பிரச்சினைகளை மனதில் மறைத்துக் கொண்டு துன்பப்பட வேண்டுமா?

பல்லாயிரக் கணக்கானவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்ததை போன்று உங்களுடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன், நீங்கள் விரும்பும் காதலரை 24 மணி நேரத்தில் உங்கள் வசமாக்குவேன். பிரிந்தவர்களை சேரவைக்கவும், வேண்டாதவர்களை தள்ளி வைக்கவும்,வீடுகளை காவல் செய்யவும்,வியாபாரம் தழைக்கவும், பிள்ளை பேறு கிடைக்கவும், தொழில் கிடைக்கவும்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கவும்,பெரும் சூனியத்தை வெட்டவும் முடியும். இது போன்ற வேறு மந்திர வேலைகளையும் செய்து தருவேன். சந்திப்பு ; ஞாயிறு,புதன் - மு.ப.9.00 - பி.ப.5.00

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விசேட பாதுகாப்பு அளிக்கும் மந்திர உபாயங்கள் என்னிடம் உண்டு.**

வெளிநாட்டில இருந்தவாறே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அதிஷ்டமான வாழ்க்கை நடத்துவோர் அதிகம். எனது திறமையின் பலன்களை அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**பாரத ஜெயதேவ** பாரம்பரிய மலையாள மஹா மாந்திரீகர்

65, High Level Road,Kirullapone, Colombo - 06.

T.P : 734678, 514349 Fax : 514349

சந்திப்புக் கட்டணம் - ரூ 250/-



**சிங்கப்பூரில் தங்குமிடவசதி**

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து. திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும்இலங்கை முறைப் படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச் விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore 079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:

அப்பு: 0065-975 14 941



**காண்டம்**

உங்கள் வாழக்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

Tel: 074-519754





**இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி**

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.



1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.

**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அறபுத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.



**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளி நாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விடடாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி.


**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 8.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# மலையகத்தில் புதிய அரசியல் கலாசாரம்



மலையகத்தின் இரு பெரும் தலைவர்களதும் மோதல் சந்திக்கு வந்துவிட்டது. கடந்த பொதுத் தேர்தலின்போது அண்ணன் தம்பி எனக் கூறிக்கொண்டு மேடை மேடையாக ஏறி மலையக மக்களிடம் வாக்குக் கேட்ட அமைச்சர்களான ஆறுமுகன் தொண்டமானும் பெரியசாமி சந்திரசேகரனும் தற்போது முன்னைய சகோதரத்துவத்தைத் தலைகீழாக மாற்றிக் கீரியும் பாம்பும் போல மலையகத்தில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்கி வருகின்றனர். சமீபத்திய சம்பவமாக அட்டன் தொழில்நுட்பக் கல்லூரிக்கான அதிபர் மற்றும் நிர்வாக நியமனங்கள் குறித்து சுமாராக அடிதடியில் இறங்கியதைக் குறிப்பிடலாம். இந்தத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அமைச்சர் சந்திரசேகரனால் நியமிக்கப்பட்ட அதிபர் போதிய தகைமை இல்லாதவர் எனக் கூறி அவரைப் பதவி விலக்கும் போராட்டம் ஒன்றைச் சில வாரங்களுக்கு முன்னர் ஆறுமுகன் தொண்டமான் தொடங்கியிருந்தார்.

இந்தத் தொழில்நுட்பக் கல்லூரிக்கான அதிபர் பிரச்சனையில் அரசாங்கத்தை விட்டு விலகப் போவதாகப் பிரதமருக்கு எச்சரிக்கைக் கடிதம் எழுதும் அளவுக்கு ஆறுமுகன் தொண்டமான் 'அப் செற்றாகி' இருந்தார்.

பிரதமருக்குக் கடிதம் எழுதினோம்: தம் காரியத்தைச் சாதித்தோம் என்றில்லாமல் இன்னமும் தொடருகிறது இந்தப் பிரச்சனை. ஆறுமுகனின் 'ஜனநாயக விரோத' செயல்களைக் கண்டித்து ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மலையகத்தின் 'முக்கிய ஜனநாயக வாதிகள்' சிலர் கடந்த திங்களன்று கூட்டிய கூட்டம் பெரும் அமளிதுமளியில் முடிந்ததாக அறியக் கிடைக்கிறது.

அமைச்சர் ஆறுமுகனின் கோபாவேசமும் உணர்ச்சி வேகமும் நாடறிந்த விசயம். பொலிஸ் நிலையம், மருத்துவமனை என்றெல்லாம் கிடையாது. தான் ஒரு சமூகத்தின் பிரதிநிதி என்ற சிந்தனை கூடக் கிடையாது. இடம் வலம் பாராமல் எப்பொழுதும் அடிதடிக்குத் தயாராக இருக்கும் அமைச்சர் அவர்.

மறுபுறத்தில் அரசாங்கத்துக்குள் தனக்கிருக்கும் செல்வாக்கையும் வன்னியில் தனக்கிருக்கும் மரியாதையையும் மலையகத்தில் அரசியல் ஆக்கி, தனது கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒன்றை மலையகத்தில் அமைக்கத் துடிக்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்.

இந்த இரண்டு சேவையாளர்களுக்கும் மத்தியில் சிக்கித் தவிக்கிறார்கள் அப்பாவி மலையக மக்கள். இந்த இருவரதும் கௌரவப் பிரச்சனைகளால் சீரழிகிறது அட்டன் தொழில்நுட்பக் கல்லூரி. குறைந்த பட்ச வசதிகளுடன் மலையகத் தமிழ் மாணவர்களுக்கு ஏதோ நாலு விசயம் போதித்த இடம், இன்று தலைவர்களின் சுயநலப் போராட்டங்களால் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

**இந்தத் தொழில்நுட்பக் கல்லூரிக்கான அதிபர் பிரச்சனையில் அரசாங்கத்தை விட்டு விலகப் போவதாகப் பிரதமருக்கு எச்சரிக்கைக் கடிதம் எழுதும் அளவுக்கு ஆறுமுகன் தொண்டமான் 'அப் செற்றாகி' இருந்தார்.**

அரசாங்கத்தை விட்டு விலகி விடுவோம்: மலையக மக்களின் உரிமைகளுக்காக உயிரையும் கொடுப்போம் என்றெல்லாம் கூறிக்கொண்டு உள்ளதையும் கெடுக்கும் இந்தத் தலைவர்களை மலையக மக்கள் எப்படி மறப்பார்கள்.

# சமஷ்டி! இம்முறையாவது சாத்தியமாகுமா?

இறுதியாக ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் சமஷ்டி முறையிலான தீர்வொன்றைப் புலிகள் ஏற்றிருப்பது பல்வேறு தரப்பினராலும் பல்வேறு கண்ணோட்டங்களில் அணுகப்படுகிறது. அனேகமாக இப்படியான ஒரு முடிவுக்கு அவர்கள் வந்திருப்பது சர்வதேச, உள்ளூரளவில் பெருமளவு வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அமெரிக்கா, இத்தகைய தீர்வு ஒன்றுக்கு ஒப்புக் கொண்டதற்காக இலங்கை அரசையும், புலிகளையும், நோர்வேயையும் பெரிதும் பாராட்டியுள்ளது. உலகின் சக்தி மிக்க சகல ஊடகங்களிலும் புலிகள் ஈழத்தைக் கைவிட்டு சமஷ்டியை ஏற்றிருப்பது முக்கிய செய்தியாக இடம் பெற்றிருந்தது. இந்தியாவின் இந்து பத்திரிகை இது ரணிலுக்குக் கிடைத்த வெற்றியெனத் தலையங்கம் தீட்டியிருந்தது.

சமஷ்டி அதாவது கூட்டாட்சி என்னும்போது உலகில் வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு மாதிரியான சமஷ்டிகளைக் கொண்டுள்ளன.

அதில் கனடாவின் மாதிரியே தற்போது பெரிதும் பேசப்படுகிறது. கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாநிலம், கனடாவுடன் இணைந்திருக்கவேண்டுமா அல்லது பிரிந்து செல்ல வேண்டுமா என்பதற்கு கியூபெக்கின் உள்ளேயே சில வருடங்களுக்கு முன்னர் ஒரு கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கியூபெக் கனடாவுடன் இணைந்திருக்க வேண்டுமென்றே பெருவாரியான கியூபெக் மக்கள் வாக்களித்திருந்தார்கள்.

புலிகள் இப்போது அகச் சுயநிர்ணய உரிமையையும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வையும் கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது ஐக்கிய இலங்கைக்குள்ளா அல்லது வெளியிலா என்பது இலங்கையில் எதிர்காலத்தில் நிகழப்போகும் அரசியல் மாற்றங்களைப் பொறுத்ததாகும்.

சுயநிர்ணய உரிமை, சமஷ்டி ஆகிய சொற்பதங்களுக்குள்ள பரந்த அர்த்தங்களைப் புரிந்து கொள்ளாதவர்கள் தாம் விரும்பிய குறுகிய அர்த்தங்களைக் கொடுக்க முனைகிறார்கள்.

சமூகங்களுக்கிடையில் அதிகாரங்கள் பகிரப்படுவதில் ஒரு குறிப்பிட்ட சமூகம் மற்றைய சமூகத்தின் தலைவிதியைத் தீர்மானித்தல் என்ற மேலாதிக்க நிலை தவிர்க்கப்படுதல் என்பதே சமஷ்டியின் சாரம்சமாக இருக்க முடியும். ஆனால் தற்காலத்தில் தேசியங்களின் கூட்டு என்ற எல்லைக்கும் இது சென்றுள்ளது. இதன் வரைவிலக்கணமும் பரந்த உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது. காலத்திற்குக் காலம் இது செழுமைப்படுத்தப்படுகிறது.

சுயநிர்ணய உரிமை என்பது ஒரு சமூகம் தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் உரிமை. இந்தக் கோட்பாட்டை உருவாக்கிய அறிஞர்கள் இதனை விவாகரத்து உரிமைக்கு ஒப்பிடுவார்கள். கணவன் மனைவிக்கிடையே விவாகரத்துரிமை சட்டத்தில் இடம்பெற்றிருப்பது ஒருவர் மீதொருவர் அத்துமீறலை மேற்கொள்ளாதிருப்பதற்காகவே. இணைந்து வாழ்வதற்காகவே. ஒருவரின் சுதந்திரத்தை மற்றவர் மதிப்பதற்காகவே. அவர்களைப் பிரிப்பதற்காக அல்ல. ஆனால் துஷ்பிரயோகம் அதிகரித்து வேறு வழி கிடையாது என்றால் பிரிந்து போவதற்காகவும்தான் இந்த விவாகரத்துரிமை சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதே போன்றது தான் சுயநிர்ணய உரிமையும்.

இந்தச் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து சமகாலத்தில் பிரிந்து

**சுயநிர்ணய உரிமை, சமஷ்டி ஆகிய சொற்பதங்களுக்குள்ள பரந்த அர்த்தங்களைப் புரிந்துகொள்ளாதவர்கள் தாம் விரும்பிய குறுகிய அர்த்தங்களைக் கொடுக்க முனைகிறார்கள்.**

சென்ற நாடுகள் என்று எதியோப்பியாவிலிருந்து பிரிந்த எரித்திரியாவையும், இந்தோனேசியாவிலிருந்து பிரிந்த கிழக்குத்திமோரையும் உதாரணத்திற்குச் சொல்லலாம். சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன், ஐ.நா.வின் ஆதரவுடன் இந்த சமகால உலக வரைபட மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை தமிழ் சமூகத்தில் எழுப்பப்படுவதற்கு முன் 1920களின் ஆரம்பத்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான எஸ்.டபிள்.யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் முன்வைக்கப்பட்டது. கண்டி, கரை நாடு, வடக்கு- கிழக்கு என 3 பிராந்தியங்களாகச் செயற்படுவது பற்றி அப்போது அவர் பிரஸ்தாபித்தார்.

ஆனால் 1950களில் வரலாறு தலைகீழாக மாறியது. இலங்கைத் தமிழரசுக்கட்சி சமஷ்டியை வலியுறுத்தியது. பண்டா- செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் பேரினவாதிகளின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாமல் பண்டாரநாயக்கா அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

தந்தை செல்வா தமிழர் தரப்பில் சமஷ்டிக் கோரிக்கையை முதன் முதலில் வலியுறுத்தினார்.

ஆனால் அடுத்தடுத்து நடந்த தமிழர்களுக்கெதிரான திட்டமிட்ட இன வன்முறைகளும், தமிழர்களின் பாரம்பரிய நிலத்தில் திட்டமிட்ட குடியேற்றம், கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றில் காட்டப்பட்ட பாரபட்சங்களும், முக்கியமாக தனிச் சிங்கள மொழிக் கொள்கையும் தமிழ் சிங்கள மக்களிடையே ஆழமான பிளவை ஏற்படுத்தியது. அது தனிநாட்டுக் கோரிக் கைக்கு இட்டுச் சென்றது.

தற்போது 20 வருட யுத்தத்தின் பின்னர் 60 ஆயிரம் மக்கள் பலிகொள்ளப்பட்ட பின்னர் , பொருளாதார, சமூகப் பேரழிவுகள் ஏற்பட்டதன் பின்னர் சமஷ்டித் தீர்வு பற்றி அரசும் புலிகளும் இணக்கம் கண்டுள்ளனர். உண்மையில் 1994 இல் பொதுஜன ஐக்கிய முன்னணி பதவியேற்ற பின்னர் சமஷ்டி முறையிலான தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

சிங்கள சமுகத்தில் தமிழர் பிரச்சனை தொடர்பான கருத்து மாற்றத்தின் ஆரம்பமும் இதுவே.

தற்போது புலிகளும் அரசும் சமஷ்டி தொடர்பாக இணக்கத்திற்கு வந்திருக்கிறாகள். ஆனால் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும். வடக்கு கிழக்கில் பல கட்சிகளின் செயற்பாடு, சமூக, பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் பல்வேறு தரப்பினரதும் பங்களிப்பு, பன்முகத்தன்மை, ஜனநாயகம், மனித உரிமை என்பன உறுதிப்படுத்தப்படுவதே எத்தகைய அதிகாரப் பகிர்விற்கும் அடிப்படையாக இருக்க முடியும்.

**தாகூர்**

எனவே இவற்றைப் பற்றிப் பேசாமல் அதிகாரப் பகிர்வைப் பற்றிப் பேச முடியாது.

இவ்வளவு தூரம் நகர்ந்துள்ள விடயம், இவற்றைத் தவறாவிட்டால் அது மீண்டுமொரு வரலாற்றுத் தவறுக்கு வழிகோலிவிடும். எனவே தங்கள் இலட்சியமான தமிழீழத்திலிருந்தே இறங்கி வரப் புலிகளும், ஒற்றை ஆட்சியைக் கைவிட்டு சமஷ்டி வரை செல்ல அரசாங்கமும் முன்வர முடியுமானால், அவை ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகள் என்பவற்றை ஏற்றுக்கொள்வதற்கும், சகல தரப்பினதும் பங்களிப்புக்கும் மதிப்புக் கொடுப்பதற்கும் முன்வருவது ஒன்றும் கௌரவக் குறைவான விடயமல்ல. இந்தச் சந்தர்ப்பத்தைப் பொறுப்புணர்வோடு கையாண்டு நீண்டகால இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதே சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்குள்ள சமுகக் கடப்பாடு.

# அதிரடி அய்யாத்துரை



புலிகளும் சமஷ்டிக்கு ரெடியெண்டுட்டுது. அரசாங்கமும் ரெடியெண்டுட்டுது. பி.ஏ. தாங்கள் உத முன்னமே வைச்சிட்டமெண்டுது. மாற்றுத் தமிழ்க் கட்சிகளும் உத நாங்கள் எப்பவோ முன்வைச்சிட்டமெண்டினம். கூட்டிப் பாத்தால் எண்பது சதவீதத்துக்கு மேல சமஷ்டிக்கு ஓம். பின்ன என்ன, குந்த வேண்டியதுதானே மேசையில. எல்லாரையும் சேத்துவைச்சு சமஷ்டியை எழுதி முடிச்சிட்டால் இத்தனை கால வேதனைக்குப் பின் ஒரு பிரசவம் நடந்ததாயிருக்கும். இதில நான் நீயெண்டு பிடிவாதம் பிடிக்காமல் எல்லாரும் சேர்ந்து தீர்வை வகுத்திட்டால் பிறகு ஆளுறது யாரெண்டத மக்கள் தீர்மானிக்கட்டுமன். இவ்வளவு ஈஸியா சொலூஷன் இப்ப கையில இருக்கக்க, கைநழுவ விட்டிடக்கூடாதெண்டதுதான் சனத்தின்ர கவலை.

இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவுச் செயலர் பிடிகொடுக்காமல் பேசியிருக்கிறார். சமஷ்டிக்கு புலிகள் தயாரெண்டத இலங்கை நம்பலாமெண்டு சொல்லி, தாங்கள் நம்பினமா இல்லையா எண்டதைக் கெட்டிக்காரத்தனமாத் தவிர்த்துக்கொண்டார். அதவிட முக்கியமா எல்லாத் தரப்பையும் சேர்த்துப் பேசித்தான் தீர்வைக் காணவேண்டுமெண்டும் சொல்லியிருக்கிறார். அதுசரி, வந்தவர் மாற்றுத் தமிழ்க் கட்சிகளை அழைத்து நீண்டநேரம் பேசியிருக்கிறார். எங்கட கூட்டுக் கட்சிக்காரரக் கூப்பிடக்கூட இல்லை. எந்த அளவுக்குச் செல்லாக்காசாப் போய் நிக்கினம் பாத்தியளோ?

மகேசனார் பெரிய பொக்ஸர் மாதிரி ரீவீ விவாதத்துக்குப் போய் நல்லா வாங்கிக்கட்டிக் கொண்டு வந்திருக்கிறார். நீங்களெல்லாம் இனவாதிகள். வடக்கு கிழக்கில புனர்வாழ்வு வேலைகள் ஒண்டும் நடக்கேல்லை எண்டு கெம்பப்போய், இது அவர் தனக்கு புனர்வாழ்வு அமைச்சைத் தரயில்லையெண்ட வயித்தெரிச்சலில கதைக்கிற கதை யெண்டு அவற்ர கட்சி அமைச்சர் மகிந்தனாரிட்டயே குட்டு வாங்கிட்டு நிக்கிறார். புனர்வாழ்வு விஷயத்துக்கு வெளிநாட்டு நிதி வரப்போகுதெண்டு கண்டவுடன ஆளுக்கு நல்லாக் காய்ச்சல் கூடிப்போய் புனர்வாழ்வு அமைச்சருக்கு மேல கொதியாக் கொதிக்கிறார். இவருக்குத் தான்தான் யு.என்.பீ. காட்டினனான், இப்ப எனக்கே வேட்டு வைக்க நிக்கிறாரெண்டு அங்கலாய்க்கிறார் பு.வா.அமைச்சர். ம்.. ஒட்டகத்தக் கூடாரத்துக்குள்ள விட்டால் கொட்டிலப் பிடுங்கத்தானே செய்யும்!

நெடுந்தீவு விஜயத்துக்கு மகேசனார் கூடவரக் கேட்டதுக்கு, குமாரின் மகன் காய்ச்சலெண்டும், மாவையார் கழுத்துப்பிடிப்பெண்டும் சாட்டுச் சொல்லிச் சறுக்கினவை. மகேசனார் ஒண்டும் பேசாமல் நேரா ரெண்டெழுத்தாரிட்ட கொம்பிளைன் குடுத்ததுதான் தாமதம் ரெண்டு பேரும் விழுந்தடிச்சுக்கொண்டு தீவு தரிசனம் செய்திட்டு வந்து நிக்கினம். கூட்டில இருக்கிற மற்ற யாழ் எம்பிமாருக்குத்தான் கேள்வி வரப்போகுதெண்டு இப்ப முழுசாட்டமாக் கிடக்குதாம். வட் டு டு?

கேவலம் ஒரு வாங்குப் பிரச்சினைக்கு கொலையும் செய்யிற அளவு மாணவர் சமுதாயத்தில வன்முறை மண்டிக்கிடக்குதெண்டறிய ஷொக்காயிருக்குதுங்கோ. தனியார் கல்வி நிலையமொன்றில போன கிழமை நடந்த சங்கதி உது. அதுக்கு ரெண்டொரு கிழமை முந்தித்தான் பல்கலைக் கழக அடிபிடியில இன்னொரு மாணவன் கொல்லப்பட்டான். இதுக்கிடையில பள்ளிக்கூடங்களுக்கிடையில அடிபிடியெண்டு தளபாடங்களை யெல்லாம் நாசமாக்கித்தள்ளினாங்கள். பல்கலைக் கழகங்களிலயோ மாறிமாறி ஸ்ரைக்கும் அடிபுடியும். கத்தியெடுத்து முன்னால இருக்கிறவனின்ர முதுகைக் கீறி ரத்தத்தால நோட்ஸ் எழுத ஆசைப்படுற மாணவர் சமுதாயத்தையா நாங்கள் உருவாக்கி விட்டிருக்கிறம்? திங்க் இட் ஓவர் பிளீஸ்!

ஒற்றுமைக்கு உதாரணமெண்டு பேசப்பட்ட முஸ்லிம் சமுதாயத்துக்கு இப்பிடியொரு சோதனை. கட்சி உடையிறதும், கட்சிக்குள்ள ஒருத்தரை ஒருத்தர் மாறி மாறிப் பதவி நீக்கிறதும், நீதிமன்றத்திலதான் கட்சிக் கூட்டமே நடக்கிறது போலத் தெரியுது. தாங்கள் பிரிபட்டு மாறி மாறி அடிபட்டால் போதாதெண்டு மக்களையும் பிரிக்கிற வேலையா இரண்டு தரப்பும் மாறி மாறிக் கூட்டங்கள் வேற நடத்தினம். எங்க கொண்டுபோய் விடப்போகுதோ...?

வைத்தியத் துறையில ஸ்ரைக்கெண்டது ஓயாத மழையாத்தான் தொடர்ந்துகொண்டே வருகுது. ஒன்றில் வைத்தியர்மார் அல்லது உதவி வைத்தியர்மார், அதில்லாட்டால் தாதிமார், கடைசி வைத்திய சிற்றூழியரெண்டு மாறி மாறி யாராவது ஸ்ரைக் நடத்தினபடியிருக்கினமேயொழிய பொது சனத்தைக் கண்ணெடுத்தும் பாக்கினமில்லை. இவையின்ர பிரச்சினையை அரசாங்கமும் தீர்த்து வைக்கிற பாடாக் காணேல்லை. நோய்க்கு வைத்தியத்துறையே எமனாய் மாறிவிட்டால் நோயாளிகளை யார் காப்பாத்திறது?

# ஸ்போர்ட்ஸ்

## அவுஸ்திரேலியா செல்லும் இலங்கை அணியில் மீண்டும் களுவிதாரண

தென்னாபிரிக்காவில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர் இரண்டிலும் தோல்வியைச் சந்தித்த இலங்கை அணி மற்றொரு மும்முனை ஒருநாள் போட்டித் தொடரில் கலந்து கொள்வதற்காக அவுஸ்திரேலியா பயணமாகிறது.

இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் பங்குகொள்ளும் வி.பி. முக்கோணத் தொடரில் கலந்து கொள்வதற்குச் செல்லும் இலங்கை அணியைத் தெரிவு செய்வதில் கடைசி நேரம் வரையிலும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்குள் பலத்த கருத்து முரண்பாடுகளும் சர்ச்சைகளும் நிலவின.

தென்னாபிரிக்காவுடனான போட்டிகளில் கலந்து கொள்ளச் சென்ற அணி தெரிவு செய்யப்பட்ட முறை குறித்துக் கப்டன் சனத் ஜயசூரிய ஏற்கனவே தனது கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்த நிலையில் அவுஸ்திரேலிய சுற்றுலாவுக்கான அணியை முடிவு செய்வதில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்பட்டது. இந் நிலையில் கடந்த தென்னாபிரிக்கச் சுற்றுலாவின் போது இடம்பெற்றிருந்த பலர் நீக்கப்பட்டுப் புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

இலங்கை அணியின் விக்கெட் காப்பாளராக நீண்ட காலம் களத்தில் இருந்து கடந்த ஜூன் மாதம் முதல் எந்தப் போட்டியிலும் கலந்து கொள்ளாத ரொமேஷ் களுவிதாரண அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்திற்கு அழைக்கப் பட்டிருக்கிறார்.

அரவிந்த டி சில்வா தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தாமதமாகவே அவுஸ்திரேலியா செல்வதாகக் குறிப்பிட்டிருக்கும் அதேவேளை போட்டித் தொடரின் இடை நடுவில் அணியில் இணைந்துகொள்வதாகக் கூறியிருக்கிறார்.

திங்களன்று அணி அவுஸ்திரேலியா புறப்படும் நேரம் வரையிலும் அவ்வணியின் விபரம் வெளியிடப்படவில்லை. எனினும் அன்றைய தினம் இரவு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உத்தியோகபூர்வ வெப் தளத்தில் அவுஸ்திரேலிய தொடரில் பங்குகொள்பவர்களின் விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் அணியின் விபரம் வருமாறு: சனத் ஜயசூரிய, மாவன் அத்தப்பத்து, மகேல ஜெயவர்த்தன, ரொமேஷ் களுவிதாரண, ரசல் ஆனோல்ட், குமார் சங்கக்கார, ஜெகான் மொபாரக், திலான் சமரவீர, அரவிந்த டி சில்வா, சமிந்த வாஸ், தில்கார பெர்னாண்டோ, புலஸ்தி குணரத்தின, பிரபாத் நிஷங்க, முகான் சொய்சா, சுஜீவ டி சில்வா, முத்தையா முரளிதரன்.

சில வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இதே போட்டித் தொடரின் போது களுவிதாரண, ஜயசூரிய போன்றவர்கள் வேகமாக ஓட்டங்களைக் குவிக்கும் முறையைக் கையாண்டு இலங்கை அணியைப் புதிய பாதைக்கு இட்டுச் சென்றமை குறிப்பிடத் தக்கது.

# இலக்கிய நயம்

## தருவது முழுடில்யன்

## சுமையால் ஒடியும் இடை அதனால் ஒழியும் நடை!

தயங்கித் தயங்கி நடந்து வருபவளைப் பார்த்தபடி இருந்தான் வினயன்.

கோயிலில் அவன் பார்த்திருந்த சிற்பங்களில் ஒன்று நடந்து வருவதைப் போலத்தான் அவளைத் தூரத்தில் பார்க்கும் போதே அவனுக்குத் தெரிந்தது. கோயில் சிலைகளைச் செய்வதற்கு ஆரம்ப உருவை வடித்துக் காட்டிய அந்த முன்னொரு காலச் சிற்பியின் கற்பனையில் இருந்த உடலமைப்பு இவளுடையதாகத்தான் இருக்க வேண்டும் என வினயன் நினைத்துக் கொண்டான்.

அவனருகில் வந்தபோது பார்கவியின் கால்கள் மேலும் பின்னலிட்டன.

நடை தளர்ந்தபோது மேலாடையும் நெகிழ்ந்தது. அவளை அச்சுறுத்தும் வினயனின் அந்த நிதானமான ஆராய்ச்சிப் பார்வை அவளுடலில் நடுக்கத்தைப் புகுத்தியிருக்க வேண்டும். தோளிலிருந்த முந்தானை சரிந்தது.

அந்த முந்தானையை முழுவதுமாக நெகிழவிட்டு அவள் மானத்தை வாங்கிவிட இஷ்டப்படாத அந்த அழகிய சிறிய மார்பகங்கள் ஆடையின் நுனிகளைத் தாங்கித் தூக்கி நிறுத்திக் கொண்டிருந்தன.

நெகிழ்ந்த ஆடையை கையால் சட்டெனத் தூக்கி மேலே போட்டுக் கொண்டாலும், அது வீழ்ந்ததையும், தடங்கி நின்ற இடத்தையும் கண்களால் துளைத்துக் கொண்டிருந்த வினயனைக் கண்டு சங்கடத்திலாழ்ந்த பார்கவியின் சிற்றிடை பெரிதும் நெளிந்து சுழன்று அவள் நடைக்கு ஒரு சிக்கலையும் சிங்காரத்தையும் அளித்தது.

அப்படி நெளிந்த அவள் இடையின் மீது பதிந்த அவன் பார்வை "அட, இதுவும் இருக்கிறதா!" என்று ஆச்சரியப்பட்டதையும் அவதானித்த பார்கவி சொல்லொணாக் குறுகுறுப்புக்குள்ளாகி, தடுப்புக் கட்டை போடப்பட்ட தேரின் தள்ளாட்டத்தை ஒத்தவளானாள்.

அப்படியே அவள் தயங்கித் தயங்கி நடக்க அழகுகள் லேசாக அதிர்ந்தன. கால் மணிகள் ஒலித்தன. அவன் பார்வையைத் தவிர்க்க முயன்ற அவள் கண்கள் அங்குமிங்கும் அலைந்து சங்கடத்தைக் காட்டின. உதடுகள் உள் மடிந்து கன்னங்களைக் குழித்தன.

வெறியும் ஆவலும் நிரம்பிய கழுகுக் கண்களோடு வினயன் அவள் அருகே வரக் காத்திருந்தான்.

வந்தவள் தலைகுனிந்தபடி நின்றாள்.

அவளெதிரே சென்று நின்றவன், தன் கைகளால் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

அந்த அழகிய முகத்தில் வெட்கத்தின் ரேகை படிந்து கிடந்தது.

"ஆகா, அற்புதம்" என்று வாய்விட்டே சொன்னான். அவனை ஏறெடுத்து மெல்ல விரிந்த அவள் விழிகள் மருட்சியோடு சிறகடித்தன.

வினயன் தடுமாறினான். இந்த மருண்ட பார்வையை மான்களிடமிருந்து இவள் கற்றாளா? இவளிடமிருந்து மான்கள் கற்றனவா? என்று சந்தேகம் கொண்டான்.

பார்கவி அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவோ விலகி ஓடவோ முயற்சிக்காதவளாக நின்றாள்.

வினயன் அவள் கண்களையே பார்த்தான். அதிலிருந்த அழைப்பையும் பார்த்தான். அவள் விடும் சிறிய மூச்சுக்கும் எழுந்து இறங்கிய பருத்த எழில்களையும் கண்டான். அவஸ்தையால் அவள் திரும்பியபோது இடையின் இணையிலா மெருகைக் கண்டான். ஆயிரமாயிரம் மோகனாஸ்திரங்கள் அவள் உடலிலிருந்து வெளிப்பட்டதை உணர்ந்தான். அவற்றின் தாக்குதலால் திணறவும் செய்தான்.

வாயை மூடி வைத்துக்கொண்டு அவன் கண்கள் செய்யும் அட்டகாசத்தை முடிவுக்குக் கொண்டு வர நினைத்த பார்கவி, "என்ன அற்புதம் என்று சொல்லவேயில்லையே..." என்றாள், தன் அழகிய நயனங்களை அவன் மீது நாட்டி.

"காளிதாசன் வர்ணனை ஒன்று ஞாபகத்தில் வந்தது" என்றான் அலையும் தன் கண்களை நிறுத்தாமலே.

"என்ன?"

"ரகுவம்சத்தில் நாயகி இந்துமதியை விளக்கென்று வர்ணித்ததை நினைத்து வியந்தேன்."

"என்ன வியப்பு?"

"எத்தனை பொருத்தம் என்பதை நாம் அனுபவபூர்வமாக உணர நேர்கையில் உண்டாகும் வியப்புத்தான்."

"என்ன பொருத்தம்?.." என்று கேட்டவள் உடனேயே

"ம்ம்... உங்கள் வர்க்கத்திற்கே விளக்கும் பெண்களும் ஒன்று தானே..." என்றாள் குரலில் இகழ்ச்சி கலந்து.

"மிகவும் சரிதான். ஒளியாகத் துலங்குபவை... தாமிருக்கும் சூழலையே ஒளியால் நிறைத்து விடுபவை..."

அவன் பேச்சை வெட்டியவள் "சும்மா பூச்சுற்ற வேண்டாம்" என்றாள்.

"பூவுக்கு ஏன் பூ?" என்று சிரித்தான்.

"ம்ஹூம்...பச்சைப்பிள்ளை...ஒன்றும் விளங்காத நடிப்பு..."

"என்ன நடிப்பு? என்ன விளங்க வேண்டும்? விளக்கையும் பெண்ணையும் ஒன்றாகச் சொன்ன கவி... அடடா, விளக்கையும் பெண்ணையும் அணைக்கலாமே...நீ அதைச் சொல்கிறாயா...?" என்றவன் பெரிதாகச் சிரித்தான்.

"பெண்ணே, அந்த மகாகவி சொன்னது வேறு. இந்துமதி என்ற அந்தக் காவிய விளக்கு சுயம்வர மண்டபத்திலிருந்த மன்னர்களின் முன்பு சென்றபோது அவர்கள் முகங்கள் பளிச்சிட்டனவாம்; அகன்றதும், இருட்டிக் கறுத்தன என்று எழுதியிருக்கிறான்...."

பார்கவி முகத்தை வலித்தாள். "அளவுக்கு மிஞ்சிப் புகழ்வதும் புலம்புவதும் உங்கள் கவிகளுக்கு வழக்கம்தானே!"

"அளவுக்கு மிஞ்சினால் கவிகள் மட்டுமல்ல காற்சிலம்புகளும்தான் புலம்பும் என்பதை நான் பார்த்தேனே..."

"என்ன பார்த்தீர்கள்?"

"இதோ சற்று முன்புதான். "அபாயம் அபாயம்" என்று இரண்டு காற்சிலம்புகள் புலம்புவதைக் கேட்டேன்."

"ம்...சரிதான் நீங்களும் புலம்ப ஆரம்பித்துவிட்டீர்கள்!"

"எதற்கும் ஒரு அளவிருக்கிறது என்று சொன்னாயல்லவா? இதோ இந்த இடை தாங்கக் கூடிய பாரத்திற்கும் ஒரளவிருக்கிறது தானே?"

அவன் எங்கு வருகிறான் என்பதறிந்து அவள் சிவந்தாள். வினயன் தொடர்ந்தான். "அளவுக்கு மிஞ்சிய பாரத்தைத் தான் தந்திருக்கிறாய்...போகட்டும். அவை அசையாமலாவது பார்த்துக் கொள்ள வேண்டாமா? அவை அசைய ஆரம்பித்தால் பாவம் சின்ன இடை ஒடிந்து போய்விடும் என்று எவருக்குத்தான் பயம் தோன்றாது? எனவேதான் "நடக்காதே நடக்காதே" என்றும், "காப்பாற்று காப்பாற்று" என்றும் இதோ உன் கால்களிலுள்ள இந்தச் சிலம்புகள் இரண்டும் முறையிட்டுக் கூவியபடியே வந்தன...நீ கேட்கவில்லையா?"

மேலும் சிவந்த தன் முகத்தை அவன் மார்பில் மறைத்துக் கொண்டாள் பார்கவி.

உபயதனம் அசையில்
ஒடியும் இடை
நடையை ஒழியும் ஒழியம் என
ஒண் சிலம்ப
அபயம் அபயம் என அலற
நடைபயிலும் அரிவை...

(கலிங்கத்துப் பரணி -58)

# சிந்தியா பதில்கள்

★ **இப்போதைய தமாஷ்களில் ஒன்றைச் சொல்லுங்களேன்...?**

தாராபுரம் நிலாம், கரம்பை.

அடி வாங்கி நொந்த கிழக்கு முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளை வெறுக்கத்தக்க தீவிரவாதிகளாய்ச் சித்தரித்து எழுதிய தமிழ்ப் பத்திரிகைகள், இப்போது தங்களை நடுநிலையானவர்கள் என்று நினைத்துக் கொண்டு முஸ்லிம்களின் ஒற்றுமைக்காகக் கண்ணீர் வடிப்பது!

♟♟

★ **காதல் கோட்டை, காதல் பரிசு, காதன் மன்னன், காதல் பகடை, காதல் ஓவியம், காதல் பறவை, காதல் பூவே, காதல் ரோஜா, காதல் கவிதை, காதல் தேசம், காதல் சாம்ராஜ்யம், காதல் வைரஸ் என்றெல்லாம் படங்கள் வந்து விட்டன. இனி என்ன வர இருக்கிறது?**

வி.குகன், ஒந்தாச்சிமடம்.

காதல் பிசாசு!

♟♟

★ **வளர்ந்து வரும் ஆண் பின்னணிப் பாடகர்களில் வளமான எதிர்காலம் உங்கள் கணிப்பில் யாருக்கு?**

கே.வசந்த், கொழும்பு-15.

என் தெரிவு- கார்த்திக்.

♟♟

★ **"முஸ்லிம் காங்கிரசை உடைத்த வெளிச்சக்தி பொ.ஐ. முன்னணியல்ல. தற்போதைய அரசியல் நிலைமையை கூட்டிக்கழித்துப் பார்த்தால் அவர்கள் யார் என்பதை எவரும் ஊகித்துவிட முடியும்" என்று ரவூப் ஹக்கீம் உறுதிபடச் சொல்லியிருக்கிறாரே...உடைத்தவர்கள் யாரென்று உமக்கு ஊகிக்க முடிந்ததா?**

க.கமால்தீன், ஏறாவூர்-3.

இவர்கள் ஒன்றுபட்டு நின்றால் தானே தனியலகு கேட்டுத் தலையிடியாக இருப்பார்கள்" என்று யாருக்குத் தோன்றியிருக்கும்?... ஹக்கீம் நானா கணக்கை இப்படிப் போட்டுப் பார்க்கிறார்.

தானில்லாத ஒஸ்லோ கூட்டத்தில் இரு தரப்பும் அவசர அவசரமாக சமஷ்டியை ஒப்புக்கொண்டு...தீர்வு மாதிரிகளைப் பரிசீலிப்பது என...வேக வேகமாக நடையை எட்டிப்போட ஆரம்பிக்கிறார்கள். பாவம் மு.கா. தலைவர்! தன்னை ஏகப்பிரதிநிதி என்று நிரூபித்துக் கொள்ளாமல் இனி மாநாட்டுப் பங்கேற்புமில்லை; தனியலகுக் கோரிக்கையும் அம்போ! ஆக, தோற்றவர் இவரென்றால், வென்றவர் எவரோ உடைத்தவர் அவரே! கணக்குச் சரியாக வருகிறதா?

♟♟

★ **தரமான இலக்கியத்தை எப்படி இனங்காண்பது?**

ஏ.ஜீவாபிரியதர்ஷி, மட்டக்களப்பு.

தரமான கலைப்படைப்புக்கு எப்போதும் நூதனத்தன்மை- அதாவது இதற்கு முன்பு இதுபோல ஒன்று இல்லை என்ற உணர்வு - இருக்கும். மனித மனத்தை ஒரு படி மேலுயர்த்துவதாக இருக்கும்.

♟♟

★ **சமாதானத்தையும் அமைதியையும் விரும்பாதவர்ககள் கூட இருக்கிறார்களா?**

பி. விக்னேஸ்வரன், ஹட்டன்.

இருக்கிறார்களே! உதாரணம். ஆயுத வியாபாரிகள், அமெரிக்க ஜனாதிபதிகள்...



சிலம்பரசன் –சார்மி

★ **காதல் அழிவதில்லை எப்படிப் படம்?**

எம்.எஸ்.எம். சமூன், பொத்துவில்.

ராஜேந்தர் தன்னுடைய மகனை ஹீரோவாக விற்பனை செய்ய எடுத்திருக்கும் விவரணப்படம். இனி, யாரும் நல்ல இயக்குனர்களின் கையில்தான் சிலம்பரசன் நடிக்க ஆரம்பிக்க வேண்டும். சிலம்பரசன் வளர்வதன் மூலம் தான் அவரது தந்தை தன்னுடைய திரைத்துறை அஷ்டாவதானங்களையும் பெருமனதோடு தியாகம் செய்து தமிழ் சினிமா இரசிகர்களைக் காப்பாற்றி உதவுவாரென்றால்... அதற்காக நாம் பிரார்த்திப்போம்!

♟♟

★ **மேதைகள் எனப்படுவோர் யார்?**

பீற்றர் ஜோன்தாஸ், மன்னார்.

நம்நாட்டில் இப்போது வாழ்பவர்களில் உதாரணம் சொல்ல எனக்குத் தெரிந்து யாருமில்லை. ஒருவகையில் இது எதிர்காலம் தீர்மானிக்கின்ற விசயம்தான். நாமெல்லாம் ஆறுதல் கொள்ள ஒரு கதை.

ரீட்டா ஹேவொர்த் -1940களின் பிற்பகுதியில் உலக இரசிகர்களின் தூக்கத்தைக் கலைத்த நடிகை. நாடோடிக் குறத்தி (ஜிப்ஸி) நடிப்புக்கு இந்திய நடிகைகள் (தமிழ், ஹிந்தி உட்பட) எல்லோருக்குமே ஆதர்சம் இவர்தான். ஆனாலும், யாரும் இவரை மிஞ்சியதில்லை. உலகத் திரைப்படத்தின் மகா கலைஞன் எனப் போற்றப்படும் ஆர்ஸன் வெல்ஸை திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றுக் கொண்டு, பின்னர் உலகப் பணக்கார முஸ்லிமான அலிகான் என்பவரை மணந்து கொண்டார். ஆர்ஸன் வெல்ஸ் பற்றி ரீட்டா கூறியது. "ஒரு மேதையை யாரும் மணந்துகொள்ளக்கூடாது."

★ **உலக அழகுராணிப் போட்டிக்கு நமது நாட்டில் இருந்து யாரும் செல்வதில்லையா?**

அஜந்தகுமார், அக்கரைப்பற்று.

போகிறார்கள்தான். ஆனால், கவனம் பெறுவதற்கு இவர்கள் தேங்காய் உணவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

♟♟

★ **தென்னாபிரிக்காவில் இலங்கை அணி?**

இரா. குமரேசன், கினலள் எல்ல.


சுதந்திரம் கிடைத்த மாதத்தில் சோகத்தை எதிர்கொள்ளப் போகிறோம்.

♟♟

★ **"சம்பா" தொடரில் சம்பாவாக நடிப்பவர் தமிழ் நடிகையா?**

மு. விமலாதேவி, கொழும்பு-13.

இல்லை. மலையாள நடிகை. பாவ்னா. திருமணமான பிறகு நடிக்க வந்திருக்கும் சாதனையாளர்.






## மில்லியன் ரூபா பொம்மை

இந்த அழகிய பொம்மையின் பெறுமதி சுமார் 10 இலட்சம் ரூபாய். ஏராளமான வைரக் கற்களால் அலங்கரிக்கப்பட்ட இந்தப் பொம்மை தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக்கிலுள்ள சுப்பர் மாக்கட் ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொம்மையின் விற்பனையால் கிடைக்கும் நிதி சிறுவர் நலன் பேணும் அறக்கட்டளை ஒன்றிற்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## மதம் எனும் போதை...

கத்தி, கோடரி எடுத்துக் கடவுளைக் காப்பாற்ற வேண்டும் என்று எந்த மதமும் போதிப்பதில்லை.

இந்தியாவின் அயோத்தியில் இருந்த பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாளான டிசம்பர் 6ம் திகதியை விஷ்வ ஹிந்து பரிஷத் மற்றும் தீவிர போக்குடைய இந்துத்துவ அமைப்புக்கள் வெற்றி நாளாகக் கொண்டாடின.

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களையே படத்தில் காண்கிறீர்கள். முஸ்லிம்களின் பெருநாள் தினமும் 6ம் திகதி அமைந்திருந்ததால் இந்தியாவின் பல நகரங்களிலும் அன்றைய தினம் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

## போர் வேண்டாம்

யுத்தத்திற்கு எதிரான கோசம் உலகம் முழுவதிலுமிருந்து எழுப்பப்பட்டாலும் ஈராக்கைத் தாக்கி, சதாம் ஹுசைனைப் பதவியிலிருந்து இறக்கும் தனது முடிவில் மாற்றம் இல்லை என்பதை அமெரிக்கா திட்டவட்டமாகக் கூறி வருகிறது.

அமெரிக்காவின் நட்பு நாடுகளில் ஒன்றும், பிராந்தியத்தின் முக்கியமான ஒரு நாடுமாகிய துருக்கியில் ஈராக் மீது போர் தொடுப்பதைக் கண்டித்து இஸ்லாமிய அமைப்புக்கள் பாரிய ஆர்ப்பாட்டங்களில் குதித்துள்ளன.

இது அத்தகையதொரு ஆர்ப்பாட்டக் காட்சி. மாணவிகள் யுத்தத்தை ஆட்சேபிக்கும் சுலோகங்களுடன் ஸ்தான்புல் நகரில் காணப்படுகின்றனர்.






## எமனாக மாறிய தாதி

சங்கிலியால் கட்டப்பட்டு நீதி மன்றக் கூட்டில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்த ஹங்கேரிய நாட்டுப் பெண்ணின் பெயர் ரீமியா பலூடி. இவர் அரசாங்க வைத்தியசாலையில் தாதியாகப் பணியாற்றியவர்.

இவரது சேவையின் உள்ளார்ந்த அர்த்தம் அதிகாரிகளுக்குத் தெளிவடையும் போது இவர் சுமார் 40 உயிர்களுக்கு உலை வைத்திருந்தார். கடுமையான நோயாளிகளைச் சில நேரங்களில் அவர்களது விருப்பத்துடனும் பல தடவை விருப்பம் இன்றியும் கொல்வதற்கு இந்தத் தாதி துணை புரிந்திருக்கிறார். 40 பேர் இறந்த பின்னரே விசயம் அம்பலத்துக்கு வந்தது. இப்போது இவருக்கு ஆக 9 ஆண்டு சிறைத்தண்டனை மட்டும்தான் கிடைத்திருக்கிறது. இதையும் எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாகக் கூறுகிறார்.




## ராஜசேகரனின் 'நேதாஜி'

'பாரதி' படத்தை இயக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரியான ஞான ராஜசேகரன் அடுத்ததாக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் குறித்த படத்தை எடுக்க உள்ளார்.

'மோகமுள்' மூலம் தமிழ் சினிமாவில் காலடி எடுத்து வைத்து எல்லோரையும் 'அட'போட வைத்த ராஜசேகரன் 'பாரதி' படத்தின் மூலம் தமிழர்கள் மனதில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்தார். அடுத்ததாக நேதாஜியைப் படம் பிடிக்க உள்ள இவர் திரைக்கதையையும் எழுதி முடித்துவிட்டார். படத்தைத் தமிழில் ரிலீஸ் செய்துவிட்டு அதைத் தெலுங்கு, இந்தி, வங்காள மொழிகளில் 'டப்' செய்யத் திட்டமிட்டுள்ளார்.

தமிழர்கள் நல்ல படத்தை நிச்சயம் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை தனக்கு நிறையவே இருப்பதாகக் குறிப்பிடும் ராஜசேகரன் கேரளத்தில் போக்குவரத்துத்துறைச் செயலாளராக உள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. பாரதி படத்துக்குப் பிறகு என்னை வைத்துப் படம் தயாரிக்கத் தமிழில் பல முன்னணித் தயாரிப்பாளர்களும் முன் வந்துள்ளனர் என்கிறார்.

நேதாஜியின் வரலாற்றை அவரது குழந்தைப் பருவம் முதல் ஆரம்பித்து தேசிய இராணுவத்தை நிறுவி விடுதலைப் போராட்டம் நடத்தியது, மர்மமாக இறந்தது என அவர் வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் தொட்டுவிடத் திட்டமிட்டிருக்கிறார் ராஜசேகரன். படப்பிடிப்பு ஒரிஸ்ஸா, ஜெர்மனி, லண்டன், மலேசியா ஆகிய நாடுகளில் நடக்க உள்ளது.

நேதாஜியின் இராணுவத்தில் பணியாற்றியவர்களில் பெருமபான்மையினர் தமிழர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அடுத்து தனக்கு ஒரு பிறவி இருந்தால் தமிழனாகப் பிறக்கவே விரும்புகிறேன் என்று கூறியிருக்கிறார் ராஜசேகரன். நேதாஜியின் பாத்திரத்தில் வங்காள நடிகரான சாஸ்வதா சாட்டர்ஜி நடிக்க உள்ளார்.



## ☆ மினி சினி ☆

★ டாக்டர் கே. ஏ. குணசேகரன் எழுதிய 'இசை மொழியும் இளையராஜாவும்' புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய நாசர், "இரண்டாயிரம் வருஷமா ஒருத்தர் வாழ்ந்திட்டிருக்கார்னு சொல்லி ஒரு ஆள் அறுபது கோடி ரூபாய்க்குப் படத்தை விற்றிருக்கான்" என்று ரஜனியை ஒரு பிடிபிடித்தார்.

★ ஆளவந்தானுக்குப் பிறகும் கமல் திருந்தியதாகத் தெரியவில்லை. 'அன்பே சிவம்' படத்திற்குத் தேவைக்கு அதிகமாகச் செலவு செய்து தயாரிப்பாளர்களை ஒட்டாண்டி ஆக்கி வருகிறாராம்.

★ நடிகர் சூர்யா, கௌதம் மேனனின் புதிய படத்தில் நடிக்கிறார். ஜோடி ஜோதிகா. இதைத் தொடர்ந்து பாலா, ஃபாசில், சரண் ஆகியோர் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ ஆஸ்கார் ஃபிலிம்ஸ் நிறுவனத்துக்கு, ஸ்ரீகாந்தை வைத்துச் சரண் இயக்கப் போகும் அடுத்த படத்திற்கு 'ஜே ஜே' என்று பெயர் இட்டிருக்கிறார்கள்.

★ காதல் அழிவதில்லை திரைப்பட நாயகி ஷாமி மலையாளப் படம் ஒன்றில் நடித்துக் கொண்டிருந்த போது யானை கீழே தள்ளி மிதிக்கப் பார்த்தது. அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

## அப்பாவுக்கு மகன் பாராட்டு

எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கிய முத்தமிட்டலாமா... படத்தைப் பார்த்து ரசித்த விஜய் "இது ஆங்கிலப் படம் பார்ப்பதைப் போல ஒரு உணர்வை ஏற்படுத்துகிறது. இப்படியொரு சஸ்பென்ஸ் படத்தை சமீபத்தில் நான் பார்த்ததே இல்லை!" என்று சொன்னார். மகனுடைய பாராட்டைக் கேட்டு மிகுந்த பரவசமாகிவிட்டார் எஸ்.ஏ.சந்திரசேகரன். அடுத்து அவர் இயக்கும் அதிரடி ஆக்ஷன் படத்தில் விஜய கதாநாயகனாக நடிக்கிறார்.

## செரீன் மறுப்பு

எங்கே தனக்கு கவர்ச்சி நடிகை என்ற முத்திரை பலமாக விழுந்து விடுமோ என்று பயந்துபோன செரீன், நீச்சல் உடையில் நடிக்க வேண்டும் என்றாலே முகம் சுளித்து மறுத்துவிடுகிறார்.

## சிம்ரனின் கோபம்

சிம்ரன் பயங்கர டென்ஷனுடன் காணப்படுகிறார். காரணம், ராஜுசுந்தரத்துடன் மீண்டும் இணைந்து நடிப்பீர்களா? என்று வாரப் பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்ட கேள்விதான்! பழைய விசயத்தைக் கிளறினால் கோபம் வரத்தானே செய்யும்?



## நடிகர் ஷாம் காதல் திருமணம்

நடிகர் ஷாம் எதிர்வரும் 15ம் திகதி திருமணம் செய்து கொள்ள இருக்கிறார்.

மதுரையைச் சேர்ந்த ஷாமின் இயற்பெயர் சம்சுதீன் இப்ராகிம். பி.கொம். பட்டதாரியான இவர் மதுரை கல்லூரி ஒன்றில் மாணவனாக இருக்கும் போதே காஷிஸ் என்ற மாணவியைக் காதலித்து வந்தார். கல்லூரியில் இருந்து விலகி மும்பாயில் மாடலிங் செய்த போதும் தமிழ் சினிமாவில் நடிப்பதற்காக சென்னை வந்த போதிலும் இவர்களது காதல் தொடர்ந்தது.

சுமார் 7 வருடங்கள் இரகசியமாக வைத்திருந்த இந்தக் காதலை சமீபத்தில் ஷாம் தனது வீட்டில் தெரிவித்திருக்கிறார். இதனை அடுத்து இரு வீட்டாரினதும் சம்மதத்துடன் எதிர்வரும் 15ம் திகதி ஷேனாய் நகரிலுள்ள ஷாமின் வீட்டில் திருமணம் நடக்கவிருக்கிறது.

காஷிஸ்ஸின் பூர்வீகம் பஞ்சாப் என்ற போதிலும் மும்பாயிலேயே பிறந்து வளர்ந்தவர். இவரும் முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

## காதோடு சொல்லுகிறோம்

**கொடி இடை நடிகையின்** முதல் காதலரான இளம் வி.ஐ.பி. 'அப்பா' நடிகர் நடிகையோடு உறவு முறிந்து பேச்சு இல்லாமல் இருந்தார். அண்மையில் சிங்கப்பூரில் நடந்த கலைவிழாவில் இருவரும் சந்தித்து உறவு வைத்துக் கொண்டுள்ளனர். புதுப்பித்த உறவை வலுப்படுத்த முயலும் போதெல்லாம் 'அன்பே' நடிகர் குறுக்கே வந்து விடுகிறாராம். காதல் 'இதுதானா?

**தாடி வைத்த காமெடி நடிகரின்** புத்திரன் சினிமாவில் இப்போதுதான் அறிமுகமானார். தந்தையைப் போலவே மகனும் லூட்டி அடிப்பதில் வல்லவராக இருப்பதாகக் கோடம்பாக்கமே கிசுகிசுக்கிறது. கரடிக்குப் பிறந்தது கரடிக் குட்டிதானே?

**டான்ஸ் மாஸ்டர் மகனும் மகளும்** அடிக்கடி காதல் மொழி பேசுகின்றனர். இப்போது இருவரும் ஒரு படத்தில் வேறு இணைந்து நடிக்கிறார்கள். இதனைப் பார்த்த கலைக்குடும்பத்தின் வாரிசு எரிச்சலாகிப் போய் சந்திப்பவர்களிடமெல்லாம் அவர்களின் காதலைப் பற்றிக் கூறி வருகிறார். பொறாமைக்குப் பொறுமை கிடையாதா தம்பி?

**விஜயகாந்த் நடித்து வெளியான 'ரமணா'** எனது கதை எனச் சொல்லியுள்ளார் நந்தகுமார் என்ற உதவி இயக்குநர். "இதற்காக படப்பிடிப்பின் போது எனக்கு ரூபா. 25 ஆயிரம் பணம் தந்து அடுத்த படத்தை இயக்கிட வாய்ப்பும் தருவதாக விஜயகாந்த் கூறினார். ஆனால் இப்போது எல்லாமே அம்பேல் ஆகிவிட்டது" எனப் புலம்புகிறார் நந்தகுமார்.





...மல்-காயத்ரி ரகுராம்
படம்: ஸ்டைல்

# சினிவிசிட்

## தேவயானியின் கடனை அடைக்க கூலி வேலை செய்த முரளி

தமிழ் சினிமாப் படங்களில் கதாநாயகன், நாயகிக்காகச் செய்யும் தியாகங்களுக்கு எல்லையில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் நாக்கை அறுத்துக் கொண்டார்கள். கண்ணைக் குருடாக்கிக் கொண்டார்கள். அவற்றோடு ஒப்பிடுகையில் இது பரவாயில்லைதான். தேவயானியின் கடனை அடைக்க முரளி கூலி வேலை செய்கிறார்.

கல்யாண் தனது நண்பர்கள் ரமேஷ், கல்யாண புரோக்கர் ஆகியோருடன் கவிதாவைப் பெண் பார்க்கப் போனார். இவர்கள் போன நேரம் கவிதாவின் வீட்டு வாசலில் கும்பலாகச் சில ரவுடிகள் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். பெண் பார்க்கப் போன கல்யாணுக்குக் கோபமாக வந்தது. அந்த ரவுடிகளை மடக்கி, "ஏன் தகராறு செய்யறீங்க?" என்று கேட்க, "கவிதா எங்க பண்ணையார் வீரராகவத்தேவரிடம் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கினாங்க. திருப்பித் தரலே" என்றார்கள்.

"பத்தாயிரம் ரூபாய்க்காக ஒரு பொம்பளை கிட்டே தகராறு செய்ய அனுப்பின உங்கள் பண்ணையாரை நாங்க பார்க்கணுமே" என்று சொல்லி மூவரும் கிளம்பிப் போய் வீரராகவத்தேவரைச் சந்தித்தார்கள்.

"கடன் வாங்கினவங்க கடனைக் கட்டணும்...இல்லேன்னா வக்காலத்து வாங்கிட்டு வர்ற நீங்க கட்டுங்க" என்று வீரராகவத்தேவர் சொல்ல, "காசு இல்லே" என்று கல்யாணும் நண்பர்களும் சொன்னார்கள். "அப்படின்னா அந்தப் பொண்ணுக்காக, கடனை அடைக்கிறதுக்காக எங்கப் பண்ணையிலே கூலி வேலை செய்து கடனை அடைச்சிருங்க" என்றார். வேறு வழியில்லாமல் அவரது பண்ணையில் கூலி வேலை செய்தனர் மூவரும். இப்படியொரு காட்சி ராதே பிலிம்ஸின் 'காதலுடன்' படத்துக்காகப் படமானது. கல்யாணாக முரளி, கவிதாவாக தேவயானி, ரமேஷாக ரமேஷ் கண்ணா, கல்யாண புரோக்கராக வையாபுரி, வீரராகவத்தேவராக விஜுசக்கரவர்த்தி நடித்தனர்.

## ஸ்ரீகாந்துக்குப் பதிலாக ஷாம்

விக்ரமன் இயக்கும் ப்ரியமான தோழி...யைத் தொடர்ந்து ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்கும் புதுப்படத்தை மணிபாரதி இயக்குகிறார். இதில் ஸ்ரீகாந்த் நடிக்க மறுத்துவிட்டதால், தற்போது ஷாம் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். அவரது ஜோடியாக பல கதாநாயகிகளின் பெயர் அலசப்பட்டு, கடைசியில் ரதியின் பெயர் பலமாக உச்சரிக்கப்படுகிறது!



## ...ஜனியின் ...டுத்த படம்

...து அடுத்த படத்துக்கு கே.எஸ். ...மார் மற்றும் ஷங்கரிடம் கதை தயா...று ரஜனி கூறிவிருந்தாலும் ... பாலா, விக்ரமன் ஆகியோரிடமும் ... பார்த்துவிட ரஜனி தரப்பில் ... செய்யப்பட்டுள்ளது.

...பா' கொடுத்த அடியால் அப்செட் ...ருந்த ரஜனி பழையபடி உற்சாக... திரும்பி விட்டார். குறுகிய காலத்...பாக ஒரு படத்தை விறுவிறு... எடுத்து வெளியிட ரஜனி முடிவு...ள்ளார்.

...து புதிய படம் பெண்களைக் கவ...கையில் இருக்க வேண்டும் என்பது... எண்ணமாம்.

...னால், ரஜனியின் அடுத்த படம் ...யான குடும்பச் சித்திரமாக, அதே ...ல் காமெடிக்கு அதிக முக்கியத்து...ண்டதாக இருக்கும் என்கிறார்கள். ...ல் ஆன்மீகம் மட்டுமல்ல அரசிய... சத்தமாகத் தவிர்த்துவிடவும் திட்ட...க்கிறார் ரஜனி.

...னியை வைத்து இரு சூப்பர் ஹிட் ...ளை இயக்கிய (முத்து,படையப்பா) ..., ரவிக்குமாரையே அடுத்த படத்... இயக்குநராகப் போட ரஜனி ...ம் தெரிவித்துள்ளாராம்.

...னால், ரவிக்குமார் வேண்டாம் ... அவருக்கு நெருங்கிய வட்டாரம் ...சனை கூறியுள்ளதாம். அதற்கு ...ள் கூறும் காரணம், சுவாரஸ்யமா...

...ங்களது இமேஜ் சரிந்துள்ள நிலையில், ரவிக்குமாரை வைத்துப் படம் எடுத்து ... வெற்றி பெற்றால், அது ரவிக்குமாருக்குத்தான் பெரும் பெயரைக் கொடுக்கும் ...யையே காப்பாற்றியவர் ரவிக்குமார் என்று பேச்சுக் கிளம்பிவிடும். எனவே ... யாரையாவது போடலாம்" என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

...ந்த யோசனை ரஜனிக்கும் மறு சிந்தனையை ஏற்படுத்தியுள்ளதாம். எனவே ...ல், ரவிக்குமார் தவிர ஷங்கரிடமும் கதை தயாரிக்கச் சொன்னாராம் ரஜனி. ...தே நேரத்தில் குடும்பப் படங்களைத் தருவதில் முன்னணியில் உள்ள விக்ரமன் ...ம் வித்தியாசமான கதைகள் சொல்லும் சேரன், பாலா ஆகியோருடனும் பேசிப் ...துவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

...விக்குமார் இல்லாவிட்டால் ரஜனியின் அடுத்த படத்தைப் பெரும்பாலும் விக்ர...இயக்கலாம் என்று கூறப்படுகிறது. ரஜனியின் நட்பு வட்டாரத்தில் விக்ரமனுக்குத்தான் ... ஆதரவு உள்ளதாகத் தெரிகிறது.

...மல்ஹாசனின் ஆஸ்தான தயாரிப்பாளரான தேனப்பன்தான் ரஜனியின் இந்தப் ... படத்தைத் தயாரிக்கவுள்ளார்.

...சை, தேவா என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது. சௌந்தர்யாவை ஹீரோயினாகப் ...லாம் என்ற பேச்சு உள்ளது. ஆனால், அவர் கன்னடத்துக்காரர் என்பதால் ...யில்லாத பிரச்சனையை சிலர் கிளப்பலாம் என்றும் யோசிக்கிறார்கள்.முதலில் ...னைத்தான் ஜோடியாகப் போட முடிவு செய்யப்பட்டது. 'நியூ' படத்தில் சூர்யா ... உதட்டைப் பிடி கவ்வு கவ்விய சிம்ரனின் மார்க்கட் குறித்து ரஜனி சிந்திப்பதாகத் ...கிறது. இந்தப் படம் வெளிவந்தால் சிம்ரனுக்குப் பெண்கள் மத்தியில் பெயர் ...ம். அவரை வைத்துக்கொண்டு குடும்பப் படத்தைத் தர முடியாது என்று ரஜனி ...ில் யோசிக்கப்படுகிறது.

...து எப்படியிருந்தாலும், ஜிபூம்பா, மாயாஜாலத்தை எல்லாம் விட்டுவிட்டுப் ...ற மாதிரி நல்ல படம் எடுத்தால் அதை தமிழ் இரசிகர்கள் நிச்சயம் ...ப்பார்கள் என்பதை ரஜனி புரிந்துகொண்டால் சரி!



## பிரியங்கா காட்டில் மழை

கன்னட வெறியர்களின் தாக்குதலுக்கு இலக்கான 'எச்டுஜ' என்ற கன்னடப் படத்தில் (தமிழில் 'காவேரி' என்ற பெயரில் டப் ஆகியுள்ளது) நடித்துள்ள பிரியங்கா திரிவேதிக்கு, தமிழில் நிறையப் படங்கள் புக் ஆகியுள்ளதாம். அஜித்தின் ராஜா மூலம் தமிழுக்கு வந்தாலும் காவேரியில் இவர் அள்ளிவிட்ட கவர்ச்சியால் இப்போது தமிழில் வாய்ப்புகள் குவிந்து வருகின்றன.

அறிமுகமானது கன்னடம் என்றாலும் தமிழகத்தில் தனக்கு அதிக வாய்ப்புகள் வந்துள்ளதால் ரொம்பவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார் பிரியங்கா. இனிமேல் தமிழ்ப் படங்களில் அதிக ஈடுபாடு காட்டப் போகிறாராம். எவ்வளவு கவர்ச்சி காட்டவும் ரெடி. ஆனால், உடை குறையக் குறைய சம்பளம் கூடும் என்கிறார் வெளிப்படையாக.

## ...ர்யாவின் ஹீரோயிசம்

...ன்மையான காதல் கதை கொண்ட படங்கள் ...லே மறுத்துவிடுகிறார் சூர்யா. அதிரடி...ன் கதை என்றால் மட்டுமே பொறுமையாகக் கேட்கிறார். நந்தா, ஸ்ரீ ஆகிய படங்களுக்குப் பிறகு தனக்கு ஆக்ஷன் ஹீரோ என்ற இமேஜ் ஏற்பட்டு இருப்பதாக அவர் நம்பிக் கொண்டிருக்கிறார்.



## உன் தெருவும் நானும்

உன் தெரு வழியே
நடந்து நடந்து தேய்ந்து போனது
என் பாதணிகள் மட்டுமல்ல
என் பாதமும் தான்

உன் தெரு வேலிகளின்
எல்லாப் பூக்களிலும் உனது சாயல்
மனநிலை சரியில்லை எனக்கு...

உன் தெருவில்
என் வாலிபத்தை தொலைத்ததால்
தினமும் அலைகின்றேன்
தேடுவதாக எண்ணிக் கொண்டு...

உன் தெருப் புழுதியில்
என் இதயம் கிடக்கும்
குனிந்துகொண்டே போகிறாயே
கண்டெடுத்தால் கட்டாயம்
கடிதம் போடு...

என்னைப் பிடிக்கவில்லை
உனக்கு மட்டுமல்ல
உன் வீட்டு நாய்க்கும்...ஏன்
உன் தெருவுக்கும்தான்

உனக்கு ஒரு ஜந்துவாக...
பிறருக்கு மனித சாயலாக...
உன் தெருவுக்கு ஒரு ஜடமாக
தெரிந்தாலும் நான்
உன் ஞாபகங்களை சுமக்கும்
வெறும் மனச்சுமை தாங்கிதான்

ஏன் அலட்சியப்படுத்துகிறாய்
நான் அழகாய் இல்லை என்பதாலா...?
நீ கூட ஐஸ்வர்யா இல்லையே
ஆனாலும்...
எனக்கு நீ தேவதைதான்...

திருமலை. தாமரை மகன்.

## இரக்கமுள்ள பெண்ணாக!

வயது இருபது
நிரம்பிய இளைஞன்
இதய நோயால் பாதிக்கப்பட்டான்.
அந்த இதய நோய்தீர்க்கும் வைத்தியர்
இன்னும் அவனை நாடி வந்து
நாடி பிடித்து
நல்ல வார்த்தைகள் சொல்லவில்லை.
இரண்டு வருடங்களாக
அவன் நோய் தீர்க்கும்
வைத்தியனைக் காணாமல் ஏங்குவது
அவன் இதயம் மட்டுமல்ல
அவனுடைய மனசும்தான்
காலம் கடந்ததால்
இவன் காதல் நோயும்
உயிர் பறிப்பதற்கு
ஆயத்தமாகி விட்டது.
மறைவில் இருந்து
காதல் மருந்தை ஊற்ற நினைக்கும்
அவள் எண்ணம்
ஏன் எதிரே வந்து
ஒருமுறை புன்னகைத்தால்
என்னுயிர்
என் இதயம்
இயங்க மறுத்த என் நாடிகள்
எல்லாம் சீராக இயங்கும்
தோழியிடம் காதல் வார்த்தைகளை
தூதுவிடும் பெண்ணே!
இனியும் காத்திருக்காது என் இதயம்
என் எதிரே வந்துவிடு
காதல் நோயைத் தீர்க்கும் வைத்தியனாய்
இல்லை என்றால்
இறந்துவிடும் இதயத்தைத் தடுக்கும்
இரக்கமுள்ள பெண்ணாக.

பொ. சுரேஸ், மண்டூர்-01.

## கனவுத் தேவதை

நினைவுகளில்
சங்கமிக்கும் கனவுகள்
கருவழிந்து கருக்கொள்ளும்
நிலைபோல- என்னுள்
விட்டு விட்டு
விடாப்பிடியாக...

நித்திரை
குலையும் போதெல்லாம்
கனவுகள்
நினைவில் நில்லாமல்
கிழிந்து போகும்...

மீண்டும் விழிப்பில்
தைக்க முயலும்
முயற்சிகள்...
காதறுந்த ஊசியாய்
கைகூடாமல் போகும்.

குளத்தில் போட்டுவிட்டு
ஆற்றில் எப்படித்
தேடுவது?
ஆற்றிலும் இல்லை
குளத்திலும் இல்லை
இனி பெய்யப் போகும்
மழையிலாவது...

கனவுகளில்
நடனமாடி -தனது
காற்சிலம்பை- என்
இதயத்தில் உடைத்துப்
போட்டவள்
அவளாய்த் தானிருக்கும்?
அவளது பாதச்சிலம்பைத் தவிர
அவளை இன்னும்
தெரியவில்லை

எம். சுயர்சன், கோண்டாவில்.

## காதல்

அந்த நீல வானில்
மெல்லிய வெள்ளைக் கீற்றுக்கள்
நகர்கின்றன.

கதிரவனின் சூட்டைத் தணித்து
அலைகளில் தவழ்ந்து வரும் தென்றல்
அவனை முகர்ந்து நனைக்கின்றது.

அலைகளும் வந்து மோதி
பின்வாங்கிச் செல்கின்றது.

"ஐந்து மணிக்கு வருவதென்றாள்
மணி ஐந்தரையைத் தாண்டிச் செல்கின்றது.
அவள் இன்னும் ஏன் வரவில்லை"
அவனது உள்ளத்தில் எழும் கேள்வியது.

"வருவாள். வந்து விடுவாள்"
அவனுக்குள் சமாதானம் கூறிக்கொள்கின்றான்.

கதிரவன் விடைபெற

## தவிப்பு

இருள் சூழ்கின்றது
வெறுப்புற்று விடைபெறுகின்றான்.

காரிருள் புடைசூழ
அவள் ஓடோடி வருவதைக் கண்டு
அவன் மெய் மறக்கையில்
"மன்னிக்கவும் அன்பரே"
கெஞ்சலாகக் கேட்டாள்.

"தாமதமேன்?" தவித்திருந்த
சினத்தில் அவன் வினவ...

"என் மனசுபட்ட வேதனை
உங்களுக்கு எங்கே தெரியப் போகின்றது."
அன்புடன் கடிந்து கொண்டவள்...


"வைத்தியசாலை ஊழியர்களின்
திடீர் உண்ணாவிரதம்- போராட்டமாம்.
என் மனதின் போராட்டம் அவர்களுக்கெங்கே
புரியப்போகின்றது"

அவளும் ஒரு தாதி
பாவம் அவள்தான் என்ன செய்வாள்

தன் காதலியை அன்புடன்
தன் மார்போடு அணைத்துக் கொள்கின்றான்.
காதல் நிலா வானில் பிரகாசிக்கின்றது.

எம். முகம்மட் ஜலீஸ், சவூதி அரேபியா.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். நாளிர்
வயது: 26
முகவரி:
இல, 57/10,
அனுராதபுர வீதி,
புத்தளம்.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
A. Jeevarathnam
வயது: 25
முகவரி: No. 33/14,
Baseline Cross Road,
Seevali Pura, Colombo-08.
பொழுது போக்கு:
ரி.வி., கதைப்புத்தகம்.



பெயர்: R. Shiwa
முகவரி: No. 775-6
Hwasung Gun,
Taian EuB - Neun 3 R 1,
P.C. 445-970 Dea Duck Sunin Co.
Kyoung Kido, South Korea.
பொழுது போக்கு:
ரீ.வி. பார்த்தல்.

## பிடிக்கும்

பேசப் பிடிக்கும் அதிலும்
அவன் பெயரைத்தான் பிடிக்கும்...
நிறங்கள் பிடிக்கும் அதிலும்
அவன் நிறத்தைத்தான் பிடிக்கும்...
வாழப் பிடிக்கும் அதிலும்
அவனோடு வாழத்தான் பிடிக்கும்...
தொலைபேசியைப் பிடிக்கும் அதிலும்
அவன் மணி ஓசையைத்தான் பிடிக்கும்...
படிக்கப் பிடிக்கும் அதிலும்
அவன் பக்கங்களைத்தான் பிடிக்கும்...
போகப் பிடிக்கும் அதிலும்
அவன் ஊரைத்தான் பிடிக்கும்...
மனம் பிடிக்கும் அதிலும்
அவன் வேஷம்தான் பிடிக்கும்...
பேச்சைப் பிடிக்கும் அதிலும்
அவன் பொய்களைத்தான் பிடிக்கும்...
பச்சை பிடிக்கும் அதிலும்
பார்க்க எனக்கு நீலமே பிடிக்கும்...

ஏ. ஜே. ஹப்ஸா, சம்மாந்துறை.

## அழகோ?

அழகோ?
கொடியிடை கமழும்
மல்லிகையின் மனமது
காற்றின் கலந்துவர- பின்னே
கான மகளொருத்தி கனிந்து
நடந்து வரக்கண்டேன்!

செவ்விதழ் சிரிப்பும்
சேர்ந்தே அவள் முக அழகும்
என் இதயத்தை இம்சிக்க
என்னவென்று திகைத்தேன்!

மெல்லிடை. அசையும்
மறைபடாத மேனியும்
கண்டார்க்கு
கல் நெஞ்சும் உருகிடும்
காதல் வயப்பட்டிடும்!

தேவதை போல் நீ
தெருவில் வரக்கண்டு
கணப்பொழுதில் உன்னை- என்
காதலியாய் நினைத்துவிட்டேன்!

உன்னருகில் வந்திருந்து
"பிச்சை" என்று கேட்டவனை
தூரப்போ சனியன் என்று
கூசாமல் திட்டினாயே!

இத்தனை அழகுடன்
படைத்தவன்-ஏனோ
உனக்கு
இதயத்தை வைக்க
மறந்துவிட்டான்
இனி எப்படி உன்னை
காதலிப்பது?

மு. கீர்த்தியன், லபுகெலை.

## தேன் கிண்ணம்

### உன்னால்

ஆகாயத்தில் ஆடும்
அழகான காற்றாடி
அறுந்த போனால்-அது
அனாதையாய்
அழிந்து போகும்.
வாழ்வோ சாவோ!
உன்னோடுதான் என்று
வசந்தமாய் பேசினாய்
வார்த்தைகளை அன்று
வளைந்த வானவில்லாய்
மறைந்தது வாழ்க்கை.
வரையறுக்கப்படாமல்
மௌனமாய் சிந்துகின்றேன்
இரத்தங்களை கண்ணீராக
இதயம் தேடிய அழியாத
பரிசு இதுவே...

ந. அருண்ரூபன்-
கிளிவெட்டி.

### ஹைக்கூ

கலந்து வைத்த...
பாலுக்குள் எறும்பு...
உயிர்ச்சத்து...

புத்தகத்தைப் புரட்டி...
பாடம் படிக்குது...
காற்று...

குளிர் தாங்க முடியாது...
அசைகின்றது...
போர்வை...

பூத்த மரம் நடக்குது...
அவள் கூந்தலில்...
பூக்கள்...

நெளிவு சுழிவுகளால்...
நிமிர்ந்து நிற்கிறது...
ஓவியம்...

என். சஹாப்தீன்,
அஸ்ஹர் வித்.

## நினைத்து, நினைத்து சிரிக்க

தெருவில் ஆடுகள் போய்க்கொண்டிருந்தன. ஆடுகளின் காதுகளில் பித்தளைத் தகடுகள் மாட்டியிருந்தது. வங்கியில் கடனுக்கு வாங்கியதுக்கு அடையாளமாக கம்மல் போல ஆடுகளின் காதுகளில் டோக்கன் மாட்டியிருந்தது. அதைப் பார்த்த ஒரு சின்னப் பையன், கூட வந்த அப்பாவிடம், "அப்பா ஆட்டுக்கு கூட கம்மல் போட்டிருக்கிறாங்களே...?" என்று கேட்டான்.


அதுக்கு அப்பா, "அது வங்கியில் கடனுக்கு வாங்கின ஆடு. அதனால்தான் கம்மல் போட்டிருக்கு" என்றார்.

பையன் கோபமா, "அப்படியென்றால்...அம்மாகூட காதுல கம்மல் போட்டிருக்காங்க...அம்மாவும் வங்கியில் கடனுக்கு வாங்கிட்டு வந்தவங்கதானா?" என்று கேட்டான்.



"எதுக்கு அந்தப் பிச்சைக்காரிக்கு காசு போட்டீங்க?"
"பார்க்கிறதுக்கு உன்னை மாதிரியே இருந்தா அதுதான் பயந்து போட்டுட்டேன்"

தலைமையாசிரியர் கூப்பிட்டதால் வெளியே போன டீச்சர் மறுபடியும் கொஞ்ச நேரத்தில் வகுப்புக்கு வந்தாங்க. உள்ளே வந்த டீச்சர் வகுப்பு மொத்தமும் துளி கூட சத்தமில்லாமல் அமைதியாக இருக்கிறதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, "என்ன எல்லோரும் இவ்வளவு அமைதியாக இருக்கிறீங்கள்? ஆச்சரியமாக இருக்குதே?" என்றா. உடனே ஒரு மாணவன் "நீங்க எல்லோரும் பேசாமல் அமைதியாக இருந்தீங்கன்னா நான் நம்ப முடியாம அதிர்ச்சியில செத்துடுவேன்" அப்படியென்று நீங்க போகும்போது சொல்லிப்போட்டு போனீங்களே டீச்சர், அதனாலதான் நாங்க அமைதியாக இருக்கிறோம்" என்று எதிர்பார்ப்போட, சொன்னாங்களாம்.



ஒரு டாக்டருடைய மகன், தன் நண்பனுக்கு அப்பாவின் க்ளினிக்கை சுற்றிக் காட்டினான். ஒரு பீரோவைத் திறந்தான். உள்ளே ஒரு எலும்புக்கூடு நின்றிருந்தது. "இது யாருடைய எலும்புக்கூடு?" என்று கேட்டான் நண்பன். "என் அப்பாவிடம் வந்த முதல் பேஷண்டுடையது" என்றான் டாக்டருடைய மகன்!

இரண்டு குடிமகன்கள் ஏக கிக்கோடு மதுபானக் கடையை விட்டு கிளம்பினார்கள். ஐந்து நிமிடம் கூட ஆகியிருக்காது. அவர்களில் ஒருவன் மட்டும் கடையை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்தான். "சீக்கிரம் வாங்க....என் நண்பன் ஒரு கிணத்துல விழுந்துட்டான்" என்றான் நா தழுதழுக்க...

"ஐயையோ...!" என்று பதறிய கடைக்காரன், "சரி...அந்த கிணத்துல எவ்வளவு தண்ணி இருக்குன்னு தெரியுமா?" என்று கேட்டான்.

"அவனோட முழங்கால் அளவுக்கு தண்ணி இருக்கு!" என்றான் வந்தவன்.

"அட... இவ்வளவுதானே...இதுக்கு ஏன் இவ்ளோ பயப்படறே?"என்று கடைக்காரன் கேட்கவும் அவன் சொன்னான். "புரியாம பேசாதீங்க... அவன் தலைகீழா நின்னுட்டிருக்கான்..."

## சிறப்புக் கவிதை



**கவிதை நெஞ்சங்களுக்கு!**

*இவ்வாரச் சிறப்புக் கவிதையாக,* ஸீமஸ் ஹீனியின் கவிதையொன்று இடம் பெறுகிறது. இவர் 1939 இல் வடக்கு அயர்லாந்தில் பிறந்தவர். எளிமை, குறியீட்டினிமை, அரசியல் சார்பு. கிராமப் புறத்தின் மீதான அபிமானம் கொண்ட இவரது கவிதைகள் பொதுமக்களிடம் புகழ் பெற்றவை. 1965 இல் வெளியான இவரது புகழ் பெற்ற முதல் கவிதை 'தோண்டுதல்'

### தோண்டுதல்

எனது சுட்டுவிரலுக்கும் பெருவிரலுக்குமிடையில்
துப்பாக்கியைப் போல் சொகுசாக ஒய்வெடுக்கிறது
கனத்த என் குட்டிப் பேனா.
என் ஜன்னலுக்கு வெளியே சரளைக்கல் பூமியில் ஆழமாய்ப்
பாய்ந்தெழும் மண்வெட்டியின்
கரகரப்புத் துல்லியம்
எட்டிப் பார்க்கிறேன்
அப்பா கொத்திக் கொண்டிருக்கிறார்!
மலர்ப் படுகைகளுக்கிடையில்
வளைந்து மிகவும் கீழாய்க் குனிந்து
பிருஷ்டங்கள் உயர்ந்து விளங்க
உருளைக் கிழங்குகளை
விதைக்கப் பண்படுத்தும் லயத்தோடு
கொத்திக் கொண்டிருந்த இடத்திலிருந்து
இருபதாண்டுகளுக்கு பிறகும் கூட
அவர் நிமிர்ந்தெழுகிறார்!
முரட்டுக் காலணி விளிம்பில் உதைய
முழங்கால் வளைவில் மேழி அழுந்திப் புதைய
நீட்டிய களைகளை வேரோடு சாய்க்கிறார்
பளபளக்கும் முனைகளை ஆழப் பதிக்கிறார்,
முதிர்ந்து விளைந்த உருளைக் கிழங்கினை
கைகளில் தாங்கும் ஆசைக்காகவே
நாங்கள் பறித்தெடுத்திருந்த புதிய கிழங்குகளை
அவர் பரவ விதைக்கிறார்.
ஆண்டவனறிய, இந்தக் கிழவருக்கு
இவரது தகப்பனாரைப் போலவே
மண்வெட்டியை நன்றாய்க் கையாளத் தெரியும்.
அந்தத் தாத்தா, பதப்படுத்துவோர் வாழுமிச் சதுப்பு நிலத்தில்
ஒருநாள் போதில்
யாரையும் விடவும் ஏராளமாகப்
புல்பத்தைகளை வெட்டியெடுத்திடுவார்.
காகிதம் சரித்து மூடியிட்ட புட்டியில் ஒருநாள்
அவருக்கு நான் பால் கொண்டு போனேன்.
குடிப்பதற்கு மட்டுமே அவர் தலையை உயர்த்தினார்.
உடனே வேலையில் தாவிப் பாய்ந்தார்.
கவனத்தோடு வெட்டி
நேர்த்தியாகச் செதுக்கி எடுத்தார்.
புல்தரை மண்துகள் தோள்மேல் தெறிக்க
மேலே மேலே வெட்டிச் சென்றார்.
நல்ல புல் பத்தைக்காகத் தேடித் தோண்டினார்.

உருளைக் கிழங்கை
விடுவித்த மண்ணின் பனித்த வாசனை...
ஈரத்தால் பாசி பிடித்த சிம்புகள்
சலக்கிட்டுக் கால்களில் மோதும் அரவம்...
வெட்டுப்பட்ட வேர்களின் காய முனைகள்...

என் மண்டையின் உள்ளே
உயிர்ப்புள்ள வேர்கள் விழித்தெழுகின்றன.
ஆனால், இம்மனிதர்களைப் போல வேலை செய்ய
என்னிடம் மண்வெட்டியில்லை.


என் சுட்டுவிரலுக்கும் பெருவிரலுக்குமிடையில்
எனது கனத்த குட்டிப் பேனா ஒய்ந்திருக்கிறது
இதனைக் கொண்டு தோண்டுவேன் நான்.

ஸீமஸ் ஹீனி
(1995-இல் நோபல் பரிசு பெற்ற ஐரிஸ் கவிஞர்)
தமிழாக்கம்:- கால சுப்பிரமணியம்.

# தாயாகத் தாமதமாவது ஏன்? தந்தையாகத் தவறுவது ஏன்?

திருமணமான ஓர் ஆண்டிலே கேள்வி வருகிறது. 'என்னப்பா விசேசமில்லையா? என்னம்மா வயிற்றிலே ஒரு புழு பூச்சியைக் காணோம்?'

நாளடைவில் இந்தக் கேள்வி ஆளை ஆட்டிப்படைக்கத் துவங்கி



விடுகிறது. மனக்கவலை கூடுகிறது. பத்திரிகை விளம்பரங்களையும், டி.வி. விளம்பரங்களையும் பார்த்து, பலர் ஏமாந்து போகிறார்கள். 'நான் ஏன் இன்னும் தந்தையாகவில்லை?' 'நான் ஏன் இன்னும் தாயாகவில்லை?' விடை தெரியாமல் தவிப்பவர்கள் ஏராளம்.

உங்களை நீங்களே சோதித்துக் கொள்ளலாம்.

ஆணின் விதைப்பையில் உருவாகும் கோடிக்கணக்கான விந்து அணுக்களுள் ஒரே ஒரு விந்தணு தான் பெண்ணின் கருப்பையில் உண்டாகும் ஒரு சினை முட்டையை வந்தடைவதும், இந்த இணைப்பினால் கருவுருவாதலும் இயற்கையின் விந்தையே!

இயல்பான, இந்த இணைவினால் கரு உண்டாகாதவர்கள் கருவுறுதலில் சிக்கல் உள்ளவர்கள்! இவர்களை எடுத்த எடுப்பிலேயே 'மலடு' என்று குறிப்பிடுவது அறிவீனம்.

திருமணமாகி இரண்டாண்டுகளுக்கு மேலாகிவிட்டது டாக்டர்! என்று அணுகும் தம்பதியரிடம் முதலில் ஆணின் வரலாறு கேட்கப்படுகிறது. அவரின் சிறு வயது வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், தாக்கிய நோய்கள், விபத்துகள் என்று! இதில் சந்தேகம் ஏற்படாத பட்சத்தில் அவரின் விந்து பரிசோதிக்கப்படுகிறது.

ஆண் அனைத்து விதத்திலும் சரியாக இருக்கிறார் என்றால் அடுத்துப் பெண் பரிசோதிக்கப்படுகிறார்.

சினை முட்டை உற்பத்தித் திறன், கர்ப்பப் பையின் பலம், மாதவிடாய் கோளாறுகள் என்று அனைத்தும் பரிசோதிக்கப்படுகின்றன.

இருவருமே சரியாக இருக்கின்றனர்: ஆனால் கருத்தரிக்கவில்லையே! ஏன்? இங்குதான் இயற்கையின் சிக்கல்கள் ஆரம்பமாகின்றன. வீரிய மிக்க வேகத்துடன் சினைமுட்டையைத் தேடி வரும் ஆற்றல் மிக்க விந்தணுவானது சினைப் பையின் வாயிலில் நுழையும்போது ஏற்படும் ஒரு வித அதிர்ச்சியால் செயலிழந்து, இறந்து போய்விடும்.

இதற்குத் தீர்வு, ஆணின் விதைப் பையிலிருந்து விந்தணுக்களை எடுத்துச் சினைப் பைக்குள் நேரடியாக ஊசி மூலம் செலுத்தி விடுவதுதான். பிறகு வழக்கம்போல் விந்தணுவும் சினைமுட்டையும் இணைந்து கரு வளர்ச்சி நடைபெற்றுவிடுகிறது.

இரண்டாவதாக, விதைப் பையிலிருந்து தாராளமாய் உருவாகி ஓடிவரும் விந்தணு, சூலகம் வெளியிடும் முட்டை ஃபெல்லோபியன் டியூப் (Fallopian Tube) அருகே வந்து காத்திருக்கும்போது இணைந்து கருவாகும். இந்தக் குழாய் எங்காவது சிதைந்தோ, அடைபட்டோ போயிருந்தால் கரு உருவாகும் வாய்ப்பில்லாது போகும்.

## லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# பால் ஒவ்வாமையினால் பேதியா? பயப்பட வேண்டாம்

குழந்தைகளுக்குச் சிறந்த உணவு தாய்ப்பால் மற்றும் பசும் பால். சில குழந்தைகளுக்கு இந்தப் பால் ஒத்துக் கொள்வதில்லை. தாயிடம் குழந்தை பால் குடித்த அதே வேகத்தில், மறுநிமிடம் பேதியாகி விடுகிறது. பசும்பாலாவது கொடுத்துப் பார்க்கலாம் என்று நினைக்கிறார்கள் தாய்மார்கள். அதுவும் பேதியாகி விடுகிறது.

இப்படிப் பேதியானால் எப்படி இந்தக் குழந்தையை வளர்ப்பது? எதற்கும் டாக்டரிடம் கொண்டு போய் ஆலோசனை பெறலாம் என்று குழந்தைகளைக் கொண்டு வருகின்றனர். பால் ஒவ்வாமையினால் வரக்கூடிய பேதியை எளிதில் கண்டுபிடிக்க முடியும்.

1. பால் குடிக்கும் ஒவ்வொரு முறையும் பேதியாதல்.

2. வயிற்றுவலி அவ்வளவாக இராது.

3. ஒரு நாளைக்கு 5 முதல் 8 முறை பேதியாகும்.

4. சற்று பச்சை நிறமாக பேதியாகலாம்.

5. பால் குடித்த சிறிது நேரத்தில் பால் திரிந்தது போல் புளிப்பான வாந்தியும் சேர்ந்து வரும்.

இந்த Mild Intolerence பேதியை நினைத்து இளம் தாய்மார்கள் குழந்தையுடன் படும் கஷ்டங்களைப் போக்கவும், அவர்களுக்குப் புரிய வைத்து ஆறுதல் படுத்த வேண்டிய கடமையும் டாக்டருக்கு உண்டு.

இப்படிப் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு எந்த மாதிரியான ஆகாரம் கொடுக்கலாம் என்பது அடுத்த கேள்வி.

1. சோயா பால்


2. பொட்டுக்கடலைக் கஞ்சி,

இவைகள்தான் மாற்று ஆகாரம். தகுந்த அறிகுறிகளுக்கேற்ப குழந்தையின் உடலமைப்பு (பருமனான, ஒல்லியான) தோற்றத்தையும் குழந்தையின் அமைதி, அழகு Mind Irritability ஆகியவற்றையும் கருத்தில் கொள்வதோடு தாயின் குணங்களையும் மனதில் கொண்டு மருந்தைத் தேர்வு செய்து கொடுக்க வேண்டும் இதன் மூலம் இந்தப் பால் ஒவ்வாமைப் பேதியை அறவே அகற்றிவிட முடியும் எந்தப் பயமுமின்றிக் குழந்தைக்கு மீண்டும் தாய்ப் பால் கொடுக்கலாம்.

# நலம் தரும் பூண்டு

காசநோயால் துன்பப்படுபவர்கள் ஒரு டம்ளர் பாலுடன் ஒரு டம்ளர் தண்ணீர், பத்து மிளகு, சிறிது மஞ்சள் பவுடர், ஒரு பூண்டின் உரித்த முழுப் பற்கள் ஆகியவற்றைக் கொதிக்க வைத்து, ஒரு டம்ளர் ஆனவுடன் வடிகட்டி அதனை அருந்த வேண்டும். இந்தப் பூண்டுப் பாலைக் காலையும் இரவு தூங்குவதற்கு முன்பும் சாப்பிட சளி, இருமல், வாயு போன்ற அனைத்து நோயும் சரியாகும். நோய் சரியானவுடன் இப் பூண்டுப் பாலை நிறுத்திவிட வேண்டும். ஆஸ்துமா நோயால் துன்பப்படுபவர்கள் இந்தப் பூண்டுப் பாலினை சாப்பிட அவர்களின் மூச்சுத் திணறல் ஒரளவு சரியாகும்.

பூண்டை உணவுடன் சேர்த்துச் சாப்பிட நமது உடலில் உள்ள நச்சுப் பொருட்கள் சுலபமாக வெளியேறிவிடும். மற்றும் வைரஸ் போன்ற தேவையற்ற துன்பம் தரும் கிருமிகளையும் இந்தப் பூண்டு அழிப்பதுடன் உணவுப் பாதையில் ஏதேனும் வீக்கம் ஏற்பட்டிருந்தாலும் தேவையற்ற காற்று அடைத்திருந்தாலும் அவற்றையும் சரி செய்துவிடும். நம்முடைய குடலில் குடியிருக்கும்



புழுக்களும் பூண்டு சாப்பிடுவதால் தானாகவே வெளியேறிவிடும்.

பூண்டு நம்முடைய இரத்தக் குழாய்களில் படிந்திருக்கும் தேவையற்ற கொலஸ்ட்ரால், கொழுப்பு போன்றவற்றைக் கரைத்து சிறுநீரின் வழியே வெளியேற்றிவிடும். இதனால் இரத்தம் தடையின்றி நம் உடல் முழுவதும் சுற்றுவதால் செல்களுக்குத் தேவையான உணவும் ஆக்ஸிஜனும் கிடைப்பதால் இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, மூச்சு வாங்குதல் ஆகியன சீராகும். புற்றுநோயினால் கஷ்டப்படுபவர்கள் அதற்குரிய மருந்துகளுடன் ஒரு முழுப் பூண்டுப் பற்களை வேகவைத்துத் தினமும் சாப்பிடப் புற்றுநோய்ப் புண்கள் விரைவில் சரியாகிவிடும்.

நம்முடைய முகத்தில் தோன்றும் பருக்கள் மீது பச்சைப் பூண்டினைப் பலமுறை தேய்த்து வரப் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும். ருசிக்காக ஆசைப்பட்டு எண்ணெயில் பொரித்த தின்பண்டங்களை அதிகமாகச் சாப்பிட நேர்ந்தால், உடனே இரண்டு பச்சைப் பூண்டுப் பற்களை எடுத்துச் சிறிது சிறிதாகக் கடித்துச் சாப்பிடச் செரிமானத் தன்மை ஏற்படும்.

நரம்புத் தளர்ச்சியாலும், வயோதிகத் தன்மையாலும் இல்லற வாழ்வில் ஈடுபட முடியாதவர்கள் பூண்டினை உணவுடன் அதிகளவு சேர்த்துக் கொள்ள இல்லற வாழ்வு இனிதாகும்.

# தொடுகையால் நோய்களைக் குணப்படுத்தும் வைத்திய நிபுணர்

தொடுகையினால் நோய்களைக் குணப்படுத்தும் இயற்கை வைத்திய நிபுணரான டாக்டர் சசிகாந் எஸ். சேத் மீண்டும் இலங்கை வந்துள்ளார். உடல்,உள்ளம் சம்பந்தமான நோய்களுக்கு மருந்து, ஊசி போன்ற வழமையான வழிகளைக் கையாளாமல் Accu Pressure என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் தொடுகைச் சிகிச்சை முறையிலே நோய்களைக் குணப்படுத்தும் இவர் உலகப் புகழ் பெற்றவர்.



இச் சிகிச்சை முறை உண்மையிலே மிகவும் எளிமையானது. மிகச் சில நிமிடங்களே இடம்பெறுகின்றது.

"பிரபஞ்சத்தின் சக்தியானது உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. எனது விரல்கள் அதனை ஈர்த்துக் கொள்கின்றன. ஈர்த்த சக்தியை விரல்களினூடாக நோயாளியின் பாதிக்கப்பட்ட பகுதியில் செலுத்துகின்றேன். செலுத்தப்படும் சக்தி நோயாளியின் உடலில் பாய்ச்சப்படுகின்றது. இதன் ஊடுருவலால் நோய் குணமடைகின்றது." என்கிறார் டாக்டர் சேத்.

நீரிழிவு முதல் புற்றுநோய், இதயக்கோளாறுகள் வரை மனிதர்களுக்கு ஏற்படும் பலவிதமான நோய்களுக்கு இம் முறை மூலம் நிவாரணம் கிடைக்கின்றது.

பௌர்ணமி நாட்களில் இடம் பெறும் விஷேட சிகிச்சை மூலம் தீராத பல வியாதிகளையும் தீர்த்துக் கொள்ளலாம் என்கின்றார்.


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



* ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
* கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
* ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் 6b

பெயர்:......................
முகவரி:......................
......................
தொழில்:......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 21-12-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஏ.எஸ். சர்ஜீனா
913, தைக்கா ஒழுங்கை, ஏறாவூர்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம் அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



மையல் கொடுத்துவிட்டுத் தங்கமே
-தங்கம்- தலை
மறைந்து திரிபவர்க்கு மானமு முண்டோ?
பொய்யை யுருவமெனக் கொண்டவ
-னென்றே -கிழப்
பொன்னி யுரைத்ததுண்டு தங்கமே
-தங்கம்.

**சுப்பிரமணிய பாரதியார்-**



# தூக்கி எறிந்துவிடுவேன்

## பாப்பா முரசு சிறுகதை

**ஒரு** காட்டில் ஒரு நரி இருந்தது. அதற்கு அடிக்கடி வயிறு நிறைய சாப்பிட இரை கிடைத்ததால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உண்டு உறங்கியது போக மற்ற நேரத்தில் அது காடு முழுவதும் இஷ்டப்படி ஓடியாடியது. குதித்துக் கும்மாளமிட்டது.

அப்படிக் கும்மாளமிட்டு கண்மண் தெரியாமல் ஓடிய பொழுது ஒரு குழியில் விழுந்துவிட்டது. குழியிலிருந்து வெளியே வர அது எம்பி எம்பிக் குதித்துப் பார்த்தது. முடியவில்லை. மீண்டும் பள்ளத்துக்குள்ளேயே விழுந்தது. அதனால் பள்ளம் தான் பெரியதாயிற்று.

இனி நம்மால் உயிர் தப்ப முடியாது என்று நினைத்தது அது. அப்போது ஒரு சிங்கம் வந்து பள்ளத்தினுள் எட்டிப் பார்த்தது. வெளியே வர முடியாமல் நரி பள்ளத்துக்குள்ளேயே பரிதவித்து ஒரே இடத்தில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பதைச் சிங்கம் பார்த்தது.

"என்ன நரியாரே...புது வளையா?" என்று கேட்டது சிங்கம்.

"புது வளையா? சரியாப் போச்சு அரசே! இனி பழைய வளையானாலும் சரி, புது வளையானாலும் சரி எனக்கு ஆபத்துத்தான். அதுதான் இந்தப் பள்ளத்துக்கு வந்துவிட்டேன்!" என்றது நரி.

"ஆபத்தா? உமக்கா?" என்று கேட்டது சிங்கம்.

"ஆபத்து எனக்கு மட்டுமில்லை அரசே! உங்களுக்கும்தான்!" என்றது நரி.

"என்ன சொல்கிறீர், நரியாரே... எனக்கு ஒன்றும் புரியவில்லையே," என்றது சிங்கம்.

"விசயம் தெரியாதா அரசே!"

"சொல்லுங்கள் நரியாரே!"

"நாளை பூமி இரண்டாக வெடிக்கப் போகிறதாம்!" என்றது நரி.

"ஐயோ! அப்படியென்றால் நம் கதி?" கவலையுடன் கேட்டது சிங்கம்.

"அதோகதிதான்...கூண்டோடு சாவு!" என்றது நரி.

"ஆபத்திலிருந்து தப்ப முடியாதா நரியாரே!"

"முடியும்! அதுதான் இப் பள்ளத்துக்கு வந்துவிட்டேன் அரசே!" என்றது நரி.

"நானும் வந்துவிடுகிறேன் நரியாரே! எனக்கும் என் உயிர் செல்வம்தானே?" என்று கெஞ்சியது சிங்கம்.

"ஆனால், ஒரு நிபந்தனை!" என்றது நரி.

"சொல்லுங்கள் நரியாரே!"

"இந்தப் பள்ளத்துக்குள் வந்த பிறகு அமைதியாக இருக்க வேண்டும் நீங்கள். கர்ச்சிக்கக் கூடாது!" என்றது நரி.

காலைத் தூக்கித் தரையில் ஓங்கி அடித்து "சத்தியமாக கர்ச்சிக்க மாட்டேன் நரியாரே!" என்றது சிங்கம்.

தப்பித் தவறி நீர் கர்ச்சித்தால் உம்மைத் தூக்கி வெளியில் வீசி விடுவேன்!" என்றது நரி.

"சரி நரியாரே! கர்ச்சிக்கமாட்டேன்!" என்றது சிங்கம்.

"அப்படியானால் பள்ளத்துக்குள் குதியும்!" என்றது நரி.

சிங்கம் பள்ளத்துக்குள் குதித்துத் தரையோடு தரையாகப் படுத்துப் பூமி பிளக்கிற சத்தத்தைக் கேட்கத் தன் செவிகளை நிமிர்த்தி வைத்துக் கொண்டது. காட்டையே கதிகலங்க அடிக்கும் சிங்கம் தன் காலடியில் பெட்டிப் பாம்பாய் சுருண்டு கிடப்பதைப் பார்த்துத் தனக்குத் தானே சிரித்துக் கொண்டது நரி.

சிறிது நேரத்தில் அவ் வழியாக வந்த புலி ஒன்று தற்செயலாகப் பள்ளத்துக்குள் பார்த்தது. நரி பள்ளத்துக்குள் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருப்பதையும், சிங்கம் வாலைச் சுருட்டிக் கொண்டு படுத்திருப்பதையும் புலி பார்த்தது.

"என்னாயிற்று உங்களுக்கு?" என்று கேட்டது புலி.

"பூமி இரண்டாகப் பிளக்கப்போகிறது!" என்றது நரி.

"நாங்கள் உயிர் தப்ப இந்தப் பள்ளத்தில் பதுங்கி இருக்கிறோம்!" என்றது சிங்கம்.

அவைகள் சொன்னதைக் கேட்டதும் புலிக்குப் பயம் உண்டாயிற்று. சிங்கராஜாவும் சொல்வதால் பூமி இரண்டாகப் பிளக்கப் போகிற விசயம் உண்மையாக இருக்கலாம். நாமும் இவர்களோடு சேர்ந்து நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைத்த புலி, "நானும் பள்ளத்துக்குள் வந்துவிடுகிறேன்!" என்றது.

'பேஷாக வாருங்கள்! ஆனால், பள்ளத்துக்குள் வந்த பிறகு உறுமக் கூடாது!" என்றது நரி.

"நான் கர்ச்சனை செய்வதில்லை என்று சத்தியம் செய்துவிட்டுத்தான் பள்ளத்துக்குள் வந்திருக்கிறேன்!"என்றது சிங்கம்.

"நானும் உறும மாட்டேன். இது சத்தியம்!" என்று சொல்லிக்கொண்டு புலியும் பள்ளத்துக்குள் குதித்தது.

பள்ளத்தில் புலியும், சிங்கமும் பூமி இரண்டாகப் பிளக்கிற சத்தத்தைக் கேட்க மௌனமாயின. நரியோ அடுத்ததாக என்ன செய்து பள்ளத்துக்குள் இருந்து வெளியே தப்பிச் செல்லலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது ஒரு குட்டி யானை பள்ளத்துக்குள் எட்டிப் பார்த்தது. நரி, சிங்கம், புலி ஆகியவை ஒரே பள்ளத்தில் பயந்து கொண்டு இருப்பதைப் பார்த்து ஏதோ ஒரு விபரீதம் நிகழப்போகிறது என்றெண்ணி "பள்ளத்துக்குள் விழுந்து விட்டீர்களா?" என்று கேட்டது.

"நாங்களாகத்தான் பள்ளத்தில் விழுந்திருக்கிறோம்!" என்றன. நரி, புலி, சிங்கம் மூன்றும் ஒரே குரலில்.

"நீங்களாக பள்ளத்தில் விழுந்து விட்டீர்களா? ஏன்?" என்று கேட்டது குட்டி யானை.

மூன்றும் பூமி இரண்டாகப் பிளக்கப் போகிற விசயத்தைக் கூறின.

"ஐயோ நான் என்ன செய்வேன்? நான் சாகக் கூடாதே! உங்களுடன் நானும் வந்துவிடுகிறேன்!" என்றது யானை.

"ஆனால் ஒன்று. பள்ளத்துக்குள் வந்த பிறகு பிளிறக் கூடாது!" என்றன மூன்றும்.

"இல்லை!" என்றது குட்டி யானை.

"பிளிறினால் வெளியிலே தூக்கி எறிந்து விடுவேன்! இந்தத் தண்டனை எல்லாருக்கும் பொதுவானது," என்றது நரி.

"சரி!" என்று சொல்லியபடி பள்ளத்துக்குள் இறங்கியது குட்டி யானை.

எல்லாம் குழிக்குள் பதுங்கிக் கொண்டன. பள்ளத்தில் இன்னொரு மிருகம் வந்தால் இடமில்லை என்றாகிவிட்டது. புலி, சிங்கம், குட்டியானை எல்லாம் 'தங்களை உறும, கர்ச்சிக்க, பிளிறக் கூடாது என்று நிபந்தனை போட்டுவிட்டு தான் மட்டும் ஊளையிடுகிறதே நரி' என்று எண்ணின. அவைகள் நரியின் மீது அவைகளுக்குக் கோபம் உண்டாயிற்று.

யானை தன் துதிக்கையால் நரியைத் தூக்கிப் பள்ளத்துக்கு வெளியே வீசியது.

நரி தப்பித்தோம். பிழைத்தோம் என்று உயிர் தப்பி ஓடிவிட்டது!

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **21.12.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **475**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 473

பரிசுக்குரியவர்:
**வ. ஆன். லின்டுஷா,**
145, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **எம்.டி.எம். ஆக்கில்,** 4 ஜே, ரோயல் கல்லூரி, கொழும்பு-7. | **பா. ஜதீஷன்,** ஆர்.கே.எம்.வீதி, அக்கரைப்பற்று-07. |
| **எம்.எஸ். துசான்,** தருமரத்த கல்லூரி, பதுளை. | **ஷப்னா ஸுஹைல்** முஸ்லிம் மகா வித்தியாலயம், பலப்பிட்டி. |
| **க. சுஜிந்தன்,** 134, லக்ஷ்பான வீதி, வவுனியா. | **பஸ்லினா,** அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. |
| **ம. ஸ்ரீ கிருஷ்ணாஹர்,** நீதிமன்ற வீதி, திருகோணமலை. | **எம். முனீர்,** அல்-மதீனா தேசிய பாடசாலை, மடவளை. |
| **சரவணராஜ சர்மா,** விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. | **எம். எஃப். பாத்திமா ரிப்னா,** மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. நீ போகும் இடமெல்லாம் நானும் வருவேன். ஆனால் சில நேரம் தெரிவேன் சில நேரம் மறைவேன் நான் யார்?
2. உயிரில்லாதவன் பறப்பான் விமானம் அல்ல அவன் யார்?
3. காட்டுக்குள் குப்பை வீட்டுக்குள் சுத்தம் அது என்ன?
4. வம்புச் சண்டைக்கும் சரி அன்புப் பாசத்திலும் சரி வாசலைத் தாண்டாமலே அத்தனையும் செய்வான் அவன் யார்?
5. வாசமில்லா பூ வாடாத பூ அது என்ன?
6. விளக்கைச் சுமந்தவன் வெளிச்சமாய் பறப்பான் அவன் யார்?
7. ஓங்கி வளர்ந்தவள் ஒரு பிள்ளை பெற்றாள் அவள் யார்?
8. காற்றுக்குள் நுழைந்தவன் கானம் பாடுகிறான் அவன் யார்?
9. பார்த்தால் கல் கரைந்தால் நீர் அது என்ன?
10. இரட்டைக் குழல் துப்பாக்கி சேதமில்லாமல் வெடிக்குது அது என்ன?

**விடைகள்.**

1. நிழல் 2. புகை
3. பூந்துடைப்பம் 4. நாக்கு
5. சேவல் பூ 6. மின்மினி பூச்சி
7. வாழை 8. மூங்கில்
9. பனிக்கட்டி 10. மூக்கு- தும்மல்

## மூலகங்களும் பயன்பாடுகளும்

கீழே உள்ள அட்டவணையில் பொதுவாக பயன்பாட்டில் உள்ள மூலகங்கள் பற்றிய சில பயனுள்ள தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| மூலகங்களின் பெயர் | குறியீடு | அணு எண் | அணு நிறை | கண்டுபிடிக்கப் பட்ட ஆண்டு | பொதுவான பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| ஐதரசன் | H | 1 | 1.01 | 1766 | ஒட்டுதல் |
| ஹீலியம் | He | 2 | 4.00 | 1868 | பலூனில் வாயு நிரப்பல் |
| காபன் | C | 6 | 12.01 | B.C | பென்சில், வைரம் |
| நைதரசன் | N | 7 | 14.01 | 1772 | உரவகைகள் |
| ஒட்சிசன் | O | 8 | 16.00 | 1774 | சுவாசம் |
| புளோரின் | F | 9 | 19.00 | 1771 | பற்பசை |
| நேயோன் | Ne | 10 | 20.18 | 1898 | மின் சமிக்ஞை |
| சோடியம் | Na | 11 | 22.99 | 1807 | உப்பு |
| அலுமினியம் | Al | 13 | 26.98 | 1825 | பாத்திரங்கள் |
| சிலிக்கன் | Si | 14 | 28.09 | 1823 | மண்ணில் |
| சல்பர் | S | 16 | 32.06 | B.C | தீப்பெட்டி |
| குளோரின் | Cl | 17 | 35.45 | 1774 | உப்பு நீரைத் தூய்மையாக்கல் |
| கல்சியம் | Ca | 20 | 40.08 | B.C | எலும்புகளின் வளர்ச்சிக்கு |
| இரும்பு | Fe | 26 | 55.85 | B.C | உருக்கு, காந்தம் |
| செம்பு | Cu | 29 | 63.55 | B.C | தண்ணீர்க்குழாய், மின்கம்பி |
| வெள்ளி | Ag | 47 | 107.87 | B.C | ஆபரணம், பற்சிகிச்சைகளில் |
| தங்கம் | Au | 79 | 196.97 | B.C | ஆபரணம், நாணயம் |
| இரசம் | Hg | 80 | 200.59 | B.C | வெப்பமானியில் |
| ஈயம் | Pb | 82 | 207.19 | B.C | கார் மின்கலங்களில் |

## வாரம் ஒரு TOP TEN

**இவ்வாரம்:-** உலகின் முதல் பத்து பெரிய ஆயுதப் படைகளைக் கொண்ட நாடுகள். மதிப்பீட்டின்படி செயலில் உள்ள படைகள்

| நாடுகள் | தரைப்படை | கடற்படை | ஆகாயப்படை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. சீனா | 1,830,000 | 230,000 | 420,000 | 2,480,000 |
| 2. அமெரிக்கா | 469,300 | 369,800 | 361, 400 | 1,371,500 |
| 3. இந்தியா | 980,000 | 53,000 | 140,000 | 1,173,000 |
| 4. வட கொரியா | 950,000 | 46,000 | 86,000 | 1,082,000 |
| 5. ரஷ்யா | 348,000 | 171,500 | 184,600 | 1,004,100 |
| 6. தென்கொரியா | 560,000 | 60,000 | 52,000 | 672,000 |
| 7. துருக்கி | 525,000 | 51,000 | 63,000 | 639,000 |
| 8. பாகிஸ்தான் | 520,000 | 22,000 | 45,000 | 587,000 |
| 9. ஈரான் | 350,000 | 20,600 | 50,000 | 545,600 |
| 10. வியட்நாம் | 412,000 | 42,000 | 30,000 | 484,000 |

## இந்த வாரப் புதிர்

படம் 1 இல் எண்கள் அமைந்துள்ள கோலத்தினை நன்கு அவதானித்து படம் 2 இல் கோடிட்ட இடத்தில் வர வேண்டிய எண்ணைக் கண்டுபிடியுங்கள்.

16
25 54 9
4

படம் 1

81
100 - 64
49

படம் 2

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:

| | |
|---|---|
| 2 | 75 |
| 63 | 14 |
| 25 | 52 |
| 42 | 35 |
| 44 | 33 |
| A=25 | B=52 |

முலவிட்டமாக 12,11,10....என்றவாறு ஒரு திசையில் அதிகரித்துக் கொண்டும் மற்ற திசையில் குறைந்துகொண்டும் செல்கிறது

# வசந்தகால எதிர்பார்ப்பு....

**இந்திலன்-அமெரிக்கா**



வயோதிபம் இடம் தந்த வரையில், விரைவாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு இன்றைய தினசரிப் பத்திரிகையைக் கையில் எடுத்தேன்.

நாட்டுநடப்புகளை அறிந்து கொள்வதற்காகத்தான் மற்றவர்கள் பத்திரிகை படிப்பது. நானும் ஒருகாலத்தில் அப்படிப் பத்திரிகையைப் படித்தவன்தான். ஆனால் இப்போதெல்லாம் காணாமற் போன என் பேரனைப் பற்றிய தகவலை அறியத்தான் பத்திரிகை படிக்கிறேன்.

வயோதிபத்தின் தள்ளாமை ஒரு பக்கமும், பத்திரிகையைப் படிக்கப் போவதால் ஏற்பட்ட படபடப்பு மறுபக்கமுமாக, கடவுளை ஒரு கணம் நினைத்துக் கொண்டு, கூன் விழுந்த முதுகுடன் முடிந்த வரை நிமிர்ந்து உட்கார்ந்து, `பத்திரிகையைப் பிரித்தேன். அதிசயமாக அன்றைய பத்திரிகையில் காணாமற் போனோரில் கண்டுபிடிக்கப்பட்ட சிலரின் பெயர் பிரசுரமாகியிருந்தது. கண்ணாடியை மீண்டும் ஒருதரம் கழற்றித் துடைத்துக் கொண்டு, ஆர்வத்துடன் ஒவ்வொரு பெயராகப் படித்தேன். இன்றும் அவன் பெயரைக் காணவில்லை. வழமை போல ஏமாற்றம்தான் எனக்குக் கிடைத்தது.

சோர்வாக இருப்பதால், கண்களை மூடித் தளர்வாக அமர்ந்து கொண்டேன். கண் முன்னே பேரனின் முகம் வந்து போனது.

எப்பொழுதும், ஏதாவது செய்து கொண்டே இருப்பான். துடிப்பான இளைஞன். அவனுக்கு நண்பர்கள் ஏராளம். அவனுடன் ஒருமுறை பழகினாற்போதும், அவனைப் பிரியவே மனம் வராது. நான் பார்த்து வளர்ந்த பிள்ளை. அன்பானவன். அந்த மென்மைக்குப் பின்னால், வன்மையான இதயம் அவனுக்குள் இருந்தது, இருபது வயதில் எங்களைப் பிரிந்து அவன் செல்லும் வரை எனக்குத் தெரியவில்லை.

நன்றாகப் படித்த பிள்ளை. பெரியவனானதும் குடும்பப் பொறுப்பைக் கையில் எடுப்பான் என்று நினைத்தேன். குடும்பத்தை விட நாடு பெரிதாய்த் தெரிந்திருக்க வேண்டும். போய்விட்டான். அலறி அழுத அவன் தாயிடம் “அவன் எங்கும் போய்விடவில்லை. விரும்பிய போது கண்டு கொள்ளலாம” என்று கூறி ஆறுதல்படுத்தினேன். இப்போது..., அவளை அப்படிச் சமாதானப்படுத்த என்னால் முடியவில்லை.

தன் பணிக்காலத்தை முடித்துக் கொண்டு வீட்டிற்கு அவன் திரும்பிய போது மீண்டும் எனக்குப் புதுத் தென்பு வந்தது போல் இருந்தது. அது வரை குடும்பத்தை நான் கவனித்ததால், என்னை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டுத் தான் உழைக்கத் தொடங்கினான்-என் செல்லப் பேரன்.

துக்கம் நெஞ்சை அடைத்தது. இருமினேன். மகள் ஓடி வந்தாள்.

“ஐயா என்ன செய்யுது?”

பதற்றமாய்க் கேட்டாள். பத்திரிகையை என் கையில் கண்டதும், அவளுக்கு என்ன நடந்திருக்கும் என்று விளங்கியிருக்க வேண்டும்.

“ஐயா, மனசைப் போட்டு அலட்டாமல் இருங்கோ எண்டு எத்தின தரம் சொல்லிப்போட்டன். இருக்கிற துக்கம் காணும். நீங்களும் எதையாவது இழுத்து வையாதையுங்கோ.”

கோபமாகச் சொன்னாள்.

அவள் கோபமாகப் பேசியது எனக்குப் பிழையாகப் படவில்லை. எப்படியெல்லாமோ வாழ வேண்டும் என, நான் நினைத்த என் மகள், கணவனுடன் நீண்ட நாள் வாழக் கொடுத்து வைக்கவில்லை. தன் மகனைத்தான் மலை போல நம்பியிருந்தாள். அவனும் எங்கே என்று தெரியாத விரக்தி, அவள் கோபம் நியாயமானதுதான். இந்த நிலையில் உள்ள பெண்ணால் வேறு எப்படித்தான் பேச முடியும்?

“ஐயா, நான் ஒருக்கா கடைக்குப் போயிட்டு வாறன். கவனமாய் இருங்கோ.”

என்றபடி, படலையைத் திறந்து மகள் வெளியேறினாள்.

மீண்டும் என் நினைவு பேரனிடமே சென்றது . ஒருவேளை என் பேரனை நான் காண முடியாவிட்டால்...? அவன் வரவுக்கு முதல் என் மூச்சு நின்றுவிட்டால்..? நானும் அவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்து இருந்ததை அவனுக்குத் தெரிவித்தாக வேண்டும். என்ன செய்யலாம்? என்று யோசித்தேன். மனதில் உள்ளதை எழுதி வைத்துவிடுவது என முடிவு செய்து கொண்டு, எழுந்து சென்று ஒரு பேப்பரும் பென்னும் எடுத்துக் கொண்டு, திரும்பவும் அதே இடத்தில் அமர்ந்து கொண்டேன்.

கைகள் நடுங்குவதையும் பொருட்படுத்தாது எழுதத் தொடங்கினேன்.

பேரன் சத்தியனுக்கு,

உன்ர வரவை ஆவலோட எதிர்பார்த்திருக்கும் ஐயாவின் ஆசிகள். உயில் எழுதி வைக்க என்னட்ட, உன்னத் தவிர வேற ஒண்டும் இல்லாததால, கடசியாய், என்ர சொத்தாய் ,இந்தக் கடிதத்த எழுதுறன்.

சின்ன வயசில உன்ன குளிப்பாட்டி, துடைச்சு, உடுப்பு போடேக்க, எனக்கு வயது போன பிறகு, நீ என்ன பராமரிப்பாய் எண்டு கனவு கண்டன். அது கானல் நீரடா. தள்ளாத வயசிலயும் நான்தான் என்ன கவனிக்கிறன். தம்பி, நீ படிக்கேக்க உன்ர பரீட்சை முடிவுகள பத்திரிகையில தேடின கண்கள், உன்ர பெயரக் காணாமல் போனோர் பட்டியல்ல தேடேக்க கலங்கிப் போகுதடா.

என்னையா செய்ய? நேற்று இன்று எண்டு ஏழு வருசம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்து போச்சு. ஐயாக்கும் எண்பது வயசாச்சு. இன்னும் இந்தக் கட்ட உயிர கையில பிடிச்சுக் கொண்டு இருக்கிறது உன்னப் பாக்கத்தான்.

உன்னோட ஒண்டாய் பழகின உன்ர சிநேகிதனுக்கு எப்பிடியடா உன்னக் காட்டிக் குடுக்க மனசு வந்தது? சத்தியா, ஓலை வேலிகளை எடுத்துப்போட்டு, கல்லால சுவர் கட்டின காலமே மனிச மனங்களும் இறுகிற்றுது எண்டு நினைக்கிறன். அதாலதான் இரக்கமே இல்லாம ஒருத்தர ஒருத்தர் கூலிக்காய் காட்டிக் கொடுத்தவங்களடா.

நீ இப்ப வாசிக்கிறத சாதாரணமாய் நினைக்காதயடா. இது உன்ர ஐயாட ஆத்மாவின்ர வேதன. நிம்மதியாய் கழிக்க வேண்டிய கடசிக் காலத்த உன்ன நினச்சு நரக வேதனையோட கழிக்கிறன். இப்பிடி எத்தினையோ ஆக்கள் இருக்கினம் சத்தியா. இதுக்கெல்லாம் யாரடா பொறுப்பு?

நடப்பிணமாய் அலையிற உன்ர அம்மாவையும், அண்ணா வந்த பிறகுதான் கலியாணம் கட்டுவம் எண்டு அடம்பிடிக்கிற உன்ர தங்கச்சிகளையும் அநாதையாய் விட்டிட்டுப் போக மனம் வரேல்லையடா.

வீட்டுக்கு பாரமாய் இருக்கிறத நினச்சால் வேதனையாயிருக்குது. என்னால முன்னமாதிரி ஓடியாடி ஒண்டும் செய்யவும் ஏலாது. உடம்பில தெம்பும் இல்ல. கெதியாய் எல்லாரையும் உன்ர கையில ஒப்படச்சிட நினைக்கிறன். அதுக்கு பிறகுதான் என்ர உடல் வேகும். வேண்டாம், நீ பிடிபட்ட அண்டைக்கே வேகத் தொடங்கிட்டன். இனி என்ர உயிர் பிரிஞ்சால் நெருப்பு வைக்க வேண்டாம். உன்ர கையால கொஞ்ச தண்ணி ஊத்து. காஞ்சுபோன என்ர முதுமைக் கோலம் அப்ப எண்டாலும் ஈரமாகட்டும்.

உயிரோட நீ இருக்க வேணும் எண்டு மனம் ஜெபம் செய்தாலும், மனதின்ர ஏதோ ஒரு மூலையில பயமாயும் இருக்குது. வாழ்ந்து கொண்டே கொஞ்சங் கொஞ்சமாய் செத்துக்கொண்டிருக்கிறன்.

நீ எங்கிருக்கிறாய்? எப்பிடி இருக்கிறாய்? நீ இல்லாத வீதியில நடக்கப் பிடிக்கேல்ல. உன்ர கால் படாததால வீதியே களை இழந்து கிடக்குது.

வைச்ச பொருள் வைச்ச இடத்தில கிடக்குது. அங்கொண்டும் இங்கொண்டுமாய் போட்டு வைக்க நீதான் இஞ்ச இல்லயே. நீ வைச்சு வளத்த மரங்களின்ர ஏக்கப் பெருமூச்சால, எங்கட வீட்டில வீசுற காத்துக் கூட சுடுகுது.

உன்ர அப்பாவும் இல்ல. எங்க, நான் செல்லம் தந்து நீ கெட்டுப்போயிடுவியோ எண்டு பயந்தன். ராசா, சாண் பிள்ளை எண்டாலும் ஆண்பிள்ளை எண்டு நினைச்சதாலதான் உன்னில நான் வச்ச பாசத்த வெளியாய் காட்டயில்ல. இந்த கிழவனுக்கு அப்படி வெளிக்காட்டவும் தெரியாதடா. அதுக்காக உன்னில பாசம் இல்ல எண்டு நினையாத. என்ர உயிரையே உன்னில் வச்சிருக்கிறன்.

இலையுதிர் காலம் முடிஞ்சு எங்கட மண், இப்பதான் வசந்த காலத்தை பார்க்குது. அதுக்காக உழச்ச நீங்கள் உள்ள இருக்க, எப்பிடியடா என்னால சந்தோசப்பட ஏலும்?

வசந்த காலம் எண்டாலும் உன்ன அழைச்சு வரும் எண்டு நினைக்கிறன். பருவங்கள் மாறி மாறி வருமடா. பருவகாலம் மாற முதல் நீ வந்திட வேணும் எண்டு ஒரே ஏக்கமாய் இருக்குது.

தம்பி உனக்காக ஒண்டும் நான் சேர்த்து வைக்கயில்லை. இருந்த கொஞ்சநஞ்ச சேமிப்பும், தலைவர்களுக்கு மனு அனுப்பினதோட செலவழிஞ்சு போச்சு. உன்னட்ட திறமை இருக்கு. எங்கட மண் உன்ன வாழ வைக்கும்.

நான் கண்மூட முதல் ஒருக்கா எண்டாலும் உன்ன பாக்க வேணும் எண்டதுதான் என்ர ஆசை. சத்தியா, ஒருவேள நீ வரமுதல், எனக்கு விதி முந்தியிருந்தால் கவலப்படாத. உன்ர நினைவோடதான் கண்மூடியிருப்பன் எண்டு நினைச்சுக் கொள். எப்பவும் என்ர ஆசிகள் உன் கூட இருக்கும். வந்திருக்கிற வசந்த காலத்தில் உன்ர வரவ எதிர்பார்த்திருக்கும்

ஐயா,

சிவசம்பு.

நிறைய நாட்களுக்குப் பின் எழுதியதால் கை உழைந்தது. கையை இரண்டு தரம் உதறினேன். கொஞ்சம் சுகமாய் இருந்தது. படலை திறந்த சத்தம் கேட்டது.

“யாரு பிள்ள அது?” என்றேன்.

“ஐயா, அது நான்”

என்றபடி கடைக்குப்போன மகள் வந்து கொண்டிருந்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டு, கடிதத்தை மடித்து வேட்டி மடிப்பில் செருகிக் கொண்டேன். படுக்கும் போது மறக்காமல் தலையணைக்கு கீழே வைக்க வேண்டும்.

“ஐயா, காணாமற்போன ஆக்களில, கண்டுபிடிச்ச இன்னும் கொஞ்ச ஆக்களின்ர பேர் நாளைய பேப்பரில வருகுதாம். பேர் வந்தால் ஆக்கள போய் பாக்கிறதுக்கு காணாமற்போனோர் சங்கத்தால ஏற்பாடு செய்யினமாம். வரேக்க ஆறுமுகம் மாமா கண்டு சொன்னவர்.”

மூச்சு விடாமல் சொல்லி முடித்தவள், நான் ஏதாவது பதில் சொல்கிறேனா எனச் சற்று நேரம் நின்று பார்த்தாள்.

“காவோலை விழ குருத்தோலை சிரிச்சது அந்தக் காலம். குருத்தோலைகள் விழுறத காணச் சகியாது காவோலைகள் ஊமையாய் அழுறது இந்தக் காலம்.” சொல்லிவிட்டு, வெறுமையாய் சிரித்தேன், எதுவும் பேசாமல் உள்ளே சென்றாள், மகள்.

நாளையாவது என் பேரனின் பெயர் வரும் என்ற நம்பிக்கையில், இன்றிரவு அச்சேறப்போகும் பத்திரிகையை, இப்பொழுதிருந்தே எதிர்பார்க்கத் தொடங்கினேன்.

---

# ஜானகியின் அவசரம்

**கோட்டைக்கல்லாறு-எஸ்.சிவம்.**

அன்று வழக்கத்திற்கு மாறாக அரை மணித்தியாலத்திற்கு முன்னரே வகுப்பறையில் பிரசன்னமாகி இருந்தாள் ஜானகி. அவள் கண்கள் அங்குமிங்கும் நோட்டமிட்டவாறே இருந்தன. முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள், நெஞ்சில் பயம் வேறு....

அவள் கன்னத்தில் இருந்த வியர்வைத் துளி ஒன்று ஊர்ந்து வந்து இடதுபுற இதழ் ஓரத்தில் முட்டிக் கொண்டது. அவளின் சிவந்த இதழ்கள் அதையும் பொருட்படுத்தாது துடித்துக் கொண்டிருந்தன. கண்கள் பாடசாலையின் பிரதான நுழைவாயிலையே பார்த்தவாறு உருண்டு கொண்டிருந்தன.

சட்டென ஆங்கிலம் கற்பிக்கும் வழுக்கைத் தலை ஆசிரியரும், ஆறாம் ஆண்டு மாணவிகள் இருவரும், எட்டாம் ஆண்டு மாணவன் ஒருவனும், தன்னுடன் பதினொராம் ஆண்டு படிக்கும் குமுதாவும் பாடசாலைக்குள் நுழைவதைக் கண்டு ஜானகி சலித்துக் கொண்டாள்... ச... குமுதா வந்து விட்டாளே என்ன... நேரத்தோட வந்து விட்டாய் என குமுதா கேட்டால்... ஜானகியின் மனம் எண்ணியது.... தன் புத்தக அடுக்குகளுக்குள் அழகாக மடித்து வைத்த கைக்குட்டையை எடுத்துத் தன் வெள்ளை முகத்தில் பதித்துப் பதித்து வியர்வைத் துளிகளைச் சரி செய்து கொண்டு...

நேற்றுத் தந்த ஹோம்வேர்க்கை மீட்பதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்தாலும், அவள் மனம் நேற்று சுரேஷ் தமிழ்க் கொப்பிக்குள் வைத்துத் தந்த கடிதத்தில் எழுதப்பட்ட விடயங்களையே எண்ணிக் கொண்டிருந்தது....

கணப்பொழுதில் குமுதா வகுப்பறைக்குள் வந்து “குட்மோனிங் ஜானகி” என்றாள். “குட்மோனிங்” என்று பதிலுக்குக் கூறிவிட்டு மீண்டும் ஜானகியின் கண்கள் பிரதான நுழைவாயிலை நோக்கி வலம் வந்தன. மாணவர்கள் சாரை சாரையாக பாடசாலைக்குள் வந்து கொண்டிருந்தனர். ஆனால் அவள் கண்கள் சுரேஷைத் தேடின.

ஒருவேளை சுரேஷ் இன்றைக்குப் பாடசாலைக்கு வரமாட்டானா?.... சே... சே... அப்படியிருக்காது. வருவான், நேரம் செல்லச் செல்ல ஜானகியின் எதிர்பார்ப்பும் குறைந்து மனம் சோர்வடைந்தது. திடீரென “டாங்... டாங்” என மணி அடித்தது. அசெம்பிளிக்கு எல்லோரும் எழுந்து வரிசையாக நின்றனர். ஜானகியும் வேண்டா வெறுப்பாக வரிசையில் நின்றாள்.

சாரைப் பாம்பு செல்வதைப் போல் முன்னுக்கு இருந்த சுவருக்கு வழிவிட்டு வரிசை வேலி ஓரம் இருக்கும் வேப்ப மரத்தடிக்கு நகர்கிறது. ஜானகியும் வரிசையோடு நகர்ந்து சென்றாள்.

அசெம்பிளி ஏறு வரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டு அமைதி கடைப்பிடிக்கப்படுகிறது. குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும் அளவுக்கு அமைதி நிலவுகிறது. அதற்குப் பிரதான காரணம் பழுத்த தலையைக் கொண்ட தலைமை ஆசிரியரின் கடுமையான உத்தரவேயாகும்.

அன்று வெள்ளிக்கிழமையாக இருந்தமையினால் தேவாரம் பாட வேண்டும். வழமையாக ஜானகியும் குமுதாவும் சேர்ந்தே தேவாரம் பாடுவார்கள். இன்றைக்கும் அவ்வாறே பாட ஆரம்பித்தார்கள். தேவாரம் பாடும் போது ஜானகிக்குக் குரலில் தடுமாற்றம்... சுரேஷின் கடிதத்தைப் பற்றியும், அவன் ஏன் இன்றைக்குப் பாடசாலை வரவில்லை என்பதைப் பற்றியும், பாடசாலையில் அவனின் துள்ளாரித்தனத்தைப் பற்றியும், போன வாரம் அவன் கணக்கு வாத்தியாரிடம் வகையாக மாட்டிக் கொண்டு அடி வாங்கியதைப் பற்றியுமே எண்ணிக் கொண்டிருந்தது. ஜானகியின் இந்தத் தடுமாற்றத்தைக் குமுதா அவதானித்தாள்.

அசெம்பிளி முடிந்து எல்லோரும் வகுப்பறைக்குச் சென்று ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள். ஜானகியின் வகுப்பிற்கு முதலாம் பாடத்திற்கான ஆசிரியர் இன்னும் வரவில்லை. அதனால் வகுப்பறையில் நேசன் இரவு பார்த்த ‘பகவதி’ படத்தைப் பற்றியும், அதில் விஜய் டெண்டுல்கரைப் போல் ஹெயர்ஸ்டையில் பண்ணிய விதம் பற்றியும் கதை சொல்லிக் கொண்டிருந்தான்.

பிறவுண் பேப்பரால் உறையிடப்பட்டிருந்த தமிழ்க் கொப்பியின் உறைக்குள் மறைத்து வைத்திருக்கும் கடிதத்தை வெளியே எடுத்தாள் ஜானகி. அதில் சுரேஷ் எழுதிய வசனங்களை இரசித்தவாறே மூன்று முறை திருப்பித் திருப்பிப் படித்தாள். ஜானகியை அறியாமலே அவள் இதழோரம் புன்னகை பூத்தது. நடிகர் சத்தியராஜைப் போல் வெள்ளையாக.... உயரமாக இருக்கும் சுரேசை மனதிற்குள் நினைத்து... நினைத்து... புகழடைந்து கொண்டிருந்தாள். அவள் மூச்சே சுரேஷாக மாறிவிட்டது. அந்த அளவிற்கு அந்தக் கடிதம் சுரேஷில் பாசத்தை ஏற்படுத்திவிட்டது.

பக்குவமாக அந்தக் கடிதத்தை இருந்தவாறு சற்சதுரமாக மடித்துத் தமிழ்க் கொப்பியின் உறைக்குள் தள்ளினாள் ஜானகி. என்ன கருத்து... என்ன ஆழம்.... தன்னை மறந்து தன் நாவை முரசுடன் ஊரசி இச்சுத் தட்டினாள் ஜானகி.

இச்சுத் தட்டும் சத்தம் கேட்க வகுப்பறையில் உள்ள சக மாணவர்கள் ஜானகியையே நோக்கினார்கள். நேசன் நினைத்தான் ‘பகவதி’ படத்தில் விஜய் டெண்டுல்கரைப் போல் ‘ஹெயர்ஸ்டையில்’ பண்ணிய தன் கதையைக் கேட்டுத்தான் இச்சுத் தட்டுகிறாள் ஜானகி என்று.

என்ன ஆச்சு இவளுக்கு என... குமுதா மறுபடியும் யோசிக்கிறாள். “ஜானகி... ஜானகி..” இருமுறை கூப்பிட்டாள் குமுதா. “ம்...” என்று பதில் கிடைத்தது. “ஏன்... இப்படி பிரமை பிடிச்ச மாதிரி இருக்கிறே?” குமுதாவின் இக் கேள்விக்கு “இலேசாகத் தலை வலிக்கிறது” என ஜானகி கூறி முடிப்பதற்குள்....

தலைமை ஆசிரியரின் அறையில் இருந்து பாடசாலைப் பியோன் வந்து ஜானகியை அதிபர் வருமாறு கூறிச் சென்றான். ஜானகிக்குத் தூக்கிவாரிப் போட்டது. ‘அதிபர் எதற்கு என்னை.... கடித விடயம் தெரிந்துவிட்டதோ...?’ எனக் குழப்பிப் போய் பல கருதுகோள்கள் ஜானகியின் மனதில் வந்தன. வியர்க்க விறுவிறுக்கத் தயக்கத்துடன் அதிபரின் அறைக்குள் சென்றாள் ஜானகி.

என்ன ஆச்சரியம்; தான் எதிர்பார்த்துக் காத்திருந்த சுரேஷ் அதிபருடன் உரையாடிக் கொண்டிருந்தான். பதற்றத்தில் எச்சிலை உள்ளே விழுங்கியவாறு வரிசையாக அடுக்கியிருந்த மூன்றாவது சாம்பல்நிற அலுமாரி ஓரம் தலை குனிந்து நின்றிருந்தாள் ஜானகி.

அவள் காதுகளைக் கூராக்கிய வண்ணம், வலது கால் பெருவிரலை தான் அணிந்திருந்த கறுத்த நிறச் செருப்பில் அழுத்தியவாறு நின்றிருந்தாள்.

அதிபர் தன் மேசை மீது இருந்த நீல நிறப் பந்து போன்ற உருண்டையான உலகத்தைத் தன் வலது கைச் சுட்டுவிரலால் உருட்டியவாறு “ஜானகி.. சுரேஷ் சொல்வதெல்லாம் உண்மையா?” என்றார்.

தனக்குத் தந்த கடிதத்தைப் பற்றித்தான் சுரேஷ் அதிபரிடம் கூறிவிட்டான் என நினைத்து ஜானகி பயத்தில்.... சுரேஷ் நேற்றுக் கொடுத்த கடிதத்தைப் பற்றியும்... அதில் எழுதியுள்ள விடயங்களைப் பற்றியும் அக்குவேறு ஆணிவேறாய் அதிபரிடம் ஒப்புவித்தாள் தடுமாறிய குரலில். அதைக் கேட்ட அதிபர் ஒரு கணப் பொழுதில் ஆடிப்போன நிலையில் கதிரை நுனியில் இருந்தவர் சற்று முன்னுக்குச் சென்று திறந்த வாயை மூடாமல் இருந்தார்.

பாவம் சுரேஷ் அதிபரிடம் சொன்னது கடிதத்தைப் பற்றியல்ல என்பது அவளுக்குப் புரியவில்லை. அவர் எதிர் வரும் சரஸ்வதி பூசையின் இறுதி நாளன்று ஜானகியின் வீணைக் கச்சேரியைப் பாடசாலை மண்டபத்தில் அரங்கேற்றுவதற்கு மாணவர் ஒன்றியத்தால் முடிவு செய்யப்பட்ட விடயத்தைப் பற்றியே அதிபரிடம் கூறியிருந்தான்.

ஜானகி அவசரத்தில் சுரேஷைப் பற்றி அதிபரிடம் உளறிவிட்டோமே என எண்ணி... எண்ணி வருத்தப் பட்டாள்.

## அங்கம் 12



"நான் இதை எதிர்பார்க்கலை ஸார். மூணு பேரையும் துப்பாக்கி முனையில் மடக்கியதும்- கொஞ்சம் அலட்சியமா இருந்துட்டேன். ஏர் ஹோஸ்டஸ் தேவிகா அவங்களோட கையாளா இருப்பாள்ன்னு நான் கொஞ்சம் கூட நினைச்சே பார்க்கலை. ஆரம்பத்துல அவளைப் பணயம் வச்சுத் தான் ஃபிளைட்டை ஹைஜாக் பண்ணினாங்க. அவளும் இயற்கையா நடிச்சு அவங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்திருக்கா...எல்லாமே 'செட்டப்'புன்னு இப்பத்தான் தெரியுது. ஒருவேளை அவங்க மூணு பேரும் ஆபத்துல மாட்டிகிட்டா... காப்பாத்தறதுக்காகத்தான் இவ கொஞ்சம் தள்ளி நின்னிருந்திருக்கா..."

கமிஷனர் சோர்வாய் கண்களை மூடித் திறந்தார்.

"மிஸ்டர் விவேக்! அவங்க இப்போ உஷாராயிட்டாங்க. அவங்க எடுக்கிற நடவடிக்கைகளும் ரொம்பவும் மூர்க்கமாயிருக்கும். மத்த பயணிகளை நாம காப்பாத்தறதுக்காக நிறைய சிரமப்பட வேண்டியிருக்கும்..."

கமிஷனர் சொல்லும்போதே- மைக்ரோ ரிஸீவர் கூப்பிட்டது. விவேக் எழுந்துபோய் ஹெட் போனை மாட்டிக் கொண்டான்.

"எஸ்..."

மறுமுனையில் கவி கேட்டான். "க்ரைம் பிராஞ்ச் ஆபிஸர் விவேக் கூட நான் பேசணும்..."

"நான்தான் விவேக்."

"நீ மனோஜ்குமார் இல்லை. விவேக் என்கிற உண்மையை இப்பத்தான் கான்ஸ்டபிள் லீலா சொன்னா.



உன்னோட போட்டோவை நான் பேப்பர்ல பார்த்திருந்தும் நான் உன்னைப் புரிஞ்சுக்காமே போயிட்டேன். ஆயுசு உனக்கு செம கெட்டி. உன்னோட பெண்டாட்டிக்கு தாலி பாக்கியம் அபாரம்."

"உனக்கு ஜோஸ்யம் கூட பார்க்கத் தெரியுமா?"

கவி கோபமானான். "விவேக்! எண்பது பேரை நீயும் பெல்லியப்பாவும் காப்பாத்திட்டதை நினைச்சுப் பெருமைப்பட்டுகிட்டு இருக்காதே. மீதி இருக்கிற நூத்தி சொச்சப் பேரையும் நான் நினைச்சா குருவிகளை சுடற மாதிரி சுட்டுத்தள்ள முடியும்."

"எனக்குத்தான் உன்னோட வீரச் செயல் தெரியுமே? கடந்த அஞ்சு மணி நேரமா நான் பார்த்துட்டுதானே வந்தேன். சரி என்ன விஷயம்?"

"நீ அடைஞ்ச வெற்றிக்கு உனக்கு ஒரு பரிசு கொடுக்கப் போறேன்."

"பரிசா"'

"எஸ். நர்ஸா வேஷம் போட்டுகிட்டு வந்த கான்ஸ்டபிள் லீலாவை தலை வேறா உடம்பு வேறா வெட்டிக் கொன்னுட்டோம். போஸ்ட் மார்ட்டம் பண்ண உங்களுக்கு உடம்பு வேணுமேங்கிறதுக்காக ரன்வேயில் வீசி எறிஞ்சிருக்கோம். யாரையாவது அனுப்பி பொறுக்கிக்கச் சொல்லு."

"ராஸ்கல்..."

"திட்டி பிரயோஜனமில்லை விவேக்! நாங்க ஏற்கனவே சில கோரிக்கைகளை வெச்சிருக்கோம். கூடவே இன்னொரு புது கோரிக்கை ஒண்ணையும் வெக்கப் போறோம்."

"என்ன?"

"விசாரணைக் கைதிகளாக இருக்கிற எட்டு பேரும்- கமிஷனர் வீட்டுக்கு போய் மாட்டிகிட்ட குருகோவிந்தும், உத்தம் சிங்கும்- கமிஷனர் மகள் ஹரிதாவும் மட்டும் எங்களுக்குப் போதாது."

"பின்னே?"

"நீயும் டாக்டரா வந்தாரே- பெல்லியப்பா அவரும் எங்கிட்டே சரணடையணும்."

"என்னையும் பெல்லியப்பாவையும் பழிக்கு பழி வாங்கப் போறீங்களா?"

"செமத்தியா."

"நீ தப்பான ரூட்ல போறே?"

"நான் சரியான ரூட்லதான் போயிட்டிருக்கேன். நாளைக்கு காலையில ஆறு மணி வரைக்கும் 'கெடு' வெச்சிருக்கேன். 5.59க்குள்ளே எங்களோடகோரிக்கைகள் நிறைவேற்றப்படணும். இல்லேன்னா அரை மணி நேரத்துக்கு ஒரு பயணி வீதமா கணக்கு வெச்சுகிட்டு-சுட்டுச் சுட்டு ரன்வேயில் எறிஞ்சிட்டே இருப்போம்..."

"ப்ளடி...! அப்படியெல்லாம் பண்ணாதே. உன்னோட எல்லா கோரிக்கைகளையும் நான் நிறைவேத்தி வெக்கிறேன்...!"

"நாளைக்கு காலையில ஆறு மணிக்குள்ளே!"

"கண்டிப்பா."

"எங்களை ஏமாத்த நினைச்சா...நீ ஏமாந்து போயிடுவே விவேக்..."

*எழுதுவது*

**ராஜேஷ்குமார்**

"ஒரு தடவைதான் ஏமாந்தீங்க... இன்னொரு வாட்டி ஏமாந்து போக உங்களுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு...?"

"இன்னொரு வாட்டி ஞாபகப்படுத்தறேன். விசாரணை கைதிகளாய் இருக்கிற எட்டு பேரையும் உத்தம் சிங்- குருகோவிந்தையும் கமிஷனர் மகள் ஹரிதாவையும் உன்னையும் பெல்லியப்பாவையும்- எங்கிட்டே கமிஷனர் ஒப்படைக்கணும்..."

"ஒப்படைப்பார்..."

"புத்திசாலித்தனமா பண்றதா நினைச்சுகிட்டு நீயும் கமிஷனரும் எதையாவது பண்ணி என்னையும் என்னோட சகாக்களையும் மடக்க நினைச்சீங்க... விளைவுகள் ரொம்பவும் மோசமாயிருக்கும்."

"பின்னே? உங்க விளைவுகள் என்ன நல்லாவா இருக்கும்"'

"உனக்கு ரொம்பத் திமிர்."

"இதுநாள் வரைக்கும் எனக்கு கிடைக்காத அரிய பாராட்டு இது. பாராட்டுக்கு நன்றி. நாளைக்கு காலையில ஆறு மணிக்கு பார்ப்போம்."

ரிஸீவரை அணைத்தான் விவேக்.

மணி பன்னிரெண்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

விமானத்திற்குள் பாதி பிரயாணிகள் மரணப் பயத்தில் கொட்ட கொட்ட விழித்திருக்க- தேவிகா கையில் மெஷின் கண்ணோடு இருக்கைகளுக்கு மத்தியில் நீளமாய் நடந்தாள். அவளுக்குப் பின்னால் கவி கையில் பிஸ்டலோடு- பேசியபடி தொடர்ந்தான்.

"சரியா இன்னும் ஆறு மணி நேரந்தான் இருக்கு. நாளைக்கு காலையில் ஆறு மணிக்குள்ளே நம்ம கோரிக்கைகளை அவங்க நிறைவேத்தியாகணும் இல்லேன்னா நம்ம சுயரூபத்தைக் காட்ட வேண்டியதுதான்."

"கவி."

"ம்."

"இந்த ஆறு மணி நேர அவகாசம் அவங்களுக்கு போதாதுன்னு நினைக்கிறேன். இன்னும் ஒரு ஆறு மணி நேரம் சேர்த்து கொடுத்திருக்கலாம்."

காக்பிட் வரைக்கும் போய் திரும்பினார்கள்.

"இந்த அவகாசம் அவர்களுக்குப் போதும் தேவிகா. அவங்க நினைச்சா ஒரு வாயு தூத் விமானத்தை அமர்த்திகிட்டு மும்பை போய் நம்ம இயக்கத்தைச் சேர்ந்த பத்து பேரையும் அந்த ஹரிதா பொண்ணையும் விடியறதுக்குள்ளே கூட்டிட்டு வர முடியும்."

"விவேக் பேசின பேச்சுல உனக்கு நம்பிக்கை இருக்கா?"

"அவங்களுக்கு வேற வழியில்லை. நாம சொன்னதைச் செஞ்சுதான் ஆகணும்."

"சரி, நாம கேட்டபடி நம்ம ஆட்கள் பத்துபேரும் ஹரிதா, விவேக், பெல்லியப்பாவும் ஃபிளைட்டுக்குள்ளே வந்த பின்னாடி, நம்முடைய அடுத்த மூவ் என்ன?"

"பைலட்டைத் தவிர- பாக்கி பாசஞ்சர்ஸ் எல்லாரையும் உடனே விடுதலை பண்றோம். விவேக்கையும் பெல்லியப்பா-ஹரிதாவையும் பணயக் கைதிகளாக வெச்சுகிட்டு ஃபிளைட்ல லாகூர் போயிடறோம். லாகூர் போயிட்டா நம்ம ராஜ்யம்தானே?"

"விவேக் வகையறாவை எங்கே வெச்சு தீர்த்து கட்டறது?"

"லாகூர் ஏர்போர்ட்ல."

"லாகூர் ஏர்போர்ட்ல அந்த மூணு பேரையும் தீர்த்துக் கட்டி ரன்வேயில் எறிஞ்சுட்டு ஏர்போர்ட் அதாரிடீஸ்கிட்டே நமக்கு வேண்டிய பாரசூட்களை கலெக்ட் பண்ணிக்கிறோம்."

"ஆமா."

"ஃபிளைட்டை மறுபடியும் கிளப்பி- ஒரு மணி நேர பிரயாணத்திற்குப் பிறகு கிர்பூர் பாரஸ்ட்டுக்கு மேலே பறக்கிறோம்....ஃபாரஸ்ட் மேலே ஃபிளைட் பறந்திட்டிருக்கும் போதே பாரசூட்களைத் தரிச்சுகிட்டு ஒவ்வொருத்தரா கீழே குதிச்சு... நம்ம மறைவான இருப்பிடத்துக்குப் போறோம்."

"அதே பிளான்தான்..."

விமானத்தின் கதவருகே சாய்ந்து நின்றிருந்த ஜெயராஜ்- பக்கத்திலிருந்த முட்டை வடிவ கண்ணாடி வழியே, ஏர்போர்ட் டவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன ஜெயராஜ்? நம்ம அரசாங்க ஆட்கள் என்ன பண்றாங்க?"

"வந்து பாரு..."

கவி குனிந்து பார்த்தான்.

நிழலுருவங்கள் வெளிச்சமான கண்ணாடி ஜன்னல்களுக்குப் பின்னால், வேகவேகமாய் அசைந்து கொண்டிருந்தன.

ஏர்போர்ட் லௌன்ச்சில் ஏராளமான காக்கி யூனிபார்ம்கள் ரைஃபிள்களோடு அசையாமல் நின்றிருந்தார்கள்.

"பாவம்! ரொம்பவும் டென்ஷன்ல இருக்காங்க"

"கான்ஸ்டபிள் லீலாவோட மரணம் அவங்களை கொஞ்சம் உசுப்பியிருக்கு."

"லாகூர் ஏர்போர்ட்ல அந்த விவேக்கையும் இப்படித்தான் ரெண்டா வெட்டிப் போடணும்...நம்ம சர்தார் சாவுக்குக் காரணமான ஹரிதாவை மெஷின்கன்னாலே சல்லடை போடணும். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பெல்லியப்பாவை பெட்ரோல்ல நினைச்சுக் கொளத்தணும்" கவி உறுமினான். ரத்தம் தேங்கிக் கொண்ட மாதிரி அவனுடைய கண்கள் சிவந்து போயிருந்தன.

நேரம் 1.00மணி. பொலிஸ் அதிகாரிகளும் விமான நிலைய அதிகாரிகளும் தூக்கம் கெட்ட கண்களோடு கவலையாய் தெரிய, பாதுகாப்பு அமைச்சகத்தை சேர்ந்த மூத்த அதிகாரிகளை டெலிபோனில் பிடித்துப் பேசிக் கொண்டிருந்தான் விவேக்.

"ஸாரி...ஸார்..இதைவிட்டா வேறு வழியில்லை."

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## இளம் வயதுத் திருமணம்.....

றஞ்சனியை அவள் தாய் வள்ளி அழைத்து வந்திருந்தாள். இருவரையும் வரவேற்று ஆற்றுப்படுத்தல் மையத்தில் அமரும்படி கேட்டுக் கொண்டேன்.

"எந்த முகாமிலிருந்து வருகிறீர்கள்?"

"சிவகங்கை மாவட்டம், காரையூர் முகாமிலிருந்து வருகிறோம்" என்றாள் வள்ளி.

"என்ன பிரச்சனையாக என்னிடம் வந்தீர்கள்?" றஞ்சனி அமைதியாகவே இருந்தாள்.

இவர் எனது இரண்டாவது பிள்ளை. திருமணமாகி ஒரு குழந்தை இருக்கின்றது. கல்யாணம் ஆகி எட்டு மாதத்திலேயே இவளுடைய புருசன் இவளை அடித்து துன்புறுத்தி கலைத்துவிட்டான். இவளும் குழந்தையும் என்னுடன் இப்போது இருக்கிறார்கள். குழந்தைக்கு பால்மாவோ நல்ல உணவுகளோ கொடுக்க என்னால் முடியவில்லை. எனக்கும் புருஷன் இல்லை. இவள் போக இன்னும் மூன்று பிள்ளைகள் எனக்கு இருக்கிறார்கள். நாள் கூலி வேலைக்குச் சென்றுதான் வயிற்றைக் கழுவுகிறோம்" என்று வள்ளி அழுதாள். றஞ்சனியும் சேர்ந்து அழுதாள்.

றஞ்சனியின் மடியில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையும் சத்தமாக அழுதது.

வள்ளியையும் றஞ்சனியையும் ஆசுவாசப்படுத்தி அழுகையை நிறுத்தினேன். பின்ப றஞ்சனியிடம் குழந்தைக்கு வெளியிலுள்ள கதிரையில் இருந்து பாலூட்டும்படி கேட்டுக் கொண்டேன்.

தொடர்ந்து வள்ளியுடன் பேசினேன்.

"சொல்லுங்கள் வள்ளி! றஞ்சனிக்கு வயது என்ன இருக்கும்?"

"பதினேழுவயது இருக்கும்" என்றாள்.

"இலங்கையில் உங்கள் சொந்த இடம் எது?"

"கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம் என்ற இடத்தில் வசித்து வந்தோம்."

"உங்கள் புருசனுக்கு என்ன நடந்தது?"

"இவர் வயல்வேலைக்கு சென்றபோது இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்."

"எந்த வருடம் நடந்தது."

"1988 ஆண்டு நடுப்பகுதியில்."

"பிறகு!"

"1990ஆம் ஆண்டு அகதியாக இந்தியா வந்துவிட்டேன்."

"வள்ளி! றஞ்சினியுடைய புருசன் எந்த இடம்?"

"அவர் வவுனியா என்று கேள்விப்பட்டேன்" என்றார்.

"அவருக்கு எத்தனை வயது இருக்கும்?"

"தெரியாது."

"வள்ளி நீங்கள் புருசன் இறந்த பிறகு உங்கள் 5 பிள்ளைகளையும் பொறுப்புடன் வளர்த்து மூத்த பிள்ளைக்குத் திருமணம் செய்து கொடுத்தும் இருக்கிறீர்கள். இரண்டாவது பிள்ளை திருமணமாகி இப்போது பிரிந்து இருக்கிறார். பிள்ளைகளை வளர்க்க வேண்டுமென்ற பொறுப்பு உங்களிடம் நிறையவே இருக்கிறது. ஆனால், றஞ்சனியுடைய புருசனின் சொந்த இடம், பெற்றார். குடும்ப விபரம், அவனது வயது போன்ற விபரங்கள் உங்களுக்குச் சரியாகத் தெரியாமலே திருமணம் முடித்து கொடுத்துள்ளீர்கள் என்பதையும் பதினாறு வயதில் திருமணத்தை முடித்து கொடுக்க எப்படிச் சம்மதித்தீர்கள் என்பதையும் நினைக்கும் போது நீங்கள் ஒரு தாயின் பொறுப்புணர்ந்து செயற்படவில்லை என்பது எனக்கு கவலையளிக்கின்றது. வள்ளி! எனது கூற்றை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?"

"சரிதான் ஐயா, புருசனும் இல்லாமல் நான் படும்பாடு. கஸ்ரங்கள் ஒரு பக்கம், முகாமில் ஒரு குமர்ப் பிள்ளையை வைத்திருப்பது என்றால் எவ்வளவு கஸ்ரம் என்பதும் உங்களுக்குத்



தெரியும். நானும் வெளியால வேலைக்குப் போகிறவள். குமர்ப்பிள்ளையை வீட்டில் விட்டுச் சென்று திரும்பும் வரை நான் பட்ட வேதனைகள் சொல்ல முடியாது. எமது முகாமில் எத்தனையோ குமர்ப்பிள்ளைகள் பிள்ளத்தாச்சி ஆன பிறகுதான் கல்யாணமே முடித்துள்ளார்கள். இப்படி நடந்துவிடக் கூடாது என்பதால்தான் சின்ன வயதிலேயே திருமணம் முடித்துக் கொடுக்க நானும் சம்மதித்தேன்."

"அது சரி, உங்கள் பிள்ளைக்கு ஒரு மாப்பிள்ளையை தெரிவு செய்வதென்றால் அவனைப் பற்றியோ குடும்பத்தைப் ' பற்றியோ முழுமையாக அறிய வேண்டும் அல்லவா?"

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

"அகதிகள் முகாமில் சாதி, சமயம், குடும்பம் என்று யாரும் பார்ப்பதில்லை. வயதைக் கூடப் பார்ப்பதில்லை. அதிகமான திருமணங்கள் எல்லாம் இப்படியேதான் நடந்து முடிகிறது" என்றாள் வள்ளி.


"சாதி, சமயம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், வயது, குடும்ப விவரம் அறிவது முக்கியம் என்று தோன்றவில்லையா?. திருமண வயது என்ன என்பதும் சட்டமாக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். ஆணுக்கு 21 வயதும் பெண்ணுக்கு 18 வயதும் என்று கூறப்பட்டிருந்தாலும் நமது சமுதாயத்தில் மேற்படி வயது எல்லைகள் கூட இன்னும் கூட்ட வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். குடும்பம், வாழ்க்கை, சமூகம், ஒழுக்கம் இவற்றைப் பற்றி அறியாத பருவத்தில் உள்ள அரும்புகளுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தால், றஞ்சனிக்கு ஏற்பட்டது போல மண முறிவு ஏற்படவே நிறைய வாய்ப்பு இருக்கிறது.


குழந்தையிலேயே குழந்தையைச் சுமக்கும் நரிக்குறவர்களுடைய வாழ்க்கைபோல எமது ஈழத் தமிழர்களின் வாழ்க்கை மாறிவிட்டதே!"

தொடர்ந்து வரும்...

## கடவுள் சத்தியமாக நாகப்பாவை நான் கொல்லவில்லை-வீரப்பன்

சந்தனக் கடத்தல் வீரப்பனின் பிடியில் 106 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடக்க, சடலம் மீட்கப்பட்டுள்ளது.





இப்போது நாகப்பாவின் சாவுக்கு வீரப்பன்தான் காரணம் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் நாகப்பாவைக் கொன்றது தமிழ்நாட்டு அதிரடிப் படையினரே என்று வீரப்பனும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

கொளத்தூர் மணி என்ற தனது சகா ஒருவரைத் தூதுவராக அனுப்பி நாகப்பாவை மீட்க வேண்டும் என்று வீரப்பன் நிபந்தனை விதித்து வந்தான். அவனது காலக்கேடு முடிவுற்றிருந்த நிலையில் நாகப்பாவின் மரணம் சம்பவித்திருக்கிறது. எவ்வாறெனினும் நாகப்பாவை "கடவுள் சத்தியமாக நான் கொல்லவில்லை" என்று அவரது குடும்பத்தினருக்கு வீரப்பன் கசற் அனுப்பியிருக்கிறான்.

நாகப்பா குடும்பத்தினருக்கு வீரப்பன் அனுப்பி இருக்கும் கசற்றில் "வியாழக்கிழமை காலை 10 மணி அளவில் செங்கி வனப்பகுதியில் நான், நாகப்பா மற்றும் என் சகாக்கள் ஒரு பாறை மீது அமர்ந்திருந்தோம். திடீரென சேத்துக்குளி கோவிந்தன் சத்தமிட்டவாறே ஓடி வந்தான். தமிழக அதிரடிப் படை அருகில் நெருங்கி வந்து விட்டதாகத் தெரிவித்தான். அவன் சொல்லி முடிப்பதற்குள் தூரத்தில் இருந்த தமிழக அதிரடிப் படையினர் சரமாரியாகச் சுட ஆரம்பித்தனர். நாங்களும் பதிலுக்குச் சுட ஆரம்பித்தோம்.

இதற்கிடையில் பாறை மீது அமர்ந்திருந்த நாகப்பாவை நான் அருகில் உள்ள பாறையில் மறைந்துகொள்ளும்படி சத்தம் போட்டேன். ஆனால் அவர் அதைக் காதில் வாங்காமல் அங்கேயே ஒரு சிலை போல உட்கார்ந்திருந்தார். நான் மீண்டும் "பெரியவரே ஓடுங்க" என்று கத்தினேன். அதற்குப் பிறகே அவர் இரண்டு பாறைகளுக்கு நடுவில் மறைந்து கொள்ள ஓடினார். அப்போது தமிழக அதிரடிப் படையினர் சுட்டதில் அவர் உடலில் குண்டு பாய்ந்து காயம் ஏற்பட்டது. எனக்கும் என் சகாக்களில் சிலருக்கும் சிறுகாயம் ஏற்பட்டது.

அவரை எப்படியாவது காப்பாற்ற முனைந்தோம். ஆனால் நிலைமை கை மீறிவிட்டது. நாங்கள் தப்பிச் செல்ல வேண்டி இருந்ததால் அவரை அங்கேயே விட்டு விட்டு ஓட வேண்டிய நிலைக்கு ஆளானோம்.

இதை நான் ஏன் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றால் எனக்கு எந்தக் கெட்ட பெயர் ஏற்படுவதையும் நான் விரும்பவில்லை. கடவுள் மீது சத்தியமாகச் சொல்லுகிறேன், நாகப்பாவுக்கு ஏதாவது ஆகி இருந்தால் அதற்கு முழுப் பொறுப்பு தமிழக அதிரடிப்படையே சேரும்.

என்னுடன் நாகப்பா இருந்த 106 நாட்களில் நான் அவரை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வந்தேன். அவரிடம் எந்தப் பிரச்சினையும் நான் செய்யவில்லை. அவர் என்ன சாப்பாடு கேட்கிறாரோ அதை நான் கொடுத்து வந்தேன். ஒரு நாள் ரொட்டியும், ஜாமும் கேட்டார். அதையும் நான் அவருக்குத் தருவித்துத் தந்தேன்.

கொளத்தூர் மணிக்குக் கண்டிப்பாக ஜாமீன் கிடைக்கும் என்றும் நான் திடமாக நம்பி இருந்தேன். அதற்குப் பிறகு நாகப்பாவை விட்டுவிடலாம் என்று இருந்தேன். ஆனால் மணிக்கு ஜாமீன் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதை ராஜு கவுடா, நாகப்பாவின் மகன் ஆகியோரின் வானொலிப் பேச்சின் மூலம் தெரிந்து கொண்டேன்.

அதற்குப் பிறகு ஏற்பட்ட முன்னேற்றங்கள் எனக்கு அதிருப்தியை ஏற்படுத்தின.

கர்நாடக அரசு தெரிவித்த செய்தியில் ஒரிரு நாளில் கொளத்தூர் மணிக்கு ஜாமீன் கிடைத்து விடும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் தமிழக அரசு விடுத்த செய்தியில் அதற்கு ஒரு மாதத்திற்கு மேல் ஆகும் எனக் கூறப்பட்டது. இதனால் தமிழக அரசு ஏதோ சதித்திட்டம் தீட்டுகிறது என நான் சந்தேகப்பட்டேன். அவர்கள் என் மீது தாக்குதல் நடத்துவார்கள் என எதிர்பார்த்தேன். அதோடு சில நாட்களாகச் சகுனமும் சரியில்லை." என்று வீரப்பன் அந்தக் கசற்றில் தெரிவித்திருந்தான்.

எப்படியிருந்தாலும் நாகப்பா கொல்லப்பட்டுவிட்டார். வீரப்பன் சொல்வதை எத்தனை பேர் நம்புவார்கள் என்று கூறுவதற்கில்லை. அவன் என்னதான் கடவுள் மீது சத்தியம் செய்தாலும் வீரப்பனால் கொல்லப்பட்டவர்களின் பட்டியல் இன்னொருவரால் அதிகரிக்கிறது.

## துருக்கியிலிருந்து ஒரு வசீகரம்




முன் எப்போதும் இல்லாத அளவு கடும் சர்ச்சைக்குரிய நிகழ்வாக மட்டுமன்றி சுமார் 200க்கும் மேற்பட்டவர்களின் உயிரைப் பலிகொண்ட உலக அழகு ராணிப் போட்டியில் துருக்கியைச் சேர்ந்த அஸ்ரா ஆர்க்கின் முதலாவது இடத்தைப் பெற்று முடி சூடிக்கொண்டார்.

லண்டனில் சனிக்கிழமை நடைபெற்ற 2002க்கான உலக அழகு ராணிப் போட்டியில் முஸ்லிம் நாடான துருக்கியிலிருந்து அழகி ஒருவர் முதலிடத்தைப் பெற்றிருப்பது முக்கிய நிகழ்வாக நோக்கப்படுகிறது.

முன்னதாக நைஜீரியாவில் உலக அழகு ராணிப் போட்டி நடக்கவிருந்தது. அங்கு இஸ்லாமிய அமைப்புக்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டதனால் இனக் கலவரம் மூண்டு நூற்றுக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். பின்னர் போட்டி லண்டனுக்கு மாற்றப்பட்டது.

22 வயதான அஸ்ரா சித்திரம் மற்றும் ஆடை அலங்காரத் துறைகளில் மேற்படிப்புப் படிக்க விரும்புகிறார். சங்கீதத்திலும் இவருக்கு விருப்பம் அதிகம்.

போட்டியின் இரண்டாவது இடத்தைக் கொலம்பியாவைச் சேர்ந்த நதாலியா பெரல்டாவும் மூன்றாவது இடத்தை பெரு நாட்டைச் சேர்ந்த மரினா மோறாவும் பெற்றுக் கொண்டனர்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் Basel S.P.T. யின்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

**BERN ZURICH** மாநகரில் நத்தார் புதுவருட மலிவு விற்பனையை நடத்தவுள்ளோம்.

**இடம்: BERN மாநகரில்**
HOTEL ALFA (City West) BERN
பழைய மக்கள் கடைக்கு அருகாமையில்
காலம்: 19.12.2002 வியாழன்
20.12.2002 வெள்ளி
21.12.2002 சனி
நேரம்: காலை 11⁰⁰ மணிமுதல் இரவு 20⁰⁰ வரை

**இடம்: ZURICH மாநகரில்**
Volks. Hous மண்டபத்தில்
Stufaucher. Str 60-(கெல்விஸ்ய பிலாஸ்) (Zurich)
காலம்: 26.12.2002 வியாழன்
27.12.2002 வெள்ளி
28.12.2002 சனி
நேரம்: காலை 11⁰⁰ மணிமுதல் இரவு 20⁰⁰ வரை

குறிப்பு: 1 பவுண் கல்லுநகை, முத்துநகை Bombay Design உட்பட கூலியின்றி 134.⁵⁰ S.F.r. மட்டுமே.
சுவிற்சர்லாந்து நாட்டிலேயே தங்க நகை விற்பனையில் முன்னணி ஸ்தாபனமாகத் திகழும் Basel S.P.T
பெண்களின் அழகோ இரகசியம் S.P.T.யின் தங்க நகை அணியும் போது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

உங்கள் தொடர்புகளுக்கு: S.P.T. Ravi Prop
Te & Fax: 061 2720990 Hand Phone: 079 3562278

# ஜாலி விருந்து

பட உதவி: நெட் பிரியன்



## எலியின் மரபணுவில் 250 கோடி தகவல் குறியீடுகளைக் கண்டுபிடித்து

### விஞ்ஞானிகள் சாதனை!

**எ**லியின் மரபணுக்கூறில் உள்ள 250 கோடி தகவல் குறியீடுகளைப் பகுத்துக் கண்டுபிடித்துச் சாதனை படைத்துள்ளனர் விஞ்ஞானிகள்.

6 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இச் சாதனையைப் புரிந்துள்ளனர். 3 ஆண்டுகள் நடந்த அந்த ஆராய்ச்சியின் முடிவுகள் பிரிட்டனில் வெளியாகும் "நேச்சர்" என்ற அறிவியல் இதழில் வெளியாகியுள்ளன.

மனித மரபணுக்கூறில் பதிவாகியுள்ள தகவல் குறியீடுகளைப் பகுத்து 2 ஆண்டுகளில் மேற்கூறிய சாதனையை விஞ்ஞானிகள் புரிந்துள்ளனர். மனிதன் மற்றும் எலியின் மரபணுக் கூறுகளில், புரோட்டீன் குறியீடுகளைக் கொண்ட தகவல் தொகுப்புகளின் எண்ணிக்கை 27,000 த்திலிருந்து 30,500 ஆகும். இவற்றில் எலியின் மரபணுக்கூறில் இடம்பெற்றுள்ள திலிருந்து மாறுபட்டு, மனித மரபணுக்கூறில் இடம்பெற்றுள்ள பிரத்தியேகமான புரோட்டீன் குறியீட்டுத் தகவல் தொகுப்புகள் 300 தான். அவைதான் எலியிலிருந்து மனிதனை வேறுபடுத்துகின்றன. இந்த வியக்கத் தக்க உண்மையையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த எலியை ஒத்திருந்த ஒரு உயிரினம்தான் இப்போதைய மனிதனுக்கும் சுண்டெலிக்கும் முதாதை. இத்தனை கோடி ஆண்டு காலப் பரிணாம வளர்ச்சிப் போக்கில், ஓர் உயிரினக் கிளையில் மனிதனும் மற்றொன்றில் சுண்டெலியும் உருவாகியுள்ளனர் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மனித இனத்துக்கு மட்டும் கர்ப்ப காலம் அதிகமாக இருப்பது ஏன்? இனப்பெருக்கம் மற்ற விலங்குடன் ஒப்பிட்டால் குறைவாக இருப்பது ஏன்? புதிதாக உருவாகக் கூடிய வைரஸ்களையும் பாக்டீரியாக்களையும் எதிர்கொள்ளக் கூடிய எதிர்ப்பு சக்தி மனித இனத்துக்கு மட்டும் தொடர்ந்து உருவாவது எப்படி? என்பன போன்ற புதிர்களையும் விடுவிக்கும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

எலியின் மரபணுக்கூறில் உள்ள தகவல் குறியீடுகளைப் பகுப்பாய்வு செய்ததுபோல மாடு, மனிதக் குரங்கு, நாய் போன்ற விலங்குகளின் மரபணுக்கூறின் தகவல் குறியீடுகளைப் பகுத்தறியும் ஆய்வும் விரைவில் முடிவடையும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர். அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால், மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டது என்பதையும், மரபணுக்கூறு செயற்படுவது எப்படி என்பதையும் அறிந்துகொள்ள முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

மேலும், "ஐஜிஎப்-1" என்னும் குறியீட்டைக் கொண்ட புரோட்டின் தான் ஓர் உயிரினத்தின் ஆயுள் காலத்தை நிர்ணயிக்கிறது என்றும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மனித மரபணுக்கூறில், "4வது குரோமசோம்" என அழைக்கப்படும் பகுதியில்தான் இது தொடர்பான குறியீடுகள் பதிவாகியிருக்கும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அது தொடர்பான ஆராய்ச்சியும் நடந்து வருகிறது.

## அறுவைச் சிகிச்சையைப் பாதியில் விட்டுவிட்டு வங்கிக்குச் சென்ற டாக்டர் மீது வழக்கு

**அ**றுவைச் சிகிச்சையைப் பாதியில் அப்படியே நிறுத்திவிட்டு, வங்கிக்குச் சென்ற டாக்டர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார் நோயாளி.

பாஸ்டனில் உள்ள மவுன்ட் ஆபர்ன் மருத்துவமனையில் சார்ல்ஸ் அல்கேரி (45) என்பவருக்கு முதுகில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருந்தார் டாக்டர் டேவிட் அர்ன்ட் (41). அப்போது அவருக்கு ஒரு காசோலை வந்துள்ளதாகக் கூறி,அதைக் கொண்டு வந்து கொடுத்தார் மற்றொரு டாக்டர்.

அந்தக் காசோலையை வாங்கியவுடன், "இதோ வந்துவிடுகிறேன். அது வரை இங்கே இருங்கள்" என்று அந்த டாக்டரிடம் கூறிவிட்டு வெளியே சென்றார் டேவிட் அர்ன்ட். நேராக வங்கிக்குச் சென்றுவிட்டு, 35 நிமிடங்கள் கழித்து வந்து அறுவைச் சிகிச்சையைத் தொடர்ந்தார் அவர்.


அவ்வாறு பாதியில் சென்றதால், அவரது சலுகைகளை கடந்த ஜூலையில் இரத்துச் செய்துவிட்டது மருத்துவமனை நிர்வாகம். "நோயாளியின் உயிருக்கு உடனடி ஆபத்தை ஏற்படுத்தும் செயலைச் செய்துவிட்டார்" என்று கூறி, டாக்டர் டேவிட்டின் மருத்துவர் பதிவை மாநில மருத்துவப் பதிவு வாரியம் இரத்துச் செய்துவிட்டது.

அவசரமாகப் பணம் தேவைப்பட்டதால்தான் வங்கிக்கு உடனே சென்றேன்: மன்னித்து, மீண்டும் மருத்துவர் உரிமத்தை எனக்கு வழங்க வேண்டும் என்று அவ்வாரியத்திடம் விண்ணப்பித்துள்ளார் டேவிட்.

"அவ்வாறு பாதியில் அறுவைச் சிகிச்சையை நிறுத்திவிட்டுச் சென்றதால் எனது வலது கால் நரம்பு பாதிக்கப்பட்டுவிட்டது" என்று கூறி, நட்டஈடு கோரி அவர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார் நோயாளி சார்ல்ஸ் அல்கேரி.



பட உதவி: நெட் பிரியன்



பட உதவி: நெட் பிரியன்

## சிறைக்கைதியின் விந்தைக் கடத்தி செயற்கைக் கருத்தரிப்பில் குழந்தை

இருபதாண்டுகள் தண்டனை பெற்றுச் சிறையில் இருக்கும் கைதியிடமிருந்து அவரது மனைவி, சட்டவிரோதமாக விந்தைப் பெற்றுச் சென்று, செயற்கைக் கருத்தரிப்பு முறையில் குழந்தை பெற்றுள்ளார்.

சட்டவிரோதமாகச் சிறையிலிருந்து பொருளைக் கடத்திச் சென்றதாக சிறைக் கைதி, அவரது மனைவி, லஞ்சம் பெற்றுக் கொண்டு அதற்கு உடந்தையாக இருந்ததாகச் சிறை அதிகாரிகள் ஆகியோர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இச் சம்பவம் அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் நடந்துள்ளது.

குற்றம் புரிந்ததற்காக 20 ஆண்டுகள் தண்டனை பெற்று பென்சில்வேனியாவில் உள்ள ஆலன்வுட் மத்திய சிறையில் 1988லிருந்து அடைக்கப்பட்டு இருப்பவர் கென்னி கிரானடோ (42). அவரது மனைவி ரெஜினா. மனைவியைச் சந்தித்துப் பேச அவரை அவரது வீட்டுக்கு அண்மையில் அழைத்துச் சென்றிருந்தனர் பொலிஸ் அதிகாரிகள். அப்போது, வீட்டில் இருந்த 3 வயதுக் குழந்தையைக் காட்டி, "என்னுடைய மகள்" என்று அதிகாரிகளிடம் கூறினார் கிரானடோ. அதைக் கேட்டு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

இத்தனை ஆண்டுகள் சிறையில் இருப்பவருக்கு எப்படி 3 வயதில் மகள் இருக்க முடியும் என்று குழப்பம் அடைந்தனர்.

விசாரணை நடத்தியதில், சிறையிலிருந்து தனது விந்தை கிரானடோ தனது மனைவி மூலம் வெளியே கடத்தியது தெரியவந்தது. அதைக் கொண்டு, நியூயோர்க் நகர கருத்தரிப்பு மையம் ஒன்றில், செயற்கை முறையில் கருவுற்றார் ரெஜினா. 3 ஆண்டுகளுக்குமுன் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். சிறையில் இருக்கும் கிரானடோவிடமிருந்து விந்தைப் பெற்றுப் பாதுகாப்பாகக் கொண்டு செல்லத் தேவையான பாத்திரத்தைச் சிறைக்குள் எடுத்து வந்ததற்காக ரெஜினா மீதும், அதைச் சட்டவிரோதமாக வெளியே கொடுத்தனுப்பியதற்காக கிரானடோ மீதும் லஞ்சம் வாங்கிக் கொண்டு அதற்குத் உடந்தையாக இருந்ததற்காகச் சிறை அதிகாரிகள் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. குற்றம் நிரூபிக்கப்பட்டால், கிரானடோவுக்கு மேலும் 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

# மன்னாதி மன்னன்

134

இராஜகுமாரன்

இவ்வுலகில் ஆக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் என்றோ ஒருநாள் அழிந்தே தீரும். இவ்வுலகில் பிறக்கும் மனிதர்கள் எவராயிருந்தாலும்- உலகினை ஒரே குடைக்கீழ் ஆட்சி புரிந்து வந்தாலும் அவரும் இறுதியில் மாண்டொழிந்து போக வேண்டியவரே! இது உலக நியதி. இதனை மாற்றியமைக்க இறைவன் அருள் இருந்தாலும் முடியவே முடியாது.

மாமன்னர் விக்கிரமாதித்தன் இரண்டாயிரம் ஆண்டுகள் நீதி வழுவாமல் மிகச் சிறப்பான முறையில் ஆட்சி புரிந்து வந்தார். எத்தனையோ வீரதீர பராக்கிரம செயல்களில் ஈடுபட்டு அனைவருக்கும் உதவி ஒத்தாசைகள் புரிந்தார். என்றும் மாறாத இறை பக்தி கொண்டவர். காளிகாம்பாளே அவருடைய இஸ்ட தெய்வம்.

அம்பாளின் ஆலயத்தில் வலம் வந்து கொண்டிருந்த பொழுது என்றும் இல்லாத வாறு காலடி சறுக்கியது. இந்தச் சந்தர்ப்பமே மாமன்னருடைய இறுதிக்காலம் நெருங்கிவிட்டது என்பதனை அவருக்கு அறிவுறுத்தியது. அமைச்சர் பட்டியிடம் இந்த அசம்பாவிதத்தைக் கூறியபோது பட்டியும் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டார்.

உலகில் என்றும் எவரும் கண்டும் கேட்டுமிராத பெரும் புகழ் கொண்ட மன்னர் விக்கிரமாதித்த பூபதி மிகச் சாதாரணமான மனிதனுடைய கையினால் மாண்டொழிய வேண்டிய துர்ப்பாக்கியமான சம்பவத்தை எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

இராமகிட்ன அவதானி தனது தீர்த்த யாத்திரையை முடித்துக்கொண்டு தனது ஊரான பல்லாண்டு புரியை நோக்கி அவசரமாக வந்து கொண்டிருந்தார். இடையில் காவிரி நதி பெருக்கெடுத்து ஓடியமையால் அதனைக் கடந்து அக்கரை சேர்வதற்கு முடியாமல் தவித்துக்கொண்டிருந்தார். அன்று நள்ளிரவுக்கு முன்வரும் சுப வேளையில் தனது மனைவி திவ்விய சிந்தாமணியை அடைந்து விட வேண்டும் என்று தனது சோதிட அறிவாற்றலின் மூலம் கணித்து வைத்திருந்தார்.

இராமகிட்ன அவதானியின் எண்ணம் ஈடேற முடியாமல் காவிரி குறுக்கிட்டமையால் அவதானி தவித்துக் கொண்டிருந்தார்.

காவிரிக் கரையில் மட்பாண்டங்களை வனையும் குயவனார் ஒருவர் அவதானியின் தவிப்பைக் கண்டு காரணத்தை வினவினார். இதற்குப் பதில் அளித்த இராமகிட்ன அவதானி அன்றைய நள்ளிரவுடன் முடியும் சுபவேளையில் ஒரு பெண்ணுடன் கூடி அதன் மூலம் கிடைக்கும் ஆண் குழந்தை உலகிலேயே சர்வ வல்லமை பொருந்திய பெரு வீரனாக வளர்ந்து உலகத்து நாடுகளை ஒரு குடைக்கீழ் கட்டியாளும் தகுதியுடையவனாக வருவான் என்ற உண்மையைக் குயவனாருக்குக் கூறினார். இதனைக் கேட்ட குயவனார் அன்றிரவு நிச்சயமாக ஆற்றுப் பெருக்கு நிற்கப் போவதில்லை என்பதனால் தனது அழகிய மகளான அன்னபூரணியுடன் அன்றைய இரவை இன்பமாகக் கழித்து அவருடைய எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டான்.

குயவனாரின் கூற்றுக்கேற்ப அன்றிரவு உரிய சுபவேளையில் அன்னபூரணியுடன் கூடினார். இதன் மூலம் அன்னபூரணி கருவுற்றாள். பத்து மாதம் கடந்ததும் அழகான ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு

## சாலிவாகனன் பிறப்பும் மாமன்னர் இறப்பும்

"சாலிவாகனன்" என்று பெயரிட்டனர். அவன் ஏழு வயது ஆகும் முன்னரே சகல கலைகளையும், பெற்ற ஒரு மேதாவியாக ஆகிவிட்டான். மாயாஜாலம், மகேந்திர ஜாலம் போன்ற வித்தைகளையும் தானாகவே கற்றறிந்தான்.

ஒர் அரசகுமாரனுக்கேற்ற வீர தீரச் செயல்கள் யாவற்றிலும் தேர்ச்சி பெற்றவனாகிவிட்டான். அவனிடம் யானைகளோ, குதிரைகளோ இல்லை. தனது பாட்டனாரைப் போல் மட்பாண்டங்களை வனையவும் தெரிந்து வைத்திருந்த சாலிவாகனன் களிமண்ணால் யானைகளையும், குதிரைகளையும் போர்வீரர்கள் போன்ற உருவங்களையும் செய்து தனது வீட்டைச் சுற்றிலும் நிறுத்தி வைத்தான். தன்னுடைய மாய வித்தைகளின் உதவியுடன் களிமண்ணால் ஆன போர் வீரர்களுக்கும், யானை குதிரைகளுக்கும் உயிர் கொடுத்து, அவற்றுடன் விளையாடிப் பொழுதைக் கழித்தான்.

சாலிவாகனனுடைய சிறப்புக்களையும் ஆற்றல்களையும் கேள்வியுற்ற சைமபுரி நாட்டை ஆண்டுவந்த அரசன் விசுவநாதன் சாலிவாகனனைத் தன்னுடைய படைகளுக்குத் தலைவனாக நியமித்தார். சாலிவாகனனுடைய சாகசச் செயல்கள் மன்னனை வெகுவாக ஆட்கொண்டது.

சைமபுரி ஆண்டுதோறும் விக்கிரமாதித்த மாமன்னருக்குக் கப்பம் செலுத்துவது வழக்கம். அந்த வருடம் எவருக்கும் சைமபுரி கப்பம் செலுத்த வேண்டியதில்லை என்று விக்கிரமாதித்த மன்னனுக்கு அறிவித்துவிடும்படி சாலிவாகனன் சைமபுரி மன்னனிடம் அறிவுறுத்தினான். மன்னன் விசுவநாதன் அச்சம் கொண்ட போதிலும் சாலிவாகனனின் ஆற்றலில் நம்பிக்கை வைத்துக் கப்பம் செலுத்தாமல் விட்டுவிட்டான். கப்பம் கேட்டு வந்த தூதர்களையும் சாலிவாகனன் மிரட்டி அடித்ததுடன், "சைமபுரி இனிமேல் எந்த நாட்டிற்கும் கப்பம் கட்டப்போவதில்லை. உங்கள் மன்னருக்கு வீரம் இருந்தால் எம்முடன் போருக்கு வரச் சொல்" என்று எச்சரித்தான்.

காவலர்களிடம், சாலிவாகனன் கூறியனுப்பிய வார்த்தைகளைக் கேட்டுத் திகைப்படைந்தார் விக்கிரமாதித்த மன்னர். "இத்தனை ஆண்டுகாலம் ஆட்சி புரிந்தும் எந்த நாடும் எமக்கு இத்தகைய பதில் எதையும் கூறவில்லை. முன்பின் தெரியாத ஒருவன் இவ்வாறு எம்மை எதிர்க்கத் தலைப்பட்டுள்ளானே. உடனடியாக இவனுக்கு நல்லதொரு பாடம் புகட்டியாக வேண்டும்" என்று அமைச்சர் பட்டியிடம் கூறி சைமபுரி நோக்கிப் படையை அனுப்புமாறு உத்தரவிட்டார்.

படைகளைத் தொடர்ந்து மன்னரும் அமைச்சர் பட்டியும் குதிரையில் சென்றனர். இவர்கள் போர்க்களத்தை அடையும் முன்னரே அவர்களுடைய படைகள் பின்வாங்கி ஓடி வருவதைக் கண்டு திகைப்புற்றனர். சாலிவாகனனின் கைகளால் வனையப்பட்ட களிமண் போர் வீரர்களும் யானை குதிரைகளும் தங்கள் படைகளைப் பின்வாங்கி ஓடச் செய்தன என்பதனை அறிந்து மன்னர் விக்கிரமாதித்தன் பெரும் துயர் அடைந்தார்.

நிலைமையை உணர்ந்த அமைச்சர் பட்டி அடுத்தநாள் பொழுது விடியும் பொழுது அவர்களுடைய இரண்டாயிரமாம் ஆண்டு ஆட்சிக் காலம் முற்றுப் பெறுவதாக மன்னர் விக்கிரமாதித்தனிடம் எடுத்துக் கூறினார். இதனைக் கேட்ட மன்னர் பட்டியையும் அழைத்துக் கொண்டு உஜ்ஜயினி, மாகாளி அம்மன் கோவிலை அடைந்தார்.

மன்னர் விக்கிரமாதித்தனின் படைகள் தன்னுடைய படைகளால் வெற்றி கொள்ளப்பட்டதை அறிந்து சாலிவாகனன் பெரும் மகிழ்ச்சியடைந்தான். மன்னரும் அமைச்சர் பட்டியும் பின்வாங்கி ஓடிவிட்டனர் என்பதை உணர்ந்த சாலிவாகனன் களிமண்ணினால் ஒரு சக்கரம் செய்து மன்னர் விக்கிரமாதித்தனின் தலையைச் சீவிவிடுமாறு மந்திர உச்சாடனம் செய்து ஏவினான். அது விரைந்து சென்று காளிகாம்பாள் கோவிலில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த மாமன்னர் விக்கிரமாதித்தனின் தலையைச் சீவியது. அவருடைய தலை அம்மனின் தாழ்களில் போய் விழுந்தது.

மன்னர் விக்கிரமாதித்தன் தனது காலம் முடிவடைவதை அறிந்ததும் வேதாளத்தின் சாபத்தை நீக்கி தேவலோகம் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். காளிகாம்பாள் காலடியில் கிடந்த மன்னர் விக்கிரமாதித்தனின் தலை அவருடைய அந்தப்புரத்தில் போய்ச் சேர்ந்தது.

மன்னருடைய ஆயிரத்தி எட்டு மனைவியரும் அவருடைய தலையுடன் தீ வளர்த்து அத் தீக்குள் இறங்கித் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டனர்.

(மன்னர் விடை பெறுகிறார்)

## காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



• நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை •

-காதில பூ கந்தசாமி-

வணக்கம். வந்தனம் என்று இது காதில பூ கந்தரசாமி நடத்தும் 'தேட வேண்டிய பாடல்' வேடிக்கை வினோத நிகழ்ச்சி! இங்கே ரெண்டு போட்டியாளர்கள். நான் ஒரு குளூ கொடுத்து பாட்டைக் கொடுப்பேன். அந்தப் பாடலைக் கண்டுபிடித்து அதன் மெட்டில், தனது சொந்த வரிகளைப் புனைந்து ஒரு சரணம், ஒரு பல்லவி இரண்டும் பாட வேண்டும். சம்பந்தப்பட்ட விடயமொன்றைப்பற்றி ஒருவருக்கும் சம்பந்தப்படாததைப் பற்றி மற்றவருக்கும் பாடல் கொடுத்திருக்கிறேன். பாடுற வைக்கும் பாட்டுக்கும் சம்பந்தமிருந்தால்.... வட் டு டு?

ஓகே! இதோ முதலாவதாகப் பாட வருகிறார் எங்கள் மண்ணெண்ணெய் அவர்கள், சொறி சொறி, மகேசன் அவர்கள்.

கா.பூ: மகேசன் அவர்களே, ஏதோ ஒரு பாட்டில மண்ணெண்ணையை உங்களோட சம்பந்தப்படுத்தி..., சொறிசொறி, தண்ணீரோட சம்பந்தப்படுத்தி ஒரு வரி வருகுதே, அது என்ன பாட்டு என்ன வரியென்று உங்களுக்கு ஞாபகமிருக்கா?

மகே: இது வலு சிம்பிள். "சோலைப் புஷ்பங்களே என் சோகம் சொல்லுங்களே..." எண்ட பாட்டில "மண்ணெண்ணைக்கும் தண்ணீருக்கும் கல்யாணமாம் சாமி..." எண்ட வரிதானே?

கா.பூ: அதெப்படி சொடக்குப் போட முன்னம் படக்கெண்டு சொல்லிட்டீங்க?

மகே: மண்ணெண்ணை பத்தின எல்லாமே எனக்கு அத்துப்படி.

கா.பூ: அதில எத்தின சுழி?

மகே: பதினெட்டுச் சுழி! எண்ணியே காட்டுறன். ம-வில ஒரு சுழி, ண்-ணில மேல இருக்கிற குத்தையும் சேத்து நாலு, . ணெ-யில நாலு, அடுத்த ண்- நாலு, ணை- ஐஞ்சு. மொத்தம் 18.

கா.பூ: ப்பூ! உமக்கு நல்ல முழி! வலு நுணுக்கமாத்தான் ஆராய்ஞ்சிருக்கிறீர். அதுசரி, மண்ணெண்ணைக்கும் தண்ணீருக்கும் கல்யாணமாம் சாமியெண்டுறாங்களே, மண்ணெண்ணையில, என்ன, தண்ணி கலக்குமா?

மகே: கலக்கும்.

கா.பூ: எப்பிடிக் கலக்கும்?

மகே: மண்ணெண்ணை வித்த காசில தண்ணியடிச்சால் கலக்குது, இது தெரியாது உமக்கு?

கா.பூ: ஓஹோ! அப்பிடியொரு வழியிருக்கா? சரி உமது வரிகளில் அந்தப் பாடலைப் பாடும் பாப்பம்!

மகே: சோலைக் குப்பைகளே...!
என் சோகம் அள்ளுங்களே...!
மண்ணெண்ணையை கடத்தினா லென்ன,
மண்ணள்ளித்தான் வித்தாலென்ன,
வன்னிக்காரர்... விட்டாலெல்லோ?
அமைச்சனெண்டு பேரிருக்குது -
உள்ளூரில் ஊழலென்று பேச்சிருக்குது.
மண்ணெண்ணைக்கும் மகேசனுக்கும்
சம்பந்தமாம் சாமி!
கண்ணிரண்டு காத்திருக்குது -
வன்னிக்குள் அண்டிவைக்க ஆளிருக்குது
சோலைக் குப்பைகளே!
என் சோகம் அள்ளுங்களே...!

கா.பூ: நல்லாத்தான் பாடினீர்கள் திருவாளர் மகேசன். ரெம்ப உணர்ச்சிவசப்பட்டுட்டீங்க.

மகே: எங்க, ஒருத்தரும் கைதட்டேல்லையே?

கா.பூ: உங்கட கெட்டித்தனங்களுக்கு நீங்களேதான் கை தட்டிக் கொள்ள வேணும். சரி, கைதட்டிக்கொண்டே சீற்றால இறங்கிப் போங்கோ.

அடுத்த போட்டியாளராக நாம் அழைப்பது எங்கள் கூட்டுக் கட்சித் தலைவர் சம்பந்தமில்லாதவரை. ஆம்! சம்பந்தமில்லாதவரவர்களே, நீங்கள் தேட வேண்டிய பாடல் இது தான்.

அதாவது, இப்ப பாருங்கோ, சில அரசியல்வாதிகள் இருக்கிறாங்கள், எல்லா இடத்துக்கயும் சுழியோடி தனக்கு வேண்டியதுகளை சாதிச்சு, வேண்டாதவையையும் அறுத்துப் போட்டு, எதிலயும் சம்பந்தமில்லாதமாதிரி இருந்து கொள்ளுவாங்கள். இதுவும் அப்பிடியொரு சம்பந்தமில்லாத கணக்காப் பாடுற பாடல்தான்.

சம்: சரி தம்பி, எதோட சம்பந்தமில்லாமல் எண்டு ஒரு குளூ குடும் பாப்பம்.

கா.பூ: அதாவது பாட்டில வீடு, ஊர், தாய், மனைவி, எவரோடயும் சம்பந்தம் விட்டுப் போன கணக்காயும், ஒன்றே ஒன்றிருந்தால் மட்டும் போதுமெண்ட மாதிரியும் பாடல் போகும். அந்த ஒன்று எதெண்டத மட்டும் சொல்ல மாட்டன். அத நீங்கள்தான் கண்டுபிடிச்சுப் பாட வேணும்.

சம்: எனக்குத் தெரிஞ்ச ஒன்று பார்லிமென்டு தான். வேற ஏதும் குளூ தாரும் பாப்பம்.

கா.பூ: ம்..! சரி. நீங்களெல்லாம் கடைசியில வந்து நிக்கப் போற இடத்தைச் சொல்லுப்படுது.

சம்: நான் நினைக்கிறன் நீர் கேட்ட பாட்டு தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு...

கா.பூ: சரியாப் பிடிச்சிட்டீங்கள். எப்பிடிப் பிடிச்சியள்?

சம்: நட்ட நடுவீதியிலதான் நாங்கள் கைவிடப் படுவமெண்டு இத்தனையும் தெரிஞ்ச எனக்குத் தெரியாதா என்ன?

கா.பூ: தெரிஞ்சுதான் வச்சிருக்கிறியள். சரி பாடுங்கோ.

சம்: தெய்வம் தந்த வீடு பார்லிமென்டிருக்கு,
இந்த ஊரென்ன, சொந்த நாடென்ன
ஞானப்பெண்ணே..., கட்சிக் கூட்டென்ன,
நீ போட்ட வோட்டென்ன...?
நான் கேட்டு எம்பி பதவி தந்தாரா...
இல்லை, எனைக்கேட்டு ஏதேனும் நடக்கிறதா?
கூட்டுக் கேது யாப்பு விதிகள் போடி
தங்கச்சீ..., கள்வர்க்கேது முள்ளில் வேலீ
இதுதான் என்கட்சி சொல்வதென்ன...,
கொடுப்பதென்ன..., இதில் நானென்ன..,
அண்ணர் அமிரென்ன ஞானப்பெண்ணே...
தியாகப் பொருளென்ன..? துரோகக் கதையென்ன...

கா.பூ: சபாஷ், சம்பந்தமில்லாதவர் அவர்களே, நேரடியாச் சொல்லாமல் பூடகமாப் பாடுற திறமையாலதான் தலைவரா இருக்கிறியள். அதால உங்களுக்கே எங்கள் வேட்டு... சீச்சீ...வோட்டு. போட்டியில் வெற்றி பெற்றவர் சம்பந்தமில்லாதவரே என்று அறிவித்து விடை பெறுகிறேன் நன்றி.

யாவும் கலப்படமற்ற கற்பனை

## இந்தவாரம் உங்கள் பலன்

15.12.2002 தொடங்கி 21.12.2002வரை

### சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

தனு - சூரியன், புதன், இடபம் - இராகு, மிதுனம் - சனி, கர்க்கடகம் - வியாழன், துலாம்-வெள்ளி, செவ்வாய். விருட்சிகம் - கேது. சந்திரன் மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) குடும்ப சுகம், கௌரவம், பெரியோர் மதிப்பு, வீண் செலவு, அன்னியர் சகவாசம் உண்டு. உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர் கல்வி உயர்ச்சி பெறும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் மத்திமமாகக் கிடைக்கும்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 5.

**இடபம்**

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மனமகிழ்ச்சி, காரியானுகூலம், வெளியிடப் பயணம், உயர்ந்தோர் நட்பு, இனசன நன்மை உண்டு. உத்தியோகத்தர் வீண் பிரயாசம். மாணவர் கல்வி மந்தம். கவலையளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல: 4.

**மிதுனம்**

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) காரியத் தடை, மனக்கவலை, புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை, உறவினர் பகை உண்டாகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்பு, மாணவர் கல்வி உயர்ச்சியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 3.

**கர்க்கடகம்**

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) துயர் நீங்கும். குடும்ப மகிழ்ச்சி, இனசன நன்மை, செலவு மிகுதி, கடன்படல், வைத்திய செலவு ஏற்படும். உத்தியோகத்தர் வீண் மனக்கவலையடைவர். மாணவர் கல்வியில் உயர்வு உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் விழிப்புடன் நடந்து கொள்ளவும்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 4.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) காரியத் தடை. இனசன விரோதம். செலவு மிகுதி. பிள்ளைகளால் கவலை உண்டு. உத்தியோகத்தில் கஷ்டம் மேலதிகாரிகள் தொல்லை. மாணவர் கல்வியில் மந்தம். முயற்சியின்மையுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 1.

**கன்னி**

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) கௌரவம். பெரியோர் உதவி. குடும்ப நன்மை. பணவரவு உண்டு. உத்தியோகத்தில் வீண் மனஸ்தாபம். தொழில் கேடு. மாணவர் கல்வி உயர்ச்சியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 2.

**துலாம்**

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் கஷ்டம். மறைமுக எதிர்ப்பு. கௌரவக் குறைவு. பண விரயம் உண்டாகும். உத்தியோகத்தில் கவனமுடன் செயற்படவும். மாணவர் கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 3.

**விருட்சிகம்**

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் விருத்தி. முயற்சிகள் மேன்மை. பெரியோர் உதவி. மனமகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் இருந்த தொல்லை மறையும். மாணவர் கல்வி சிறப்புறும். விவசாயிகள், வியாபாரிகள் நன்மை பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 7.

**தனு**

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) வீண் குறை கேட்டல், இனசன பகை. தொழில் மந்தம். அன்னியர் சகவாசம் உண்டு. உத்தியோகத்தர் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்கள் கல்வியில் மாற்றம். விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 2.

**மகரம்**

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) பயனற்ற செயல். செலவு மிகுதி. பெரியோர் பகை. தேகாரோக்கியம் குறைவு. உத்தியோகத்தர் கவலையுறுவர். மாணவர் கல்வி உயர்ச்சி. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 4.

**கும்பம்**

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) பெரியோர் உதவி. காரியானுகூலம். எதிர்ப்புக்கள் நீங்கும். முயற்சிகளில் வெற்றியுண்டு. உத்தியோகத்தில் உள்ளோர் விழிப்புடன் இருக்கவும். மாணவர்கள் உயர் கல்வி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 4.

**மீனம்**

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் நன்மை. காரியானுகூலம். மனமகிழச்சி. உயர்ந்தோர் நட்பு. புதிய முயற்சியுண்டு. உத்தியோகத்தர் மனக் கலக்கம். மாணவர் கல்வியில் ஊக்கமின்மையுண்டு விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 5.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேழை
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# தச்சுக் கலை

மரத் தளபாடங்களில் சிறப்பு வேலைப்பாடுகள் செய்வதென்பது தனியானதொரு கலை. நம் நாட்டிலும் இதற்குப் பெயர்போன கலைஞர்களும் புகழ் பெற்ற ஊர்களும் உண்டு. தமிழகத்தின் சென்னை நகரில் சமீபத்தில் நடைபெற்ற ஒரு கண்காட்சி ஏராளமானோரைக் கவர்ந்திழுக்கும் விதத்தில் அமைந்தது.

மரப் பலகையினால் தயாரிக்கப்பட்ட வீட்டுப் பாவனைப் பொருட்களில் அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நவீன முறையில் பெயின்ரிங் செய்யப்பட்டு மட்பாண்டங்கள் போன்று மரத் தளபாடங்களும் வர்ணக் கரைசல்களால் அழகுபடுத்தப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

படத்திலுள்ளது போன்ற வேலைப்பாடுகளைச் செய்து பார்க்க நமது கலைஞர்களும் முயற்சிக்கலாமே.


அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# வழிகாட்டும் கார்

தினம் ஒரு புதிய ரகத்திலான கார் சந்தைக்கு வந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிற்கும் ஜப்பானுக்குமிடையே கார் உற்பத்தியில் பல்லாண்டு காலமாகப் பலத்த போட்டி நிலவுகிறது.

ஜேர்மனி, சுவீடன் மற்றும் அமெரிக்க உற்பத்திகளுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாத, சில நேரங்களில் அவற்றை விடவும் அதிக வசதிகள் உள்ள கார்களை ஜப்பான் தயாரித்து வருகிறது.

செல்வந்தர்கள் தங்களுக்கான வாகனங்களைத் தெரிவு செய்யும் போது அதி நவீன தொழில்நுட்பங்களுடன் சொகுசு வசதிகளையும் எதிர்பார்க்கின்றனர். சந்தையில் போட்டி அதிகரித்துவிட்டதால் வாகன உற்பத்தியில் ஈடுபடும் ஒவ்வொரு நாடும் ஏதேனும் ஒரு புதிய அம்சத்துடன் தங்களது தயாரிப்புக்களைச் சந்தைக்கு விட முனைகின்றன.

ஜப்பான் புதிதாகத் தயாரித்திருக்கும் லெக்சஸ் ரக கார், சாரதியின் வேலையை வெகுவாகக் குறைக்கும் விதத்தில் அமைந்திருக்கிறது. காருக்குள் கம்பியூட்டரின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டிருக்கும் சில புரோகிராம்கள் மூலம் பயணம் ஒன்றை ஆரம்பிக்கும் போது சில தரவுகளை வழங்கினால் செல்ல வேண்டிய தூரம் வீதியின் பெயர் எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பவற்றை அறிந்து கொள்ள முடியும். இதிலுள்ள விசேட தன்மை என்னவெனில் கார் சென்று கொண்டிருக்கும் திசையில் கணிசமான தூரத்திற்கு அப்பால் உள்ள காலநிலை வாகன நெரிசல் உள்ள இடங்கள் என்பவற்றையும் இந்தக் கணனி காட்டிக் கொடுக்கும்.

இது செய்மதியின் உதவியுடன் இயங்குகிறது. யாருடைய உதவியும் தேவையில்லாமல் யாரிடமும் வழி கேட்காமல் போக வேண்டிய பயணத்தைத் தன்னந்தனியே போய் வர இந்த லெக்சஸ் காரிலுள்ள உபகரணம் உதவுகிறது. ■





## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



ஜதுர்ஷா 17.12.2002

வவுனியாவில் (அன்னை வீதி, தோணிக்கல்) வசிக்கும் சிங்கராஜா - கீதாஞ்சலா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜதுர்ஷா தனது முதலாவது பிறந்தநாளை 17.12.2002 செவ்வாய் அன்று தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். ஜதுர்ஷாவை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அம்மம்மா, பெரியம்மாமார், பெரியப்பா மற்றும் தாத்தாமார், பாட்டிமார், அன்ரிமார், மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வவுனியா ஆதி விநாயகர் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா, அம்மா.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி றொஷானி (Roshanee) 10.12.2002

குடத்தனை-வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு, திருமதி பவன்-வினோதினி தம்பதிகளின் செல்வப் புதல்வி றொஷானி தனது முதலாவது பிறந்தநாளை 26-12-2002 அன்று Zurich, Switzerland இல் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். றொஷானிக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: தொட்டப்பா சசிதரன், கனடா.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் நி. நிரோஜன்
18.12.2002

கொக்குவில் கிழக்கு நந்தாவிலைச் சேர்ந்த நித்திய குமாரன்-திருகோணமலை உவர்மலையைச் சேர்ந்த பிரபாலினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிரோஜன் தனது முதலாவது பிறந்தநாளை 18.12.2002 அன்று சுவிற்சர்லாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். நிரோஜனைக் குட்டியை அன்பு அப்பா-அம்மா, அண்ணா நிரோஷ், திருமலை அப்பம்மா, அப்பப்பா, பூட்டி, ஜெனிவா குமரன் சித்தப்பா, சித்தி, திருமலை செந்தில், பவன், சஜன் சித்தப்பாமார், புதல்வன் சகிலா அத்தை, மாமா, யாழில் வசிக்கும் பிரபா மாமா, மாமி, கிளிநொச்சி பாபு மாமா, மாமி மற்றும் திருமலை குலேந்திரன் அப்பப்பா குடும்பம், கதிர்காமப்பாலன் அப்பப்பா குடும்ப மச்சான்மார் அபி, அபிநயா, சித்தனா, தர்ஷனா, மச்சாள்மார் சந்திரா, கிரிஷாந்த், விஜய், அபிஷேக் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பா, ஏ. நித்தியகுமாரன், Bulach சுவிற்சர்லாந்து.



இப்பத்திரிகை கொழும்பு-06; வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச. 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.